வெளியீடு: 12-03-2004 Issued: 12-03-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 30, 2003 – தொகுதி 46 – எண் 2

**Wednesday the 30th April, 2003 – Volume 46 – No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

've Assembly Secretariat, Fort St. George,

Chennai - 600 009

[Price Rs. 3.00

30-4-2003

## உள்ளடக்கம்

பக்கங்கள்


1. **வினாக்கள்-விடைகள்—**

உடுக்குறியிட்ட வினாக்கள் 365-400

2. **தகவல் கோரல்—**

உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு 400,406,

3. **உரிமை மீறல் பிரச்சினை—**

'இந்து' நாளிதழ் மீதும், 'முரசொலி' நாளிதழ் மீதும் 400-406

4. **சிறப்புக் கவன ஈர்ப்பு—**

'சார்ஸ்' நோய் பரவியுள்ள செய்தி மற்றும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் 406-425

5. **கவன ஈர்ப்பு—**

(அ) விளவங்கோடு வட்டம், மீனவ கிராமங்களில் கடல் அரிப்பு, தடைக்கற்கள் இடைவெளி விட்டுப் போடுவதால் ஏற்பட்டுள்ள நிலை 425-429

(ஆ) செஞ்சி, வனப் பகுதிகளில் வனத் துறை நடும் மரக்கன்றுகளால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு 429-433

6. **அறிக்கைகள் அளித்தல்—**

(அ) மதிப்பீட்டுக் குழு 433-434

(ஆ) பொதுக் கணக்குக் குழு 434

(இ) பொது நிறுவனங்கள் குழு 434-435

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு 435

(உ) மனுக்கள் குழு 435

(ஊ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு 435

பக்கங்கள்

7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—
வக்ஃபு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 436

8. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி
கோரிக்கை எண் 10 — வணிக வரித் துறை-வணிக வரிகள் — 437-495
*மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 437-445,446 448,449,457 468,469 473-474 475,477 479-491
திரு. எஸ். தாமோதரன் — 446-448,449 450-451
திரு. கு. அண்ணாமலை — 453-456
திரு. எஸ். நடராஜன் — 456-459
*திரு. செ. வெங்கடாஜலம் — 460-466
திரு. என். நன்மாறன் — 466-470
திரு. சோ. இராசேந்திரன் — 470-474
திரு. கே.என். இலட்சுமணன் — 474-479

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 496-500

185073

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 17, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034**

**2003 ஏப்ரல் 30, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"

தீய வழியை மேற்கொண்டு திரட்டப்படாத செல்வம்தான் ஒருவருக்கு அறநெறியை எடுத்துக்காட்டி அவருக்கு இன்பத்தையும் தரும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 361, டாக்டர் பி. வள்ளல் பெருமான், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

**361—**

### பாலம் கட்டுதல்

***7460—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களை இணைக்க காட்டுமன்னார்கோயில் அருகில் பாலம் கட்டித் தர அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

[2003 ஏப்ரல் 30

(ஆ) ஆம் எனில், எவ்வளவு திட்ட மதிப்பீட்டில், எப்போது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் பி. வள்ளல் பெருமான், இருக்கையில் இல்லை. திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது பாலங்கள் அமைக்கும் பணி செயற்குறிப்பில் இல்லையென்று கூறுகிறார்கள். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி சாலையில் N.H.—லே உள்ள கொட்டாம்பட்டி அருகே மெயின் ரோட்டிலே உள்ள பாலங்கள் இந்த நடப்பாண்டில் புதிய பாலங்களாகக் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி வினா எழுப்பினால், தக்க விடை தரப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 362, திரு. இ.ஏ. லியாவுதீன் சேட், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**362—**

**விளையாட்டுத் திடல்**

***30420—திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 ஏப்ரல் 30]

(அ) அரவக்குறிச்சி தொகுதி, பள்ளபட்டி பேரூராட்சியில் இளைஞர்களுக்காக பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்? திட்ட மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரவக்குறிச்சி தொகுதி, பள்ளபட்டி பேரூராட்சியில் இளைஞர்களுக்காக பல்நோக்கு விளையாட்டுத் திடல் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனவே, இவ்வினா எழவில்லை.

**திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுபான்மை மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் மரியாதைக்குரிய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின், முதலிடம் நோக்கிச் செல்கின்ற சீரிய ஆட்சியில், எனது அரவக்குறிச்சி தொகுதியில், பள்ளபட்டி தேர்வு நிலைப் பேரூராட்சியில்--சுமார் 40 ஆயிரம் சிறுபான்மை சமுதாய வியாபாரப் பெருங்குடி மக்கள் நிறைந்த ஊர். அங்கே எந்தவொரு விளையாட்டுத் திடலும் இல்லை. எங்கும் கணினிமயமான இக்காலகட்டத்தில் இளைஞர்களிடம் பல்வேறு தவறான சிந்தனைகள் வளராமல் அவர்களை நல்வழிப்படுத்துவதற்கும், அதேபோல, விளையாடுவதன் மூலம் நல்ல உடற்பயிற்சி ஏற்பட்டு ஆரோக்கியமாக நோயின்றி வாழ்வதற்கும், பிற ப லங்களுடன் விளையாட்டுத் துறையில் போட்டியிட்டு வெற்றியா கனை உருவாக்கிடவும், இந்தியாவிலேயே சிறந்த ஸ்டேடியமான நேரு டேடியத்தை உருவாக்கித் தந்த மாண்புமிகு அம்மாவின் அரசு, பள்ளப டியில்--இள ஞர்களுக்கான பல்நோக்கு விளையாட்டுத் திடலை, மறுபரிசீலனை செய்து அமைத்துத் தர முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலிருந்து தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாவட்ட விளையாட்டு வளாகம், மாவட்ட அளவிலே மாவட்டத் தலைநகரிலே ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், இதுவரை 17 மாவட்டங்களில் அதுபோன்ற

மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு தேனி மாவட்டம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைப்பதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அரசு உத்தரவிட்டிருக்கிறது. எனவே, படிப்படியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட விளையாட்டு வளாகம்தான் அமைப்பதற்கு, பள்ளப்பட்டி பேரூராட்சியிலே சாத்தியமில்லை என்று சொன்னேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளுக்கேற்ப, பள்ளப்பட்டி பேரூராட்சியில் உடற்பயிற்சி மையங்கள் ஆரம்பிப்பதற்கு எந்தவிதத் தடையும் இல்லை. அந்தப் பகுதியிலே இருக்கின்ற, அந்தப் பேரூராட்சியிலே இருக்கின்ற இளைஞர்கள் எந்த விளையாட்டை விரும்புகிறார்களோ, அந்த விளையாட்டிற்குரிய மையங்களை அமைத்து, அதற்குரிய அந்த விளையாட்டு உபகரணங்களை அரசு நிச்சயமாக வாங்கிக் கொடுக்கும். ஒன்று கவனிக்க வேண்டியது என்னவென்று சொன்னால், இதிலே பொது மக்களுடைய பங்கேற்பும் இருக்க வேண்டும். எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், பொது மக்களுடைய பங்கேற்பாக நீங்கள் ஒரு பங்குத் தொகையைப் பொது மக்கள் சார்பிலே செலுத்துவீர்களேயானால், அதற்கு ஈடாக—ஈடாக மட்டுமல்ல—அதற்கு இரண்டு பங்கு அரசாங்கம் நிதி ஒதுக்கம் செய்து, நீங்கள் விரும்புகிற அளவிலே உடற்பயிற்சி மையங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும். அந்த வகையிலே நான் எங்களுடைய துறையினுடைய இயக்குநரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, அந்தப் பேரூராட்சிக்கென்று 2 உடற்பயிற்சி மையங்களை அமைப்பதற்கு வழிவகை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு உடற்பயிற்சி மையங்கள் 2, உங்களுடைய பேரூராட்சிக்கு ஆரம்பித்துக் கொடுக்கப்படும். ஏற்கெனவே நான் உங்களிடம் வேண்டுகோள் இட்டபடி, பொது மக்களுடைய பங்கேற்புக்கும் கொஞ்சம் நீங்கள் ஏற்பாடு செய்து தர வேண்டும்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. லியாவுதீன் சேட்.

**திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடற்பயிற்சி மையங்கள் அமைப்பதாக அறிவித்ததற்கு எனது மனமார்ந்த நன்றியைத்





தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளப்பட்டி சுற்று வட்டாரத்தில் எங்கேயும் இதுபோன்ற விளையாட்டுத் திடல்கள் இல்லை. மேலும், பள்ளப்பட்டியில், Pallapatti People's Federation, Friends Federation, ஹாஜி ஹபீப் நினைவு மன்றம், முன்னாள் மாணவர் மன்றம் என இதுபோன்ற பல பொது நல அமைப்புகள் இருக்கின்றன. அவர்கள் மூலமாக விளையாட்டுத் திடலுக்கான இடத்திற்கு நான் ஆவன செய்து தருகின்றேன். விளையாட்டுக்கான உபகரணங்களும், பயிற்சியாளர்களும், மேலும் தேவையானவற்றையும் தர மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு ஆவன செய்து தர வேண்டுமென அன்போடு கேட்டு, இவ்வாண்டிலேயே அமைத்துத் தருவதாகச் சொன்னதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், முதல்வர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி விளையாட்டை மேம்படுத்துவதற்கு, இளைஞர்களை விளையாட்டிலே அதிகமாக ஈடுபடுத்துவதற்கு உடற்பயிற்சி மையங்களை அமைப்பதற்கு இடம் ஏற்பாடு செய்து தருவதாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல, பொதுத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடமிருந்து நிதியுதவியும் பெற்றுத் தருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். எனவே, அவர்கள் விரும்புகிறபடி, அங்கே 2 உடற்பயிற்சி மையங்களை ஆரம்பிப்பதற்கு அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். அதைப்போல், அவர் சார்ந்து இருக்கிற மாவட்டமான கரூர் மாவட்டத்திலே, எதிர்காலத்திலே ஒரு மாவட்ட விளையாட்டு வளாகம், கிட்டத்தட்ட 1 கோடி ரூபாய் அளவிலே அமைப்பதற்கு அரசு திட்டமிட்டிருக்கிறது. அதுவும் விரைவிலே அங்கே அமைத்துக் கொடுக்கப்பட்டுவிடும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட மையங்களில் விளையாட்டு வளாகம் ஏற்படுத்துகின்றபோது, தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி வருகின்ற—3,4 கிலோ மீட்டர் பக்கத்தில் வருகின்ற அடிப்படையிலே வருமேயானால்தான் எதிர்காலத்திலே அதனுடைய விளைவுகள் நமக்குச் சாதகமாக இருக்கும். ஆனால், அந்த தேசிய நெடுஞ்சாலையையும் விட்டு, அதற்கப்புறம் கிராமச் சாலையிலிருந்தும் எங்கேயாவது ஒரு

பகுதியில் போடுவதானால் அது பெரிய அளவுக்கு வளருவதற்கு வாய்ப்பு இல்லாத ஒரு நிலை இருக்கிறது. குறிப்பாக, குமரி மாவட்டத்தினுடைய நிலை அதுதான். இன்னும்கூட இடம் தேர்வு செய்யப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆக, guideline கொடுக்கின்றபோது, கிட்டத்தட்ட நம்முடைய தேசிய நெடுஞ்சாலையினுடைய 2 பகுதிகளிலே வரக்கூடிய 6, 7 கிலோ மீட்டருக்குள்ளே இடத்தைக் கண்டுபிடித்து, அப்படிச் செய்வதுதான் உதவிகரமாக இருக்கும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அந்த மாவட்டங்களிலேயே ஏற்கெனவே இருக்கின்ற விளையாட்டு மையங்கள் என்று--பள்ளிகளிலே பல விளையாட்டு மையங்கள் இருக்கின்றன--ஆரம்பித்து ஒரு ஆண்டையும் தாண்டிவிட்டது. இன்னும் பூர்த்தியாகவில்லை. அந்த அடிப்படையில் இந்தத் துறை கொஞ்சம் கூடுதலாகக் கவனம் செலுத்த வேண்டும். அதுபோன்று இந்த விளையாட்டுத் துறையை வைத்திருக்கின்ற நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் நான் ஒரு மனுவைத் தந்திருக்கின்றேன். அதிலே குறிப்பிட்டுள்ளபடி விளவங்கோடு பள்ளியில் இருக்கின்ற மாணவிகள் Table Tennis-லே வெற்றி கண்டிருக்கிறார்கள். அவர்களுக்குரிய வாய்ப்புக் கிடைக்காத ஒரு நிலை இருக்கின்றது, அது தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கின்றபோது, நல்ல இடமாக, அந்த மாவட்டத்திற்கே ஒரு மையப் பகுதியாக, மாவட்டத் தலைநகரத்திலே நல்ல வாய்ப்புள்ள பகுதியாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய திட்டம். மாண்புமிகு உறுப்பினர்கள் அதுபோன்ற இடங்களைத் தேர்வு செய்கின்றபோது ஒத்துழைப்புக் கொடுத்தால் அரசு அதன்படி நிச்சயமாக அந்த இடத்தைத் தேர்வு செய்யும். இந்த மாவட்ட விளையாட்டு வளாகத்தைப் பொறுத்த அளவிலே, மத்திய அரசும் நமக்கு நிறைய உதவி செய்கிறது.

இப்படிப்பட்ட மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்கின்றபோது 1 கோடி ரூபாயிலே அமைப்பதற்கு மைய அரசு நமக்கு உத்தரவிட்டிருக்கிறது. அவர்கள் அதிலே 50 சதவிகிதம் நிதியை



முழுமையாக நமக்கு Grant—ஆகவே கொடுத்து விடுகிறார்கள். நம்முடைய தமிழக அரசு 25 விழுக்காடு நிதியொதுக்கினால் போதும். மேலும், பொது மக்களுடைய பங்கேற்பு 25 விழுக்காடு இருந்தால், 1 கோடி ரூபாயிலே அந்த மையத்தை ஆரம்பிக்கலாம். அந்த வகையிலே குமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் நல்ல இடமாகத் தேர்வு செய்து, நம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல் அந்த விளையாட்டு வளாகம் நல்ல முறையில் அமைத்துத் தரப்படும். அதைப்போல மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மணி அவர்கள், அந்தப் பள்ளியிலே டென்னிஸ் விளையாட்டிலே பெண்கள் ஆர்வமாக இருக்கிறார்கள்; அந்தப் பள்ளியிலே அப்படிப்பட்ட ஒரு பயிற்சி பெறுவதற்கு அங்கே ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே விருதுநகரில் 'ஹாக்கி அகடாமி' ஒரு பள்ளியிலே ஆரம்பித்திருக்கிறோம். அதேபோல், திண்டுக்கல்லிலே 'வாலிபால் அகடாமி' ஆரம்பித்துக் கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், அங்கே குமரி மாவட்டத்திலே, நீங்கள் சொல்கிற பள்ளியிலே 'டென்னிஸ் அகடாமி' கூட ஆரம்பிப்பதற்கு நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். நான் உங்களுடைய மாவட்டத்திற்கு வருகிறபோது அதை நினைவுபடுத்தினால், அதையும் நாங்கள் ஏற்படுத்தி, செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்நோக்கு விளையாட்டு மாவட்ட மையங்கள் அமைப்பது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். அதிலே பொது மக்களுடைய பங்கும் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த வகையிலே திருவாரூர் மாவட்டத்திலே அரசாங்கம் அதற்கான இடங்களையும் ஒதுக்கித் தந்து, அநேகமாக சட்டப் பேரவை உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் தலைமையிலேகூட, அப்போது இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், 20 இலட்சம் ரூபாய்க்கு மேலே நாங்கள் எங்களுடைய பங்குத் தொகையைச் செலுத்தியிருக்கிறோம். அது பற்றி சரியாகக் கணக்குத் தெரியவில்லை. என்றாலும், 25 இலட்சம் ரூபாய்க்கு மேலே தாண்டியிருக்கும் என்று நான் கருதுகிறேன். அதுபோன்ற இடங்களில் உடனடியாகத் தொடங்கப்படுமா?

[2003 ஏப்ரல் 30

அதுபோன்று, தாலுகாத் தலைநகரங்களிலே நடக்கக்கூடிய பளு தூக்கும் போட்டிகளுக்கு சட்டப் பேரவை உறுப்பினர்களுடைய நிதியிலிருந்துகூட ஒதுக்கி, அதை அனுமதிக்க முடியாமல், அதை அரசு மறுத்து வருகிறது. ரூபாய் ஆயிரத்துக்கு மேலே ஒதுக்கக்கூடாது என்று பதில் வருகிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு--இளைஞர்கள், நல்ல உடல் திடகாத்திரத்துடன், திடமாக இருந்து பல்வேறு சிந்தனைகளுக்கு அந்த இளைஞர்கள் போகாமல் இருக்க, இதுபோன்ற விளையாட்டு மையங்களுக்கு வந்து பயிற்சியினைப் பெறுவதற்காக உரிய முறையில், குறைந்தபட்சம் 50,000 ரூபாய்க்கான உபகரணங்கள் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இளைஞர்கள், அந்த வாலிப வயதில் தங்களுடைய சிந்தனைகளை வேறு பக்கம் திருப்பி விடக்கூடாது என்பதற்காகத்தான், அந்த இளைஞர்களை இதுபோன்ற விளையாட்டுகளிலே ஆர்வத்துடன் ஈடுபடச் செய்து, அவர்களுடைய மனம் திசை மாறாதவாறு பார்த்துக் கொள்வதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு விளையாட்டுகளை மாவட்டந்தோறும் ஊக்குவித்து வருகிறது.

நான் ஏற்கெனவே சொன்னதைப்போல், மொத்தம் 17 மாவட்டங்களில் இப்படிப்பட்ட மாவட்ட விளையாட்டு வளாகங்களை ஏற்கெனவே நாம் அமைத்துவிட்டோம். இந்த ஆண்டு தேனி, திருவண்ணாமலை மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் ஜி. பழனிசாமி அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப்போல், திருவாரூர் மாவட்டத்திற்கு பொது மக்களுடைய பங்கேற்பாக நிறையத் தொகையை அவர்கள் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலே, நிச்சயமாக அடுத்த ஆண்டு திருவாரூர் மாவட்டத்திற்கு மாவட்ட விளையாட்டு வளாகம் அமைத்துக் கொடுப்பதற்கு இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

அதுபோல வட்டார அளவிலே--தாலுகா அளவிலே, அதுபோன்ற மையங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால், மாவட்ட விளையாட்டு வளாகம் என்ற அளவிற்கு அது பெரியதாக இருக்காது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, உடற்பயிற்சி மையங்களை ஆங்காங்கு ஆரம்பிக்கலாம். ஆனால், அந்த விளையாட்டு, உடற்பயிற்சி மையங்களை ஆரம்பிப்பதற்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் நிதி



2003 ஏப்ரல் 30]

தேவையில்லை என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், வேறு அத்தியாவசியப் பணிகளுக்கு நம்முடைய நிதி தேவைப்படுவதாலே, இந்தத் தொகையை அதற்கு ஒதுக்க வேண்டியதில்லை. காரணம், பொது மக்களுடைய பங்கேற்பை நாம் அதிலே ஈடுபடுத்திக் கொள்வதனாலே, பொது மக்களுடைய பங்கேற்பாக நிதியை நீங்கள் வாங்கிக் கொடுத்தால், அப்படிப்பட்ட இடங்களில், தாலுகா அளவிலே மட்டுமல்லாமல், பேரூராட்சி அளவிலேகூட இதுபோன்ற உடற்பயிற்சி மையங்களை ஆரம்பித்துக் கொடுப்பதற்கு நிச்சயமாக நாங்கள் தயார் செய்கிறோம். நீங்கள் பொது மக்கள் பங்கேற்பாக பாதித் தொகையைக் கொடுத்தால், அந்தத் தொகைக்கு ஈடாக அரசாங்கம் பாதித் தொகையை நிச்சயமாகக் கொடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமான பதிலைச் சொல்லிவிட்டார்கள்.

அடுத்த வினா எண் 363, திரு. வி. ஜெயராமன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**363—**

## சத்துணவு மையக் கட்டடங்கள்

**•9176—திரு. வி.ஜெயராமன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்துணவு மையக் கட்டடங்களின் பழுதுகளை நீக்கித் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட மையங்களைப் பழுதுபார்ப்பதற்கு ஒவ்வொரு நிதியாண்டும், இதற்கென்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், ஊட்டச்சத்துத் திட்டத்தின்கீழ்,

மொத்தம் 9,180 மையங்கள் பழுதடைந்து இருக்கின்றன என்று கண்டறியப்பட்டு, அவற்றில் 2,468 மையங்களில் பழுது நீக்கம் செய்யப்பட்டு, எஞ்சிய மையங்களில் பழுது நீக்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலாவதாக, இந்த இருக்கையிலே தாங்கள் அமர்ந்திருக்கும்போது, முதல் முறையாக இந்தக் கூட்டத் தொடரில் என்னுடைய கன்னிக் கேள்வியைக் கேட்பதற்கு அனுமதி அளித்தமைக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினை உங்களுக்கு உரித்தாக்கி, தங்கள் வாயிலாகக் கீழ்க்கண்ட வினாவினைத் தொடுக்க விரும்புகிறேன்:

தமிழகத்திலே மொத்தம் எத்தனை சத்துணவுக் கூடங்கள் இயங்கி வருகின்றன? அந்த சத்துணவுக் கூடங்களிலே எத்தனை பணியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்? அப்படிப் பணியாற்றி வருகிற சத்துணவுக் கூடங்கள் மூலமாக எத்தனை குழந்தைகள் பயன்பெறுகிறார்கள்? அந்த சத்துணவுக் கூடங்களைப் பழுதுபார்ப்பதற்கு ஒருங்கிணைந்த திட்டம் ஏதேனும் அரசினுடைய பரிசீலனையில், இந்த ஆண்டே செயல்படுத்துவதற்கு உண்டா என்கிற ஒட்டுமொத்தக் கேள்விகளையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள மொத்த சத்துணவு மையங்களின் எண்ணிக்கை—71,57 சத்துணவு உட்கொள்ளும் மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை—2 இலட்சத்து 77 ஆயிரத்து 36. மொத்த மையங்களில் பணியாற்றுவோர் எண்ணிக்கை—2 இலட்சத்து 26 ஆயிரம். இந்த சத்துணவுத் திட்டத்திற்காக இதுவரை, கடந்த 5 ஆண்டு காலங்களில் அந்த சத்துணவுக் கூடங்கள் கவனிப்பாரற்றுக் கிடந்ததை 2001-2002 ஆம் ஆண்டிற்கு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 25.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிட்டு, அதன் அடிப்படையிலே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன்.





**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சத்துணவுக் கூடங்களைப் பழுதுபாாப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருப்பதாக இங்கே பதில் சொன்னார்கள். ஆனால், அனுபவத்திலே என்ன பார்க்கிறோம் என்றால், குறிப்பாக, என்னுடைய தொகுதியிலேகூட நான் பார்த்திருக்கிறேன். பல சத்துணவு மையங்களைப் பொறுத்த அளவிலே, பழுதுபார்க்கப்பட்டு இருக்கிறது. அங்கே பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்திலே கேட்டால், அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், போதுமான நிதி இல்லை என்று. இன்னொரு பக்கத்திலே பள்ளிக்கூடங்களிலேயும் இந்த மாதிரி சத்துணவு மையங்கள் இருக்கின்றன. அந்த மையங்களையும் பள்ளிக்கூடங்களிலே உள்ள பெற்றோர்-ஆசிரியர் கழக நிதியில் இருந்து ஏதாவது பணம் கொடுத்தால்தான் பழுதுபார்க்க முடியும். அதற்குப் பல இடங்களில் நிதி இல்லை. ஆகவே, அவற்றைப் பழுதுபார்க்க முடியவில்லை என்ற நிலையிலே விஷயங்கள் இருந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே, பள்ளிக்கூடங்களிலேயும், பஞ்சாயத்து யூனியன்களிலேயும் இருக்கிற இந்த சத்துணவு மையங்களைப் பழுதுபார்ப்பதற்கு—பல இடங்களிலே மழைக்காலங்களிலே அரிசிகூட அங்கே வேச வைக்கமுடியாத நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்றுவதற்கு— உடனடியாக அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களைப் பழுதுபார்க்கின்ற பணியைப் பல்வேறு துறைகளுக்குப் பிரித்துத் தந்து, அதன்மூலம் மேற்கொள்ள வேண்டும் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. ஊரக வளர்ச்சி இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர், குடிசை மாற்று வாரியத்தினுடைய நிர்வாகம், இந்த மூன்று நிர்வாகங்களின்கீழேதான் சத்துணவு மையங்கள் இப்போது செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. நகராட்சி நிர்வாகமும், ஊரக வளர்ச்சி-இயக்குநரகமும், அவர்களின்கீழே கட்டுப்பட்டுச் செயல்படக்கூடிய சத்துணவு மையங்களிலே இருக்கிற குறைபாடுகளைக் கண்டறிந்து அரசுக்குப் பரிந்துரை செய்து இருக்கின்ற அடிப்படையிலேதான் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியிலே ஏதாவது குறைபாடுகள் இருப்பதாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, ஏறத்தாழ 71 ஆயிரம் சத்துணவு மையங்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இவை அனைத்திற்கும் அரசு சார்பிலே கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கின்றனவா? அப்படி இல்லையென்றால் எத்தனை சத்துணவுக் கூடங்கள் அரசுக் கட்டடங்களிலே இயங்குகின்றன? எத்தனை இன்னும் கட்டப்படாமல் இருக்கின்றன என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்து மையங்களுமே அரசினுடைய கட்டுப்பாட்டிலே இயங்குகிற கட்டடங்களிலேதான் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன. அங்கன்வாடி மையங்களைக்கூட தனியாகக் கட்டித் தருவதற்கு உலக வங்கியின் மூலம் நிதியுதவி பெற்று அந்தப் பணிகளும் அந்தந்தப் பகுதிகளிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் மூலம் கட்டப்படக்கூடிய, பழுது நீக்கப் பணிகளை அங்கன்வாடிப் பணியாளர்கள், சத்துணவு அமைப்பாளர்கள், பெற்றோர்—ஆசிரியர் கழகத்திலே இடம் பெற்று இருப்பவர்கள், பொது மக்களைப் பங்கேற்கச் செய்து, அதன் மூலம் அவர்களாகவே, காலதாமதம் ஏற்படக்கூடாது என்பதற்காகச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களைச் சமைக்கின்ற சமையல் கூடங்கள் பெரும்பாலான இடங்களில் மரத்தடியிலேயும், வெட்ட வெளியிலேயுமாக இருந்து, அங்கு உணவு சமைக்கப்படுகின்றது. ஆகவே, அங்கே சமையல் கூடங்களை அமைத்துத் தருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமையல் கூடம் என்று ஒன்று கட்டித்





தரப்பட்டிருக்கிறது. சில இடங்களிலே பழுது நீக்கம் செய்யவேண்டி இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் வெளியிலே வந்து சமைத்துக் கொண்டிருப்பதாகப் பல்வேறு சந்தர்ப்பங்களிலே தெரிவித்து இருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அந்த சத்துணவு சமையல் கூடத்தையும் சரி செய்வதற்காகத்தான், இதுபோன்ற நிதி ஒதுக்கீடு செய்து, அதையும் சரி செய்து தரவேண்டுமென்று நாங்கள் சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு இங்கேயிருந்து தாக்கீது அனுப்பியிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடங்களில் பழுது நீக்கம் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, 9 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சத்துணவுக் கூடங்கள் பழுது நீக்கம் செய்யப்படாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். அப்படியென்றால், பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயிலுகிற அந்த நிலையிலே, பழுதுபட்ட நிலை இருந்தால் அதைக் கவலைக்குரிய ஒன்றாக நான் கருதுகிறேன். ஆகவே, சத்துணவுத் துறைக்கு என்று ஏகப்பட்ட நிதிகளை ஒதுக்கி, அதைக் கண்காணித்து வருவது பாராட்டுக்குரிய ஒன்று, அதே அடிப்படையில், அடிப்படைக் கட்டமைப்பு வசதி என்ற முறையில், சத்துணவுக் கூடங்களைப் பழுது நீக்கம் செய்வதற்கான வகையில் மாநில அளவிலேயே கூடுதல் நிதி ஒதுக்குவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, பல்வேறு இடங்களில் இதுபோன்ற குறைபாடுகள் இருப்பது பற்றி வரும் நிதியாண்டிலே கண்டறியப்பட்டு, ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 1991-96 ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இதுபோன்ற சத்துணவுக் கூடங்களை, தொழில் முனைவோரிடத்திலேயும், அதைப்போலத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களிடத்திலேயும் தத்துக் கொடுத்து அவற்றைச் சீராக்கிக்

[2003 ஏப்ரல் 30

கொண்டிருந்தார்கள். அதைப்போல, இப்போது ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக்கின்ற இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களையும், தொழில் முனைவோரையும் அழைத்து, இதுபோன்ற பழுதடைந்த சத்துணவுக் கூடங்களைக் கொடுத்து சரி செய்யப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அரசின் திட்டமாகவே செயல்படுத்த வேண்டுமென்று கொண்டு வரப்பட்டது இந்தத் திட்டம். அதற்குப் பிறகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, 659 கோடி ரூபாயை இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்து, மிகச் சிறப்பான பணியை இன்றைக்குச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது குழந்தைகள் சம்பந்தப்பட்ட, சத்துணவு சாப்பிடுகின்ற பிரச்சினை என்கிற காரணத்தால், பழுது நீக்கக்கூடிய பணியை ஆங்காங்கே இருக்கக்கூடிய ஊராட்சி மன்றத் தலைவர்களோ அல்லது பெற்றோர்--ஆசிரியர் கழகத்தைச் சேர்ந்தவர்களோ முன்வந்து செய்ய வேண்டுமே தவிர, அரசாங்கம் அவர்களைத் தனியாக வற்புறுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 364, திரு. ஏ.எஸ். கண்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**364—**

### பேருந்துகள் இயக்குதல்

***9747—திரு. ஏ.எஸ். கண்ணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் முதல் தத்தைமஞ்சி வரை புதியதாக இரண்டு பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 ஏப்ரல் 30]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை-பழவேற்காடு (வழி) மீஞ்சூர், தத்தைமஞ்சி, காட்டூர் பிரதான வழித்தடத்தில், காஞ்சிபுரம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மூலம், பொது மக்களின் தேவைக்கேற்ப ஏற்கெனவே போதுமான பேருந்து வசதி உள்ளதால், 'மீஞ்சூர்-தத்தைமஞ்சி' எனக் கூடுதலாகப் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியத்தைச் சார்ந்த பொது மக்கள் நீண்ட நாட்களாக காரனோடை பஸ் நிறுத்துமிடத்திலிருந்து ஜனசத்திரம் கூட்டு ரோடு வரை தடம் எண் 114-ஏ, 57எஃப்-ஐ நீட்டித்தர வேண்டுமென்று கோரி வந்தார்கள். மேற்காணும் கோரிக்கையை ஏற்று, இரண்டு பஸ் தடங்களையும் ஜனசத்திரம் கூட்டு ரோடு வரை கடந்த வாரம் நீட்டித்துத் தந்தமைக்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், பகுதி மக்கள் சார்பாகவும், நான் சார்ந்திருக்கிற கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல, துணைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் பஸ் நிலையத்திலிருந்து தத்தைமஞ்சி வரை, தடம் எண் 27, ஒரே பஸ் ஒரு நாளைக்கு காலை, மதியம், மாலை ஆகிய மூன்று வேளைகள் இயக்கப்படுகின்றது. ஆனால் மீஞ்சூர்-தத்தைமஞ்சி தடங்களின் இடைப்பட்ட பகுதிகளில் நெய்தவாயில், வாயிலூர், திருவல்லிவாயில், தாத்தூர் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களான, திருபழவேற்காடு, கடப்பாக்கம், ரெட்டிப்பாளையம், குமாரஞ்சேரி, அபிராமமடம் போன்ற பகுதிகள் உள்ளன. மேற்காணும் பகுதிகளில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். நெருக்கடி நிறைந்த நேரங்களில் காலை, மாலைகளில் பள்ளி மாணவர்கள், தொழிலாளர்கள், அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் ஆயிரக்கணக்கில் பயணம் செய்கிறார்கள். தேவையான பஸ் தடங்கள் இல்லாததால் தனியார் பஸ், மேக்சி வேன், லாரி போன்றவற்றில் பயணம் செய்கிறார்கள். அதனால் அடிக்கடி விபத்துகள் ஆகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இல்லையென்ற பதிலை மறுபரிசீலனை செய்து, மேற்காணும் நிலையைப் போக்க, பகுதி மக்கள் கோரிக்கையை

ஏற்று மீஞ்சூர் பஸ் நிலையத்திலிருந்து தத்தைமஞ்சி வரையிலும், இரண்டு பேருந்துகள் இல்லையென்றாலும், ஒரு பேருந்தையாவது இயக்குவதற்கான நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீஞ்சூர்-தத்தைமஞ்சி தடம், சென்னை-பழவேற்காடு (வழி) மீஞ்சூர், தத்தைமஞ்சி, காட்டூர் பிரதான வழித் தடத்தில் அமைந்துள்ளது. இத்தடத்தின் நீளம் 14 கிலோ மீட்டர் ஆகும்.

இத்தடத்தின் வழியாக காஞ்சிபுரம் அரசுப் போக்குவரத்து கழகப் புறநகர்ப் பேருந்து மட்டும் 30 நடைகளும், நகரப் பேருந்துகள் மூலமாக 24 நடைகளும் தினசரி இயக்கப்படுகின்றன. இந்த வழித்தடத்தில் தற்போதுள்ள போக்குவரத்து அடர்வைக் கணக்கிட்டுப் பார்த்தால் மிகக் குறைவாக இருக்கிறது. இப்போது இருக்கின்ற இந்தப் பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னும் அந்தப் பகுதியிலே மக்களுடைய தேவைக்கு ஏற்ப, கூடுதலாகப் பேருந்துகள் இயக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அவருடைய கோரிக்கையை அரசு பரிவுடன் சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு இரா. வில்வநாதன்.

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, கிராமப்புறங்களிலே சென்று வந்த பேருந்துகள் பல்வேறு காரணங்களைக் காட்டி, தனியார் மினி பஸ்களை விடவேண்டுமென்ற காரணத்திற்காகவும், அந்த வழித் தடங்களில் போதிய வசூல் இல்லையென்ற காரணத்திற்காகவும், சாலைகள் சரியாக இல்லையென்ற காரணத்தைக் காட்டியும், நிறுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு நிறுத்தப்பட்டுள்ள பேருந்துகளை கிராம மக்கள் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்த வழித்தடங்களிலே இயக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே ஏறத்தாழ ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழித்தடங்களில் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றில் பொது மக்களுடைய தேவையைக் கருதி, தேவைக்கு ஏற்ப, கோரிக்கைக்கு ஏற்ப, எந்தெந்த இடங்களிலே இயக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ, அந்தந்த இடங்களிலெல்லாம்-- மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, படிப்படியாக அதையெல்லாம், அந்த வழித்தடங்களில் எல்லாம் பேருந்துகளை விடுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 365, திரு. இரா.தா. இன்பத் தமிழன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**365—**

## பேருந்துகளில் அரசுச் சின்னம்

***12793—திரு. இரா. தா. இன்பத் தமிழன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசின் கோபுரச் சின்னத்தை அரசுப் பேருந்துகளில் பொறிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

கோபுரச் சின்னம், அரசுப் பேருந்துகளில் பொறிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா.தா. இன்பத் தமிழன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேரள அரசு சின்னமான இரட்டை யானைச் சின்னத்தை கேரள அரசுக்குச் சொந்தமான அரசுப் பேருந்துகளில் பதித்துள்ளது. அதுபோல, தமிழக அரசின் சின்னமான ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் கோபுரச் சின்னத்தை தமிழக அரசுப் பேருந்துகளில் பதித்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு மேலும் பெருமை சேர்க்க வேண்டும்.

[2003 ஏப்ரல் 30

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் அரசுப் பேருந்துகளில் அரசுச் சின்னத்தைப் பதிக்க அரசு ஆணையிடுமா என்பதைப் பேரவைத் துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் கோபுரச் சின்னத்தை அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே பதித்து, அரசு, ஸ்ரீவில்லிபுத்தூர் கோயிலுக்கு மேலும் பெருமை சேர்க்குமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். ஏற்கெனவே அந்தக் கோயில் கோபுரம்தான் இன்றைக்கு அரசுச் சின்னமாக அதிகாரபூர்வமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்தப் பெருமையை ஏற்கெனவே ஸ்ரீவில்லிபுத்தூர் அடைந்திருக்கிறது. இருந்தாலும்கூட, இப்பொழுது அரசுப் பேருந்துகளில், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் கோபுரச் சின்னத்தை--தமிழக அரசுச் சின்னத்தைப் பொறிக்குமா, பொறிக்க முன்வருமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டு இருக்கிறார்கள். இதற்கு முன்பாக அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் அரசினுடைய நேரடிப் போக்குவரத்துத் துறையாக இருந்தபோது, அப்படிப்பட்ட சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. ஆனால், அதற்குப் பின்பு, அரசுத் துறையை அரசுப் போக்குவரத்துக் கழகங்களாக மாற்றியதற்குப் பின்பு, அந்தப் போக்குவரத்துக் கழகங்களுக்குத் தனித் தனிச் சின்னங்களாகக் கொடுக்கப்பட்டிருந்தன. சேரன் போக்குவரத்துக் கழகம், சோழன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் போக்குவரத்துக் கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம், அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம் ஆகிய அந்தப் போக்குவரத்துக் கழகங்கள் அரசுத் துறையிலிருந்து முதன்முதலாக உருவாக்கப்பட்டு இயக்கப்பட்டன. அதற்கென்று தனிச் சின்னங்கள் வழங்கப்பட்டன. அதற்குப் பின்பாக, அந்தப் போக்குவரத்துக் கழகங்களை 21 போக்குவரத்துக் கழகங்களாகப் பிரித்து, 21 போக்குவரத்துக் கழகங்களுக்கும் தனித்தனிச் சின்னமாக, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் என்று தனிச் சின்னமாக வழங்கப்பட்டது. அவை அந்தப் பேருந்துகளில் பொறிக்கப்பட்டு வந்தன. அதற்குப் பின்பு, சென்ற ஆட்சிக் காலத்திலே—உங்களுக்கெல்லாம் தெரியும்—ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குப் பின்பு, அந்த அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே இருந்த பெயர்களை எல்லாம் ஒட்டுமொத்தமாக நீக்கியபோது, அப்போது அந்தச் சின்னத்தையும்



2003 ஏப்ரல் 30]

சேர்த்து நீக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. ஆகவே, அந்தப் பெயர்களையும்—தமிழக அரசுப் போக்குவரத்துக் கழகங்களிலே இயங்கி வந்த தனித்தனிப் பெயர்களையும்—நீக்கி, அந்தச் சின்னங்களையும் நீக்கி, தற்போது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் என்ற பொதுப் பெயருடன் சின்னம் இல்லாமல் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் போக்குவரத்துக் கழகங்களில் அரசுச் சின்னத்தை, கோபுரச் சின்னத்தைப் பதிக்க வேண்டுமென்ற முடிவை இந்தத் துறை மட்டுமே எடுத்துவிட முடியாது. அது ஒரு கொள்கை முடிவு. அது அரசு எடுக்க வேண்டிய முடிவு. ஆகவே, இப்படிப்பட்ட முடிவை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று, அறிவுரையைப் பெற்று, அதன் அடிப்படையில் நமது அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 366, திரு பி.எஸ். உலகரட்சகன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**366—**

## ஆற்று மணல் எடுத்தல்

**•3106—திரு. பி.எஸ். உலகரட்சகன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, செய்யாறு ஆற்றிலிருந்து மணல் அதிக அளவில் சட்டத்திற்குப் புறம்பாக எடுப்பதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு தொகுதி, செய்யாறு ஆற்றுப் பகுதியில் இருந்து சட்டத்திற்குப் புறம்பாக மணல் எடுக்காவண்ணம், சார் ஆட்சியர், வட்டாட்சியர் மற்றும்

[2003 ஏப்ரல் 30

மாவட்டப் புவியியல் மற்றும் சுரங்கத் துறை அலுவலர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், சட்டத்திற்குப் புறம்பாக மணல் எடுத்துச் செல்பவர்களைத் தடுத்து நிறுத்தி, அபராதத் தொகையும் வசூலிக்கப்படுகிறது; மற்றும் குற்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமகனாரின் பதிலுரைக்கு, விரிவான உரைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, இந்தக் கேள்வி ஏன் எழுப்பப்பட்டது என்று கேட்டால், திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சட்டமன்றத் தொகுதியிலே இளைஞர் நற்பணிச் சங்கம் என்ற ஒரு சங்கத்தை இளைஞர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த மாதிரி திருட்டுத்தனமாக மணலை எடுக்கின்றபோது அவர்கள் அந்த லாரியைத் தடுத்து நிறுத்தி, சில நேரங்களிலே, அவர்கள் எடுத்துச் செல்லாவண்ணம் கீழே கொட்டியும் தடுக்கின்றபோது, 'நீங்கள் இந்த மாதிரிச் செய்வீர்களேயானால், உங்களை லாரி ஏற்றிச் சாகடித்து விடுவோம்' என்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே ஒரு அதிகாரியும் இறந்துவிட்டார். இவர்களுக்கும் இந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி நிகழாவண்ணம் இந்த அரசு பாதுகாப்புக் கொடுக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்கள், கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக இந்தச் சபையிலே பேசும்போது, இந்த மாதிரித் தவறாக மணல் எடுப்பவர்கள்மீதும், அதிகாரிகள்மீது தாக்குதல் நடத்துகிறவர்கள்மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்; தேவைப்பட்டால் அவர்கள்மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் கூட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்திருக்கின்றார்கள். அந்த வகையில், அவ்வாறு மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்கள் ஊரிலே இருக்கின்ற இளைஞர்களுக்குத் தக்க பாதுகாப்பு வழங்கப்படும். நீங்கள் அந்த இளைஞர்களிடம் போய், உறுதியாக ஆற்று மணல் எடுப்பவர்களைத் தடுப்பதற்கு மேலும் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கலாம். தொடர்ந்து அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தரப்படுமென்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்யாறு ஆற்றுக்குப் பக்கத்திலே இருக்கக்கூடிய பாலாற்றில்கூட பனமுகை என்கிற இடத்தில் மணல் எடுக்க ஏலம் விடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த இடத்தில் மணல் எடுக்காமல், ஆற்றினுடைய இந்தப் பக்கம் பார்த்தீர்கள் என்று சொன்னால், எங்களுடைய மாவட்டத்தில் மாம்பாக்கம், வேகாமங்கலம், மாமண்டூர் போன்ற பகுதிகளிலே கிட்டத்தட்ட 80 ஏக்கருக்கு எந்தவிதமான அனுமதியுமில்லாமல்—மணலை 3 அடிதான் எடுக்கவேண்டும், அவர்கள் பொக்ளெயின் போன்ற இயந்திரங்களைப் பயன்படுத்தக் கூடாது. அப்படி இருந்தும்கூட, தண்ணீர் ஊற்றுக் கிடைக்கிற-- 23 அடி ஆழம் வரை, மணல் எடுத்து, தினந்தோறும் ஆயிரக்கணக்கான லாரிகள் சென்னை மாநகருக்கு வந்துகொண்டிருக்கின்றன. நான் மாவட்ட ஆட்சித் தலைவர், D.R.O., போன்றவர்களிடமெல்லாம் சொல்லியும்கூட, இன்னும் முழுமையாக அது தடுக்கப்படவில்லை. நான் அந்தத் துறையினுடைய செயலாளர் அவர்களுக்கும்கூடத் தெரிவித்தேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கடுமையான நடவடிக்கைகளை எடுத்து அவர்கள்மீது குண்டர் சட்டத்தையாவது போட்டு, எங்களுடைய மணலையும், அதைப்போலவே நீர் ஆதாரத்தையும் காப்பாற்றுவதற்கு முன் வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்ன பதில் இதற்கும் பொருந்தும். மதிப்பிற்குரிய ஞானசேகரன் அவர்கள் சொன்னதைக் கருத்திலே கொண்டு, உடனடியாக--ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது--மீண்டும் அந்த நடவடிக்கை தொடர்ந்து துரிதப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன்.

[2003 ஏப்ரல் 30

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே செய்யாறு, என்னுடைய வந்தவாசி தொகுதியிலும் வருகிறது. அங்கே அனப்பத்தூர் என்ற இடத்திலே அரசு அனுமதி கொடுத்திருக்கிற இடத்தையும் மீறி, அந்த எல்லையையும் மீறி கூடுதலாகக் கிட்டத்தட்ட 100 ஏக்கர் அளவிற்கு மிக ஆழத்திற்கு மணல் எடுக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதியிலே குடிநீர் ஆதாரங்கள் மிகவும் பாதிக்கப்படுகிற ஒரு நிலை இருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்திலேகூட Mines துறையைச் சேர்ந்த அதிகாரி எடுத்துச் சொல்லியும்கூட நடவடிக்கை இல்லை. எனவே, இத்தகைய சட்டவிரோதமான நடவடிக்கைகளுக்கு அதிகாரிகளும் துணை போகிறார்களா என்பதை அரசு ஆய்வதுடன், கொடுக்கப்பட்ட உரிமத்தை இப்படித் தவறாகப் பயன்படுத்தி எல்லையைத் தாண்டிக் கூடுதலாக மணல் அள்ளுபவர்களுக்கு உரிமத்தை ரத்துச் செய்ய அரசு முன்வருமா, அவர்கள்மீது சட்டப்படி கிரிமினல் நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படித் தவறாகப் பயன்படுத்துகிறவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுடைய உரிமங்களை ரத்துச் செய்வதற்குக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்யாறு எனது தொகுதியிலே உற்பத்தியாகிறது. செங்கம், கலசப்பாக்கம், பெரணமல்லூர், போளூர் வழியாக நம்முடைய கடற்கரைக்கு வருகிறது. அந்த ஆறு வருகின்ற வழிகளிலே மணல் எடுப்பதற்கு எத்தனை பேருக்கு அரசு உரிமம் வழங்கியிருக்கிறது, எந்தெந்த இடத்தில். அந்த மாவட்டத்தில் இருக்கின்ற....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செய்யாறு பற்றிக் கேளுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** செய்யாறு பற்றித் தான், மணல் எடுப்பது பற்றித்தான் கேட்கிறேன். 4, 5 தொகுதிகள் வழியாக வருகிறது. அந்த மாவட்டத்தில் இருக்கின்ற A.D. (Mines) கண்டுகொள்வதில்லை. வருகிற வழியிலே ஒரு இடத்திலே உரிமம் கொடுத்துவிட்டு, 10 இடங்களிலே



2003 ஏப்ரல் 30]

எடுக்கிறார்கள். கிராமத்திலே இருக்கிற மக்கள் அதைக் கேட்பதற்குப் போனால், லாரியை விட்டு அடிப்பேன் என்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் கேட்டாலே பதில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள், குற்றச்சாட்டு கூடாது.

**திரு. போளூர் வரதன்:** நான் அரசைக் கேட்க விரும்புவது, அந்த ஆறு செல்கின்ற வழியிலே எத்தனை பேருக்கு உரிமம் கொடுத்து இருக்கிறீர்கள்? எத்தனை இடங்களில் தவறுதலாக மணல் எடுக்கிறார்கள்? அப்படி எடுக்கின்றவர்கள்மீது எத்தனை முறை வழக்குத் தொடுத்து இருக்கிறீர்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்யாறு வட்டத்தில் 4 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. செங்கம் வட்டத்தில் 2 பேர்களுக்கும், போளூர் வட்டத்தில் 2 பேர்களுக்கும் குத்தகை வழங்கப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் இதுவரைக்கும் 57 வாகனங்கள் கைப்பற்றப்பட்டு, கிட்டத்தட்ட 14 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் வரையில் அபராதத் தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக எந்த நிபந்தனைகளின் அடிப்படையில், மணல் வாருவதற்கான உரிமம் வழங்கப்படுகின்றது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிநீர் ஆதாரங்களில் இருந்தும், அரசு மற்றும் உள்ளாட்சி குடிநீர்க் கிணறுகளிலிருந்தும், பாலம் போன்றவற்றில் இருந்தும், 500 மீட்டர் சுற்றளவிற்கு மணல் குவாரி செய்யக் கூடாது. ஆற்றங்கரையிலிருந்து 50 மீட்டருக்குள் மணல் குவாரி செய்யக் கூடாது. குத்தகைதாரர்கள் இயந்திரங்கள் பயன்படுத்தி மணல் எடுக்கக் கூடாது. குத்தகைதாரர்கள் எடுத்துச் செல்லும் ஒவ்வொரு சுமைக்கும் சம்பந்தப்பட்ட அலுவலரால் வழங்கப்பட்ட நடைச்சீட்டை வாகனத்துடன் எடுத்துச் செல்ல வேண்டும்

என்ற அடிப்படைக் காரணங்களைக் கொண்டு ஏலம் விடப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ், என்ன நீங்கள் கையைத் தூக்கி விட்டு, நான் அனுமதிக்கும்போது உட்கார்ந்து கொண்டு இருக்கிறீர்கள்?

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆற்றுப்படுகையிலே மணல், ஏரிகளில் gravel போன்ற கனிம வளங்களைச் சிலர் தவறான முறையிலே எடுத்து வருகிறார்கள். அதைத் தடுப்பதற்காகப் பல அதிகாரிகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறார்கள். அப்படி மேற்கொள்கிற அதிகாரிகள் மீது—கடந்த 3 மாதத்திற்கு முன்பாக அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்கள்மீது--கொலை வெறித் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. அதுபோல, கும்மிடிப்பூண்டி வட்டாட்சியர் அவர்களையும் கொலை செய்யக்கூடிய அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். சமீபத்திலேகூட, காஞ்சிபுரம் மாவட்டம், பழையசீவரம் கிராமத்திலே சண்முகசுந்தரம் என்கிற ஒரு அதிகாரி லாரி ஏற்றிப் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். ஆக, பல அதிகாரிகள் (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் கேட்டு முடித்துக்கொள்கிறேன். பல அதிகாரிகள் இதைத் தடுப்பதற்கான பல்வேறு முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு இருந்தாலும், ஒரு சில அதிகாரிகள் அதற்கு உடந்தையாகவும் இருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. ஆகவே, அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க.....

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 367, திரு. ஆ.கு.சி. அன்பழகன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**367—**

## துணை மின் நிலையம்

**•20487—திரு. ஆ.கு.சி. அன்பழகன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, அயல்வாடி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படுமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் சட்டமன்றத் தொகுதியில், அயல்வாடி கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ.கு.சி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வெட்டே இல்லாத தமிழகத்தை உருவாக்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். பெரணமல்லூர் தொகுதி, அயல்வாடி கிராமம், மண்டகொளத்தூர் கிராமம், வடமாதிமங்கலம் ஆகிய பகுதிகளில் மின் அழுத்தக் குறைவு அதிகமாக உள்ளது. அங்கு விவசாய மின் மோட்டார்கள் அதிகமாக உள்ளதால், விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. அதைப்போல, அங்கே கிராம மக்கள் பயன்படுத்தக்கூடிய மின் இணைப்புகள் அதிகமாக உள்ளதாலும் மிகுந்த மின் அழுத்தக் குறைவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து, மேற்படி கிராமங்களில் புதிதாகத் துணை மின் நிலையம் அமைக்க முன்வருவார்களா? ஏற்கெனவே வடமாதிமங்கலம் கிராமத்திலே துணை மின் நிலையம் அமைக்கப்பட்டு இருந்தும், மின் அழுத்தக் குறைவின் காரணமாக அந்தப் பகுதி மிகுந்த பாதிப்பை அடைந்துள்ளது. அந்தப் பகுதியில் உள்ள துணை மின் நிலையத்தை upgradation செய்து, தரம் உயர்த்தி, 110 K.V.A. ஆக மாற்றித் தரவும் ஒரு துணை மின் நிலையத்தை அமைக்கவும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அயல்வாடி கிராமத்திற்குப் பக்கத்திலே ஆணைகோவில் என்கின்ற கிராமம் இருக்கிறது. அந்த ஆணைகோவில் கிராமத்தில் கிட்டத்தட்ட 75 இலட்சம் ரூபாய் செலவில், ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்பெற்று, கிட்டத்தட்ட பணிகள் முடிவடையும் தறுவாயில் இருக்கின்றன. ஆகவே, 3 கிலோ மீட்டர் தொலைவே இருக்கின்ற காரணத்தினால், அயல்வாடி கிராமத்திற்கும் இந்த ஆணைகோவில் கிராமத்திலே அமைக்கப்படுகின்ற துணை மின் நிலையம் மின் அழுத்தக் குறைவைச் சரி செய்யும் என்பதைத்

தெரிவித்துக்கொண்டு, ஆகவே அயல்வாடி கிராமத்திற்குத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் சொன்ன வடமாதிமங்கலம் கிராமத்தில் இருக்கின்ற 33/11 K.V.A. துணை மின் நிலையத்தை 110 K.V.A. ஆக உயர்த்துவதற்கு மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அம்மாவினுடைய அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்.

**திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியில் சேவூர், பையூர் ஆகிய இடங்களில் 2 துணை மின் நிலையங்கள் அமைக்கும் திட்டம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அது என்ன நிலையில் இருக்கிறது என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 368, திரு. மே.ப. காமராஜ், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**368—**

**நியாய விலைக் கடை**

**•9208—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஊராட்சி ஒன்றியம், மல்லியக்குட்டை ஊராட்சி, மல்லியக்குட்டை நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து, அத்திராம்பட்டியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?





**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாரமங்கலம் தொகுதி, மல்லியக்குட்டை நியாய விலைக் கடையை இரண்டாகப் பிரித்து, அத்திராம்பட்டியில் புதிய நியாய விலைக் கடை அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதி, மல்லியக்குட்டை ஊராட்சி 4,000-க்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இருக்கக்கூடிய பகுதியாகும். இதிலே, அத்திராம்பட்டியிலிருந்து மல்லியக்குட்டைக்குச் சென்று, ரேஷன் பொருட்கள் வாங்கச் செல்ல, கிட்டத்தட்ட 2 கிலோ மீட்டருக்கு மேல் தூரம் இருக்கிறது. மேலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கார்டுதாரர்கள் அந்தக் கடையிலே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதிலே ஒரு பகுதியாக, 300, 400 கார்டுகளைப் பிரித்து, தனியாக அத்திராம்பட்டியில் ஒரு பகுதிநேரக் கடை வைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லியக்குட்டை நியாய விலைக் கடையில் 761 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. ஒரு கடையை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொன்னால், தாய்க் கடையிலே 500 அட்டைகள் இருந்திடுதல் வேண்டும். எனவே, இதைத் தனியாகப் பிரித்து தனிக் கடையை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, பேரூராட்சிப் பகுதிகளிலும் கிட்டத்தட்ட 1500-க்கும் மேற்பட்ட கார்டுகள் உள்ள கடைகள் இயங்கி வருகின்றன. அதிலேயும், ஒரு பகுதியிலேயிருந்து அந்தப் பகுதிககுச் செல்ல கிட்டத்தட்ட 2 கிலோ மீட்டர், 3 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அதிலே 500 கார்டுகளுக்கு மேல் பிரித்துத் தனியாகக் கேட்டால், அங்கே புதிதாகப் பகுதிநேரக் கடை வைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எடுத்துக்காட்டியபடி, அப்படி இருக்குமேயானால், சிறப்பு நேர்வாகக் கருதி, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு வரப்பெற்றபின், அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அண்ணாவி.

**திரு. ப. அண்ணாவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எனது தொட்டியம் தொகுதியில், சக்கம்பட்டி, கோதூர்பட்டி, முத்துராஜாபாளையம், மங்கலம், வரதராஜபுரம் ஆகிய 5 ஊர்களில் 5 நியாய விலைக் கடைகளை இரண்டாகப் பிரித்து அமைக்க உத்தரவு வழங்கியது. அவ்வாறு உத்தரவு வழங்கிய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 369, திரு. கே.சி. கருப்பணனை, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**369—**

## நியாய விலைக் கடைகள்

**•20147 திரு. கே.சி. கருப்பணன்:**

*மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*

*நியாய விலைக் கடைகள் அனைத்தையும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் நடத்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



நியாய விலைக் கடைகள் அனைத்தையும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒப்படைப்பது என்பது சாத்தியம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது என்னுடைய தொகுதியில்கூட 2 கடைகள் கொடுக்கப்பட்டு, மிகவும் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் எனது தொகுதியில் 10 விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கொடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கடைகளும் கொடுக்கப்படுமா? அதேபோல, மாநிலத்தில் எத்தனை கடைகள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன? குறிப்பாக, எங்களுடைய ஈரோடு மாவட்டத்தில் எத்தனை கடைகள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சிறப்பான நல்லந்தஸ்து தர வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, தமிழ்நாடு முழுக்க 475 மகளிர் அமைப்புகள் நடத்தும் நியாய விலைக் கடைகள், மகளிர் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படுகிற மொத்தக் கடைகள் 475. அதிலே முழுநேரக் கடைகளாக 317-ம், பகுதிநேரக் கடைகளாக 158-ம் இன்றையதினம் தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டபடி, ஈரோடு மாவட்டத்திலே மாத்திரம், 28 நியாய விலைக் கடைகள் மகளிர் சுய உதவிக் குழுக்களால் நடத்தப்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் மேலும் இங்கே சுட்டிக் காட்டினார்கள்; எங்கள் தொகுதியிலே இருக்கிற கடைகள் எல்லாமே எடுத்துக்கொள்ளப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். கருத்துரு வரப்பெறுமேயானால், நிச்சயமாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்கள் விருப்பமாக இருக்கின்ற நேரத்திலே கருத்துகளைப் பரிசீலிப்போம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே இனி பிரிக்க இருக்கிற

[2003 ஏப்ரல் 30

முழுநேர நியாய விலைக் கடைகளைப் பிரித்து, தனியாகப் பகுதிநேர நியாய விலைக் கடைகள் ஆங்காங்கே அமைக்கப்படுகின்ற நேரத்திலே, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அந்த வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கடைகளை அமைப்பது; அந்தந்தப் பகுதியிலே இருக்கிற மகளிர் சுய உதவிக் குழுக்கள் விருப்பத்தைத் தெரிவித்து, அது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், அந்த மாவட்டத்திலே இருக்கிற தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனமும் சேர்ந்து அங்கே கலந்து பேசி, எந்தப் பகுதியிலே அமைக்க வேண்டுமென்று அவர்கள் முடிவு எடுக்கிறார்களோ, அதைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நியாய விலைக் கடைகள் சுய உதவிக் குழுக்களுக்குக் கொடுக்கப்படுகிறபோது, அவர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்கப்படுகிறதா? அல்லது அவர்கள் விற்பனை செய்யும் பொருட்களுக்கு Commission வழங்கப்படுகிறதா? அதேபோன்று, வருங்காலங்களிலே விற்பனையாளர்கள் பணியிடங்கள் காலியாகின்றபோது, இதுபோன்ற சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்களாலே நடத்தப்படுகின்ற இந்தக் கடைகளிலே எல்லாம் எந்தவிதமான ஊதியமும் தரப்படுவது கிடையாது. அந்த அடிப்படையிலே அவர்கள், அவர்களுடைய சுய உதவிக் குழுவிலேயிருந்துதான் நிதியை அளித்து, இந்தக் கடைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நேரடியாக அவர்கள் பொருட்களை நுகர்வு செய்து, மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்கள் சில்லறை விளிம்புத் தொகையையும் அவர்கள் பயனாகப் பெறுகிறார்கள் என்பதை அவைக்குப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நியாய விலைக் கடைகள், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 400-க்கும் மேற்பட்ட இடங்களிலே வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்கிறார்கள். அவர்கள் ஊதியம் பெறாமலேயே அந்தக் கடைகளை நடத்துவதாகவும் சொல்கிறார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக அந்தக் கடைகள், விற்பனையில் பிரச்சினைகள் இல்லாமல் அல்லது நஷ்டம் ஏற்படாமல் அரசுக்கு ஆதாயமாகச் செயல்படுகின்றனவா? அல்லது அப்படிச் செயல்படுத்தப்படுகிறது என்று சொன்னால், இந்தக் கேள்வியின் மூலமாக எதிர்பார்க்கிற பதிலை—அரசே ஏற்று, அவர்களிடத்திலே வழங்கலாமே? அதைப் பற்றி அரசு என்ன கருதுகிறது என்பதை--அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே நியாய விலைக் கடைகளிலே ஊழியர்கள் பெருமளவில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். 28,060 கடைகள் தமிழகத்திலே இருந்தாலும், அதிலே, அத்தனை கடைகளும் மகளிர் சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைக்கப்படுமேயானால், அவர்களுடைய வேலைவாய்ப்பும் பாதிக்கப்படும் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே, அங்கே அப்படித் தவறுகள் நடைபெறுகின்ற அந்த நியாய விலைக் கடைகளை மாத்திரம், அந்தந்தப் பகுதியிலே கேட்பவர்களுக்கு இந்த அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகத் தந்து கொண்டிருக்கிறது என்பதைப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 370, திரு. சி. சண்முகம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**370—**

## சோடியம் மின் விளக்கு

**•7314-திரு. சி. சண்முகம்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 ஏப்ரல் 30

*(அ)* திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு தேர்வு நிலைப் பேரூராட்சிப் பகுதிக்கு சோடியம் மின் விளக்கு அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* இல்லை.

*(ஆ)* வினா எழவில்லை.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவேற்காடு பகுதியானது, சென்னையை ஒட்டியுள்ள விரிவுபடுத்தப்பட்ட, வளர்ந்து வரும் பகுதியாகும். இந்தப் பகுதியில் அங்கீகாரம் இல்லாத வீட்டுமனைகள் அதிகமாக உள்ளன. அந்தப் பகுதிகளில் படிக்கும் மாணவர்கள் இரவில் விளக்கு வசதி இல்லாமல் தொல்லைப்படுகிறார்கள். அதனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள், சிறப்புத் திட்டத்தின் அடிப்படையிலே அந்த ஏழை மாணவர்கள் படிக்க வசதியாக அந்த அங்கீகாரம் இல்லாத பகுதிகளிலே தெரு விளக்குகளோ அல்லது ஏதாவது ஒரு வழியில் படிப்பகமோ ஏற்படுத்திக் கொடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவேற்காடு பேரூராட்சியில் 682 சோடியம் விளக்குகளும், 2 மெர்க்குரி விளக்குகளும், 2 ஹாலோஜன் விளக்குகளும் செயல்பாட்டில் உள்ளன. மேலும், திருவேற்காடு பேரூராட்சிக்கு ஒரு ஆண்டிற்கு மின் கட்டணமாக ரூ.1,09,000 செலவு செய்யப்படுகிறது. கூடுதல் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் பட்சத்தில், மின் கட்டணம், உபகரணங்கள் மற்றும் தொடர் பராமரிப்புச் செலவினம் கூடுவதால் பேரூராட்சிக்கு நிதிச் சுமை அதிகமாகும். எனவே, திருவேற்காடு பேரூராட்சியில் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கும் திட்டம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-55*

**திரு. சி. சண்முகம்:** குறைந்தபட்சம் குழல் விளக்குகளாவது அமைத்துத்தர ஆவன செய்வார்களா என்பதை அவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.



2003 ஏப்ரல் 30]

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவேற்காடு பேரூராட்சியில் ஏற்கெனவே 846 குழல் விளக்குகள் இருக்கின்றன. மின் கட்டணம் கூடுவதால் பேரூராட்சிக்கு நிதிச் சுமை கூடுகிறது. பேரூராட்சியில் இருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகளால் முடிவு செய்யப்படுகிற விஷயம் இது. எனவே, நிதிச் சுமையின் காரணமாக--பேரூராட்சிக்குப் போதிய விளக்கு வசதி செய்யப்பட்டுள்ளதால்--அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவேற்காடு தேர்வு நிலைப் பேரூராட்சியானது திருவேற்காடு ஸ்ரீதேவி கருமாரி அம்மன் திருக்கோயில் அமைந்து இருக்கிற பகுதியாகும். இந்தப் பகுதி தினமும் ஆயிரக்கணக்கிலே பக்தர்கள் வந்து செல்கின்ற பகுதியாகவும் இருக்கிறது. நேர்த்திக் கடன் செலுத்துபவர்கள் இரவு நேரங்களில் தங்கி விட்டு, காலையில் தரிசனம் செய்கின்ற ஒரு நிலையும் இருக்கிறது. ஆகவே, இரவு நேரங்களில் பக்தர்கள் தங்குகின்றபோது அந்தப் பகுதியில் தேவையான வெளிச்சம் இல்லாததால் அதிக சிரமத்திற்குள்ளாகிறார்கள். அந்தப் பேரூராட்சிக்கு நிதி நெருக்கடி இருப்பதாலும், அந்தத் திருக்கோயில் அதிகம் வருமானம் தரக்கூடிய திருக்கோயிலாக இருப்பதாலும், அந்தப் பகுதியிலே அமைக்கப்படுகின்ற குழல் விளக்குகளுக்கு ஏற்படும் மின்சாரச் செலவு பற்றி திருக்கோயிலிடமே வற்புறுத்தி அதற்குத் தேவையான நிதியினைப் பெற்று மாதா மாதம் மின்சாரக் கட்டணத்தையும் செலுத்த அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்கள் குறிப்பிட்டதுபோல, அறநிலையத் துறை அலுவலர்களிடம் குறிப்பிட்டு, இதற்குண்டான நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. பழனியப்பன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது, சோடியம் மின் விளக்குகள் அமைப்பதற்கு

[2003 ஏப்ரல் 30

வாய்ப்பில்லை என்று சொன்னார்கள். ஏற்கெனவே அமைக்கப்பட்ட சோடியம் மின் விளக்குகளாக இருந்தாலும் சரி அல்லது குழல் மின் விளக்குகளாக இருந்தாலும் சரி, காலைப்பொழுதிலே வருகிறபோது, பகல் நேரங்களில்கூட நிறைய கிராமங்களில் பேரூராட்சிகளில், நகராட்சிகளில் அந்த மின் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கின்றன. எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும்கூட, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விவசாயிகளுக்காக இலவச மின்சாரத்தை வழங்கி வருகிற இந்தச் சூழ்நிலையில், அந்த மின்சாரத்தினுடைய தேவையைக் கருதி, இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிவதோடு, பகல் நேரங்களில் அந்த மின்சார விளக்குகள் எரிந்தாலும்கூட, அவற்றை இயற்கையாகவே, விஞ்ஞான ரீதியாகவே கட்டுப்படுத்துவதற்கு ஏதோ கருவி இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, ஆட்டோமேட்டிக்காக அணைவதற்குக் கருவி இருக்கிறது என்று சொல்கிற இந்தச் சூழ்நிலையில், அதைக் கட்டுப்படுத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஒரு சில நகராட்சிப் பகுதிகளில், மாநகராட்சிப் பகுதிகளில் ஆட்டோமேட்டிக்காக காலை 6 மணிக்குள்ளாக அந்தக் குழல் விளக்குகளுக்கு மின்சாரம் தடைப்பட்டு நிறுத்தப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஊரகப் பகுதிகளில், ஊராட்சிப் பகுதிகளில், அந்தப் பகுதியில் இருக்கின்ற உள்ளாட்சி அமைப்புகள் இதற்கு முழுமையாக இந்த அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். அந்த அடிப்படையில் கடைப்பிடித்தால்தான் பொழுது விடிந்த பிறகு தொடர்ந்து மின் விளக்குகள் எரிவது தடை செய்யப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 371, திரு. வீ. சந்திரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2003 ஏப்ரல் 30]

**371—**

## புதிய பேருந்து நிலையம்

**•22482—திரு. வீ. சந்திரன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சிவகங்கையில் தற்போதைய பேருந்து நிலையம் மிகவும் குறுகலான இடத்தில் அமைந்துள்ளதால், நவீன வசதிகளுடன்கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*சிவகங்கையில் புதிய பேருந்து நிலையம் அமைக்க வருவாய்த் துறை மூலம் நிலம் பெறுவது குறித்து கருத்துரு சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.*

**திரு. வீ. சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, சிவகங்கை நகரம் மாவட்டத் தலைநகரமாக இருப்பதாலும், மக்கள் தொகை அதிகரித்து வருவதாலும், தற்போது இருக்கும் பேருந்து நிலையம் இட வசதி குறைவாக இருப்பதாலும் வெளியூர்களிலிருந்து வரும் பேருந்துகள் பேருந்து நிலையத்திற்கு வெளியிலேயே நின்று சென்றுவிடுகின்றன. எனவே, பொது மக்கள் வெயிலிலும், மழையிலும் கஷ்டப்படுகிறார்கள். சிவகங்கை நகரில் போதிய இட வசதி உள்ளதால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இதனை மறு பரிசீலனை செய்து, நவீன வசதியுடன்கூடிய புதிய பேருந்து நிலையம் அமைக்க இவ்வாண்டே அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிற வரை வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை நகரில் பேருந்து நிலையம் அமைக்க காஞ்சிரங்கால் குரூப் வார்டு-ஏ பிளாக்கில் 7.63 ஏக்கர் நிலத்தினைத் தேர்வு செய்து, சிவகங்கை நகராட்சி மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பேருந்து நிலையம் அமைக்கத் தேர்வு செய்யப்பட்ட இடம், நகரளவைப்

[2003 ஏப்ரல் 30

பதிவேட்டின்படி ஊரணி மற்றும் ஓடை என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இடம் நீர் நிலைப் புறம்போக்காக இருப்பதால், பேருந்து நிலையம் அமைக்கத் தகுதியில்லாத இடமாக இருக்கிறது. வேறு இடம் தேர்வு செய்ய மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததன் பேரில், மாற்று இடம் தேர்வு செய்து அறிக்கை அனுப்புமாறு சிவகங்கை வட்டாட்சியருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாற்று இடம் தேர்வு செய்து அறிக்கை பெற்றவுடன், புதிய பேருந்து நிலையம் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்வி மாணவர்கள் போராட்டத்தில்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுகுறித்து எடுக்க இருக்கிறேன். பழனிசாமி, அவசரப்படாதீர்கள், உட்காருங்கள்.

## 3. உரிமை மீறல் பிரச்சினை

### 'இந்து' நாளிதழ் மீதும், 'முரசொலி' நாளிதழ் மீதும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன் (குறுக்கீடுகள்) தமிழரசன் சொல்லி முடிக்கட்டும்.

**திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் உரிமை குறித்த மிக முக்கியமான பிரச்சினை ஒன்றைத் தங்களுடைய அனுமதியின் பேரிலே சட்டமன்றப் பேரவை விதி 219-ன்கீழ் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த மாதம் 12, 13 மற்றும் 23 ஆம் நாளிட்ட 'இந்து' இதழிலே, பல்வேறு நடவடிக்கைகளை, இந்த மாமன்ற [illegible]க்கைகளைத் திரித்தும், கற்பனையாகவும், உண்மைக்கு மாறாகவும், அவதூறுகளைப் பரப்புகிற



2003 ஏப்ரல் 30] [திரு. செ.கு. தமிழரசன்]

வண்ணமும் செய்தி வெளியிட்டதற்காக, 'இந்து' நாளிதழின் பேரிலே ஒரு உரிமைப் பிரச்சினை இந்த மாமன்றத்திலே கொண்டு வரப்பட்டு, நீங்கள் இந்த மாமன்றத்திலே கடந்த 23 ஆம் தேதி ஒரு தீர்ப்பை வழங்கினீர்கள். அதுகுறித்து உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைத்தீர்கள். உரிமைக் குழுவிற்கு அந்தப் பிரச்சினையை அனுப்பி வைத்தீர்கள். உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்ட அந்தப் பிரச்சினையையே ஒரு செய்தியாக்கி இந்த மாதம்--ஏப்ரல் 25 அன்று 'இந்து' நாளிதழ், ஒரு தலையங்கத்தை வெளியிட்டு இருக்கிறது. அந்தத் தலையங்கத்திற்குத் தலைப்பு, 'Rising Intolerance' என்பது. உரிமைக் குழுவையே விமர்சிக்கின்ற அளவிற்கு ஒரு தலையங்கத்தை எழுதியிருக்கிறது.

தமிழிலே ஒரு பழமொழி சொல்வார்கள், 'மங்கை சூதகமானால் கங்கையிலே குளிக்கலாம்; கங்கையே சூதகம் ஆனால் என்ன செய்வது?' என்று. மாட்சிமை பொருந்திய இந்த மாமன்றத்தின் உரிமைகளை, உரிமைக் குழுவின் உரிமையை, இந்தச் சட்டமன்றத்தின் உரிமையை, உறுப்பினர்களின் உரிமையைக் காப்பாற்றுகிற மிகப் பெரிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது; இந்த மாமன்றத்திற்கு இருக்கிறது. இந்த மாமன்றம் மக்களுக்காகச் சட்டம் இயற்றுகின்ற மாமன்றம். சட்டம் இயற்றுகின்ற இந்த மாமன்றத்தின் உரிமைகளில் யாரும் உள்நோக்கம் கற்பிக்க முடியாது. மக்களுக்கான சட்டம் எழுதுகின்றபோது, சட்டம் வரையறுக்கின்றபோது உள்நோக்கம் கற்பிக்கிற எதுவும் இந்த மாமன்றத்தின் உரிமையைப் பாதிப்பதாக அமையும். ஆனால் 'இந்து' நாளிதழ், உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்ட அந்தத் தீர்ப்பையே விமர்சித்து, கடந்த 25 ஆம் நாளிட்ட அந்த இதழிலே, உரிமைக் குழுவிலே பெரும்பான்மையாக இருக்கிற ஆட்சியாளர்களுடைய எண்ணிக்கையைக் கொச்சைப்படுத்துகின்ற வகையிலே, ஆளுங்கட்சிக்கு ஆதரவான பெரும்பான்மை உறுப்பினர்கள் இருப்பதனாலே இந்தத் தீர்ப்பு எப்படிப் போய் அமையும் என்பது நமக்குத் தெளிவாகத் தெரிகிறது என்று, தீர்ப்பு வருவதற்கு முன்பே கொச்சைப்படுத்தி ஒரு தலையங்கத்தை எழுதியிருக்கிறது.

*முற்பகல் 11-05*

பத்திரிகைகளுக்கு, இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளை விமர்சிப்பதற்கோ, எழுதுவதற்கோ, வெளியிடுவதற்கோ எல்லாவிதமான உரிமைகளும் இருக்கின்றன. ஆனால், அந்த உரிமைகள், இந்தச் சட்டமன்ற மரபை மீறாத வகையிலே, இந்தச் சட்டமன்றத்தின் மாட்சிமையைக் காப்பாற்றுகின்ற வகையிலே, உங்களுடைய இறையாண்மையைக்

காப்பாற்றுகின்ற வகையிலே, இந்தச் சட்டமன்றத்தின் உரிமைகளைக் காப்பாற்றுகின்ற வகையிலே அந்த விமர்சனங்கள் அமையவேண்டும்.

பிளாட்டோ ஒரு முறை, அவருடைய அவையிலே, சுதந்திரம் என்பதைப் பற்றிச் சொல்கிறபோது சொன்னார். ஒவ்வொருவருக்கும் சுதந்திரம் இருக்கிறது. ஆனால், அந்த சுதந்திரம் அடுத்தவன் பேரிலே தனது கை படாத அளவிற்கு இருக்கிறது. அந்தக் கையை எப்படி வேண்டுமானாலும் வீசலாம். ஆனால், அடுத்தவன் மேலே கை படுமானால், அவனுடைய உரிமை பறிபோகும். அதுவரையிலே அவனுக்கு உரிமை இருக்கிறது என்று மிக நகைச்சுவையாகச் சொன்னார். ஆனால், இந்தச் சட்டமன்றத்தின் உரிமைகளைக் குலைக்கின்ற வகையிலே, மாண்பைக் குலைக்கின்ற வகையிலே, மாட்சிமையைக் குலைக்கின்ற வகையிலே, உரிமைக் குழுவையே விமர்சித்துத் தலையங்கம் எழுதியிருக்கிறது, 'இந்து' நாளிதழ். அந்த நாளிதழினுடைய அதே தலையங்கத்தை, மறுநாளிலே, 'முரசொலி' மொழியாக்கம் செய்து வெளியிட்டிருக்கிறது. 'முரசொலி'க்கும் 'இந்து'விற்கும் வேறு வகையிலே சம்பந்தம் இருக்கலாம். ரத்த சம்பந்தம் இருக்கலாம். அல்லது சம்பந்தி உறவு முறை இருக்கலாம். வேறு எது வேண்டுமானாலும் அவர்களுக்கு, வெளியே இருக்கலாம். ஆனால், அதற்காக அந்தத் தலையங்கத்தை அப்படியே மொழியாக்கம் செய்து இந்த மாமன்றத்தைக் கொச்சைப்படுத்துகின்ற வகையிலே, அவதூறாக மக்களுக்கு செய்தியைச் சொல்கின்ற வகையிலே, உரிமைக் குழுவின் உரிமையையே கொச்சைப்படுத்துகின்ற வகையிலே, அதைவிட இந்த உரிமைக் குழுவிலே இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அந்த உரிமையைப் புண்படுத்துகின்ற, அதற்கு அவதூறு கற்பிக்கின்ற வகையிலே தலையங்கம் எழுதியிருக்கிறார்கள். ஆகவே, நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பத்திரிகைகளுடைய சுதந்திரம் என்பது, அவர்கள் விமர்சிப்பது என்பது, அது ஒன்றும் மாறான விஷயம் அல்ல. ஆனால், பத்திரிகைகள் இந்த உரிமையை, நம்முடைய உரிமையை, சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமையை, இந்த அவையினுடைய உரிமையைப் பாதிக்கின்ற அளவிற்கு எப்படி எழுத முடியும்? இந்த அவையிலேயே, எனக்கு நினைவிற்குத் தெரிந்து, சற்றொப்ப 16, 17 ஆண்டுகளுக்கு முன்னாலேயே, 'வணிக ஒற்றுமை' ஆசிரியரைக் கைது செய்திருக்கிறோம். 'முரசொலி' நாளிதழின்மேல் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். 'அசைடு', 'இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி' போன்ற பெரும் நாளிதழ்கள் மீதெல்லாம், மிக முக்கிய நாளிதழ்கள் மீதெல்லாம், இந்த மன்றத்தின் உரிமைகளை மீறியதற்காக நாம் நடவடிக்கை எடுத்தி நக்கிறோம். பாராளுமன்றத்திலேகூட,



'பிளிட்ஸ்' போன்ற ஒரு பெரிய அரசியல் விமர்சகப் பத்திரிகையையே, அதன் வெளியீட்டைத் தடுக்கின்ற அளவிற்குத் தடை கொண்டு வந்திருக்கிறார்கள். ஆக, நம்முடைய உரிமைகளைக் காப்பாற்ற வேண்டிய மிகப் பெரிய பொறுப்பும், அந்த உரிமையும் நமக்கு இருக்கிறது. நான் இந்த மன்றத்திலே, அவை விதி 219-ன்கீழ் உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். உரிமைக் குழுவையே கொச்சைப்படுத்தி, கேவலப்படுத்தியுள்ளனர். இந்த உரிமைக் குழுவிலே சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் தலைவ்ராக இருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு உறுப்பினராக இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சருக்கு ஒரு மிகப் பெரிய கடமை இருக்கிறது. முதலமைச்சரே அந்தக் குழுவிலே--உரிமைக் குழுவிலே உறுப்பினராக இருக்கிறபோது, *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழரசன், அதிலே முதலமைச்சர் கிடையாது; அவை முன்னவர்.

**திரு. செ.கு. தமிழரசன்:** அவை முன்னவர் இந்தக் குழுவிலே உறுப்பினராக இருக்கிறார், மற்றும் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இந்தக் குழுவிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். உரிமைக் குழுவிலே இந்தப் பிரச்சினை முன்வைக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் ஒரு தீர்ப்பிலே உரிமைக் குழுவிற்கு அனுப்பியிருக்கிறீர்கள். உரிமைக் குழுவையே கேவலப்படுத்துவது என்பது, இந்த மன்றத்தையே கேவலப்படுத்துவதாக அமையும். ஆகவே, உங்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இந்தப் பிரச்சினைக்கு நீங்கள் ஒரு சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு சரியான தீர்ப்பு அளிக்க வேண்டும். உரிமைக் குழுவைக் கேவலப்படுத்துகிறார்கள். வேறு எங்கேயாவது போய்— நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கேவலப்படுத்த முடியுமா, உள்நோக்கம் கற்பிக்க முடியுமா? நீதிபதிகளினுடைய நடவடிக்கைகளை விமர்சிக்க முடியுமா? பத்திரிகைகள் அப்படிச் செய்ய முடியுமா? ஆனால், சட்டமன்றப் பேரவைத் தலைவருடைய தீர்ப்பை விமர்சித்து, உரிமைக் குழுவையே விமர்சித்து, உரிமைக் குழுவிற்கே உள்நோக்கம் கற்பித்து அதைக் கொச்சைப்படுத்தி, உண்மைக்கு மாறான, கற்பனை விஷயங்களை வெளியிட்டிருக்கிற அந்தப் பத்திரிகைகளின் பேரிலே நீங்கள் தகுந்த நடவடிக்கைகளை, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த மாமன்றத்தின் மரபை, இந்த மாமன்றத்தின் மாட்சிமையை, இந்த மாமன்றத்தின் உரிமையை நீங்கள் காப்பாற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதை நான் வலியுறுத்தி இந்தத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[2003 ஏப்ரல் 30

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து' நாளிதழ் என்பது..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'வழிமொழிகிறேன்' என்று சொன்னால் போதும். சந்தானம் அவர்கள், 'அதை வழிமொழிகிறேன்' என்று சொன்னால் போதும்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உறுப்பினர் தமிழரசன் அவர்கள் முன்மொழிந்த அந்தத் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை அவையின் தீர்மானத்திற்கு விடுகிறேன். நானே இப்போது தீர்ப்பை வழங்கி விடுகிறேன்.

*முற்பகல் 11-10*

*12-4-2003, 13-4-2003* மற்றும் *23-4-2003* நாளிட்ட 'இந்து' பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி மற்றும் கட்டுரையில், பேரவை நடவடிக்கைகளைத் திரித்தும், பேரவையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாறாக விமர்சனம் செய்தும், அவையின் உரிமையை மீறுகிற வகையிலும், பேரவையின் பெரும்பான்மையான உறுப்பினர்களுடைய தலைவரும் மிக முக்கியமான உறுப்பினருமாகிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது உரிமையைப் பாதிக்கும் வகையிலும், சில களங்கம் கற்பிக்கும் சொற்றொடர்களையும் வெளியிட்டது, அவை உரிமை மீறிய செயலாகும். இதனைப் படிக்கும் மக்கள் மத்தியில், பேரவைமீதும், பேரவை நடவடிக்கைகள் குறித்தும் தவறான எண்ணத்தையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத்தும் என்ற காரணத்தாலும், தவறான, பிழையான, உண்மைக்கு மாறுபட்ட செய்தியை அவை மரபுகளுக்கு மாறாகப் பிரசுரித்துள்ளதாலும், இது அவை உரிமை மீறிய செயல் எனக் கருதி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 226—ன்கீழ், பேரவைத் தலைவருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ், இப்பிரச்சினை குறித்து ஆய்ந்து அறிக்கை அளிப்பதற்காக உரிமைக் குழுவிற்கு அனுப்பினேன்.

இப்பேரவையின் இறையாண்மையைக் காப்பாற்றுகின்ற பொறுப்பில் இருக்கின்ற பேரவைத் தலைவராகிய எனது நடவடிக்கைக்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையிலும், அவைமீது ஒட்டுமொத்தக் களங்கத்தை உருவாக்கும் வகையிலும், அவை உறுப்பினர்கள்மீதும், உரிமைக் குழு



2003 ஏப்ரல் 30] [பேரவைத் தலைவர்]

மீதும் களங்கம் கற்பிக்கும் வகையிலும், *25-4-2003* நாளிட்ட 'இந்து' நாளேட்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'அரசியல் எதிரிகளைத் தாக்குகிற மற்றுமொரு புதிய முறை' என வர்ணித்து 'Rising Intolerance' என்ற தலைப்பில் தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. பேரவைத் தலைவரின் நடவடிக்கைகளுக்கு உள்நோக்கம் கற்பிப்பது அவை உரிமை மீறிய செயல் என்பது, எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு முடிவாகும். எனவே, மேற்கூறிய தலையங்கம் பேரவைத் தலைவராகிய எனது நடவடிக்கைக்கு உள்நோக்கம் கற்பிக்கும் வகையிலும், பேரவையின் உரிமையை மீறுகிற வகையிலும், அவைமீது ஒட்டுமொத்தக் களங்கத்தை உருவாக்குகின்ற வகையிலும், உரிமைக் குழுமீதும், அவை உறுப்பினர்கள்மீதும் களங்கத்தை உருவாக்கி, அவர்களது உரிமையை மீறுகிற வகையிலும் அமைந்துள்ளதால், இது உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டிய உரிமை மீறிய செயலாகும். (குறுக்கீடு)

பெரும்பான்மை உறுப்பினர்களுடைய தலைவரும், மிக முக்கியமான உறுப்பினருமாகிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள் பற்றி களங்கம் கற்பித்து, 'இந்து' நாளேடு, *12-4-2003, 13-4-2003* மற்றும் *23-4-2003* ஆகிய நாட்களில், உண்மைக்கு மாறாகவும், உள்நோக்கத்துடனும், அவை உரிமைகளைப் பாதிக்கின்ற வகையிலும் எழுதியிருப்பது, அவை உரிமையை மீறிய செயலாகும். அதனால்தான்—சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் செயல்படும் சட்டமன்றத்தினுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காக-- இந்தப் பிரச்சினை உரிமைக் குழுவிற்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளது. மேலும், உரிமைக் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கைக் கணக்குப்படிப் பார்க்கும்போது, இந்தப் பிரச்சினைக்கு ஆளுங்கட்சியின் எண்ணப் போக்கில் தீர்ப்பு வரும் என்றும், 'இந்து' நாளேட்டில் *25-4-2003* நாளிட்ட 'Rising Intolerance' என்ற தலைப்பின்கீழ் எழுதியிருப்பதும், *26-4-2003* நாளிட்ட 'முரசொலி' பத்திரிகையில், இதே செய்தியை தமிழில் வெளியிட்டிருப்பதும் அவை உரிமைக் குழுவின் நடவடிக்கைக்கு உள்நோக்கமும், பெரும் களங்கமும் கற்பிப்பதாகவும், இது அவையின் ஒட்டுமொத்த உரிமையை முற்றிலும் மீறியதாகவும் அமைந்த செயலாகும். 'இந்து' பத்திரிகையின்' 'Rising Intolerance' என்று தலையங்கம் எழுதியிருக்கின்ற இந்த அவை உரிமை மீறிய வெளியீடு, *26-4-2003* ஆம் நாளிட்ட 'முரசொலி' நாளேட்டிலும் அப்படியே தமிழிலும் வெளியிடப்பட்டுள்ளது.

பேரவைக்கு என்று சில மரபுகளும், விதிமுறைகளும் உள்ளன. அதேபோன்று, பேரவைத் தலைவர் என்ற முறையில், எனக்குப் பேரவையின் கண்ணியத்தையும், உரிமைகளையும் காப்பாற்றுகின்ற பெரும் பொறுப்புள்ளது. ஆனால், மேற்கூறிய 'இந்து' பத்திரிகையின் தலையங்கமும், மற்றும் 'முரசொலி' யில் வெளியிடப்பட்டுள்ள அதே செய்தியும், பேரவைத் தலைவராகிய எனது தீர்ப்புக்கு உள்நோக்கமும், களங்கமும் கற்பித்து எனது நடவடிக்கையைக் குற்றம் கூறி, களங்கம் கற்பிக்கும் வகையில் விமர்சிக்கப்பட்டுள்ளது. மேற்கூறியவை அனைத்தும் அவையின் ஒட்டுமொத்த உரிமையைப் பெரிதும் பாதிக்கின்ற வகையில் அமைந்திருப்பதால், இவற்றைச் சட்டமன்றப் பேரவையின் உரிமையை மீறிய செயல்களாகக் கருதி, இப்பிரச்சினையை, விதி 226-ன்கீழ், அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.

## 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழகத்தில், 'சார்ஸ்' நோய் பரவியுள்ள செய்தி குறித்தும், மற்றும் தமிழகம் முழுவதும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்தி வருவது குறித்தும், ஒத்திவைப்புத் தீர்மானமாக.... (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊத்துக்குளியில் மகாலிங்கம் என்பவர் கொலை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. பிறகு எடுத்துக்கொள்ளலாம்.



## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### 'சார்ஸ்' நோய் பரவியுள்ள செய்தி மற்றும் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது, தமிழகத்தில் 'சார்ஸ்' நோய் பரவியுள்ள செய்தி குறித்தும், மற்றும் தமிழகம் முழுவதும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மருத்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் நடத்தி வருவது குறித்தும் ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல் முருகன், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. டி. மணி, திரு. என். நன்மாறன், செல்வி க. பாலபாரதி, திரு. கே.சி. கருணாகரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. ப. அரசன் ஆகியோரும், கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ளக் கோரி திரு. ஐ. கணேசன், திரு. க. முருகவேல் ராஜன், திரு. மு. கார்த்தி, திரு. மே.ப. காமராஜ், திரு. கோ. இரவிராஜ், திரு. பி.எஸ். உலகரட்சகன் ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துக்கொள்ளக் கோரி திரு. லா. சந்தானமும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்கிற வகையில் ஏற்றுக் கொண்டு, கட்சிக்கு ஒருவர் என்ற அடிப்படையில், முதலில் திரு. சி. ஞானசேகரன் அவர்களைப் பேச அழைக்கிறேன். இரண்டையும் சேர்த்துப் பேசலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 நாட்களுக்கு முன்பே, நான் இந்த அவையில் கேள்வி நேரத்தின்போது— 'சார்ஸ்' நோய், இந்தியாவிற்குள் புகுந்திருக்கிறது; Severe Acute Respiratory Syndrome என்கின்ற இந்த நோய், சீனாவில் தொடங்கி, சிங்கப்பூர், ஹாங்காங் என்று பல்வேறு நாடுகளில் பரவி, பிறகு தமிழர்கள் அதிகமாக வாழக்கூடிய சிங்கப்பூர் பகுதியிலே இருக்கக்கூடிய தமிழர்கள், அவர்களுடைய உறவினர் வீட்டிற்கோ அல்லது சொந்த நாடான நம்முடைய தாயகத்திற்கோ திரும்புகிறபோது, அந்த 'சார்ஸ்' என்கின்ற நோயோடு, அவர்கள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரொம்ப விளக்க உரையாக வேண்டாம். ஏனென்றால், பல உறுப்பினர்கள் பேசுகிறார்கள். மானியக் கோரிக்கை வேறு இருக்கிறது.

*முற்பகல் 11-15*

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிட்டேன், முடித்துவிட்டேன். அப்படி வந்துவிடுகிற காரணத்தினால், முன்னெச்சரிக்கையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அமைச்சருக்கு ஒரு கோரிக்கையை அப்போதே வைத்தேன். சென்ற வாரம், திருவண்ணாமலை மாவட்டம், சந்தவாசல் பகுதிக்குப் பக்கத்தில் இருக்கக்கூடிய சின்னபுஷ்பகிரி என்கிற கிராமத்தைச் சேர்ந்த ஏழுமலை என்பவர் லாரி டிரைவர்; அவர் சிங்கப்பூரிலே லாரி ஓட்டுகின்ற பணியைச் செய்துவிட்டு தாயகத்திற்குத் திரும்பியபோது, அவருக்குக் காய்ச்சல், சளி, இருமல் போன்றவை இருந்த காரணத்தினாலே, அவர் சி.எம்.சி. மருத்துவமனைக்கு வந்தபோது, வேலூரில் சிகிச்சை பெறுவதற்காக வந்தபோது, அங்கே இருந்த சி.எம்.சி. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையினுடைய டாக்டர்கள்---டாக்டர் குரியன் தாமஸ், டைரக்டர் ஜார்ஜ் சேண்டி, மெடிக்கல் சூப்பிரண்டென்டெண்ட் ஆனந்த் ஜோ போன்றவர்கள் இதைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளாமல் மிக அக்கறையோடு---ஏனென்றால், சிங்கப்பூரிலிருந்து ஒருவர் வந்திருக்கிறார் என்று சொல்கிறபோது, அவருக்குக் காய்ச்சல், சளி, இருமல் இருக்கிறபோது, இதை லேசாக விட்டுவிடக் கூடாது என்பதற்காக, பலவித டெஸ்ட்களை அவர்கள் செய்து, உடனே Isolation Ward ஒன்றைத் தயார் செய்து, அந்த வார்டிலே அவரை அனுமதித்து, தீவிர சிகிச்சையை அவர்கள் கொடுத்து, பிறகு அரசுக்கும் தெரிவித்து, புனேயில் இருக்கக்கூடிய National Institute of Virology-க்கு அவருடைய blood, மூக்கில் இருந்து எடுக்கப்பட்ட swab, urine போன்றவற்றை எல்லாம் எடுத்து டெஸ்ட்டுக்காக அவர்கள் அனுப்பி, அந்த டெஸ்டினுடைய ரிசல்ட்டும் நேற்றைக்கோ, நேற்று முந்தைய தினமோ வந்துவிட்டது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்; அமைச்சர் சொல்ல வேண்டியதை எல்லாம் நீங்களே சொல்லிவிட்டால் எப்படி?

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, இல்லை, முடித்துவிடுகிறேன். இப்படி வந்திருக்கக்கூடிய சூழலில், 'சார்ஸ்' என்று அவர்கள் உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். அந்த 'சார்ஸ்' நோய் மேலும் நம்முடைய தமிழகத்தில் பரவாமல் இருப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன? எல்லா மருத்துவமனைகளிலும், இப்போது புதுவை போன்ற பகுதிகளிலும், நம்முடைய போளூரிலேகூட





சில மருத்துவமனைகளிலும் முகக் கவசம் போட்டு மருத்துவர்கள், அதேபோல மருத்துவமனைகளிலே பணியாற்றக்கூடிய பணியாளர்கள் தங்களுடைய கடமையை ஆற்ற வேண்டுமென்ற நிலைமையை உருவாக்கி இருக்கிறார்கள். அதேபோல, தமிழகம் முழுவதும் அப்படிப்பட்ட முகக் கவசம் போடுவதற்கான ஏற்பாட்டைச் செய்யவும் எல்லா அரசு மருத்துவமனைகளிலும் அதற்காக ஒரு தனி வார்டு, குறிப்பாக என்னுடைய வேலூர் பகுதியிலே ஒரு தனி வார்டு அமைப்பதற்கும் நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மருத்துவக் கல்லூரி மாணவர்கள் 7-வது நாளாகப் போராடி வருகிறார்கள்; அதேபோல பயிற்சி டாக்டர்களும் அவர்களோடு சேர்ந்து தங்களுடைய கோரிக்கையான தனியாருக்கு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க அனுமதி வழங்கக் கூடாது என்றும், பயிற்சி டாக்டர்களுக்குக் கொடுக்கக்கூடிய ஊதியத்தை உயர்த்தித் தர வேண்டும் என்றும், சில அரசுக் கல்லூரிகளிலே இருக்கக்கூடிய பாடங்களில் எம்.சி.ஐ.யின் அங்கீகாரம் இன்னும் கிடைக்காமல் இருக்கக்கூடிய நிலையில், 79 பாடப் பிரிவுகளுக்கு அங்கீகாரம் வேண்டும் என்றும், Primary Health Centre-களிலே பல் மருத்துவர்களை நியமிக்க வேண்டும் என்றும் இதுபோன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி 7 நாட்களாக அவர்கள் போராடி வருகிறார்கள். அவர்கள் பொறுப்போடு இப்போது மருந்துகளை வைத்து, Out patients-க்கெல்லாம் treatment கொடுக்கிறார்கள்; ரத்த தானம் கொடுக்கிறார்கள்; இப்போது உடலை வருத்திக் கொண்டு உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள்; மாணவர்களாக இருக்கிறபோது எதையும் அவர்கள் இப்படிக் கொஞ்சம் வீறுநடை போட்டு எப்படியாவது போராட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற உணர்வு அவர்களுக்கு இருக்கும்; அரசுதான் கொஞ்சம் விட்டுக் கொடுத்து, நிபந்தனை இல்லாமல் அவர்களை அழைத்துப் பேசுவதற்கு முன் வரவேண்டும். ஏனென்றால், நேற்றுக்கூட Director of Medical Education தூத்துக்குடியில் சொல்கிறபோது, அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டால்தான் அழைப்போம் என்று கூறி இருக்கிறார்கள். அது தவறு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன், அமைச்சர் விளக்கம் சொல்லுவார். நீங்கள் முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிடுகிறேன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம்,

முழுநேர நியாய விலைக் கடைகளைப் பிரித்து, தனியாகப் பகுதிநேர நியாய விலைக் கடைகள் ஆங்காங்கே அமைக்கப்படுகின்ற நேரத்திலே, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அந்த வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கடைகளை அமைப்பது; அந்தந்தப் பகுதியிலே இருக்கிற மகளிர் சுய உதவிக் குழுக்கள் விருப்பத்தைத் தெரிவித்து, அது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும், அந்த மாவட்டத்திலே இருக்கிற தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனமும் சேர்ந்து அங்கே கலந்து பேசி, எந்தப் பகுதியிலே அமைக்க வேண்டுமென்று அவர்கள் முடிவு எடுக்கிறார்களோ, அதைச் செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நியாய விலைக் கடைகள் சுய உதவிக் குழுக்களுக்குக் கொடுக்கப்படுகிறபோது, அவர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்கப்படுகிறதா? அல்லது அவர்கள் விற்பனை செய்யும் பொருட்களுக்கு Commission வழங்கப்படுகிறதா? அதேபோன்று, வருங்காலங்களிலே விற்பனையாளர்கள் பணியிடங்கள் காலியாகின்றபோது, இதுபோன்ற சுய உதவிக் குழுக்களிடம் ஒப்படைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் சுய உதவிக் குழுக்களாலே நடத்தப்படுகின்ற இந்தக் கடைகளிலே எல்லாம் எந்தவிதமான ஊதியமும் தரப்படுவது கிடையாது. அந்த அடிப்படையிலே அவர்கள், அவர்களுடைய சுய உதவிக் குழுவிலேயிருந்துதான் நிதியை அளித்து, இந்தக் கடைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நேரடியாக அவர்கள் பொருட்களை நுகர்வு செய்து, மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்கள் சில்லறை விளிம்புத் தொகையையும் அவர்கள் பயனாகப் பெறுகிறார்கள் என்பதை அவைக்குப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.



முன்வர வேண்டுமென்ற கோரிக்கையையும் வைத்து, தடுப்பு நடவடிக்கையாக நம்முடைய அரசு எந்த வகையிலே இந்த முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறது என்பதையெல்லாம் அறிய அரசின் கவனத்திற்கு நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கொண்டு வருகிறேன்.

*முற்பகல் 11-20*

அடுத்து, ஒரு வாரத்திற்கு மேலாக மருத்துவக் கல்லூரி மாணவர்கள், பயிற்சி மாணவர்கள் எல்லாம் போராட்டத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் போராட்டத்தினுடைய பிரதான நோக்கமாகச் சொல்வது, தனியார் மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டிலே வரக்கூடாது என்ற நிலை இதுவரையிலே இருந்து வந்து, இப்போது தமிழக அரசு ஒரு புதிய அரசாணையை வெளியிட்டிருக்கிறது; அந்த அரசாணை எண். எம்.எஸ். நம்பர் 211...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அந்த மாணவர்களுடைய போராட்டம் சம்பந்தமாக அமைச்சரிடம் நீங்கள் என்ன விளக்கம் கேட்க வேண்டுமோ, அதை மட்டும் கேளுங்கள். இப்போது நீங்கள் அதுபற்றி விளக்கவுரை ஆற்றுவதற்கு நேரம் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** அந்த அரசாணையிலே சொல்லப்பட்டு இருப்பது—அதுதான் அந்தப் போராட்டத்திற்கே காரணம். அந்த அரசாணையிலே சொல்லப்பட்டிருப்பது—ஏதோ புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான விண்ணப்பங்களை வரவேற்பதைப் போலவே அமைந்திருக்கிறது. ஆக, இதைக் கண்டுதான் மாணவர்கள் எல்லாம் பயத்திற்கு உள்ளாகி, தனியார் மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டிலே நுழைந்து விடுமோ என்ற அச்ச உணர்வின் காரணமாக இன்று போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த அரசாணையிலே இன்னொன்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 100 கிலோ மீட்டருக்கு உள்ளாக மருத்துவக் கல்லூரியோ, பல் மருத்துவக் கல்லூரியோ தொடங்கக்கூடாது என்ற நிலை மாறி இப்போது—Rural area—கிராமப்புறப் பகுதியாக இருந்தால் அங்கே தொடங்கலாம், அரசு அங்கீகரிக்கும் என்றவொரு நிலையும் அதிலே சொல்லப்பட்டிருப்பதாக அமைந்திருக்கிறது. ஆகவே, 100 கிலோ மீட்டர் எல்லை மாத்திரம் அல்ல, எக்காரணம் கொண்டும், எந்தச் சூழ்நிலையிலும் தமிழகத்திலே தனியார் மருத்துவக் கல்லூரிகள், பல் மருத்துவக் கல்லூரிகள் வருவதற்கு அரசு அனுமதிக்கக்கூடாது என்ற நிலையை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, அரசு மருத்துவக் கல்லூரிகள்,

பல கல்லூரிகளுக்கு அங்கீகாரம் இல்லை என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையையும் ஏற்று, இந்த அளவிலே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. முக்கியமாக மாணவர்களுடைய போராட்டம்தான் பிரச்சினை. அதற்கு அமைச்சரிடம் விளக்கம் கேளுங்கள். அதோடு முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் கோரிக்கையை ஏற்று பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்ற நேரத்தில், அமைச்சர் அவர்கள் நிபந்தனை இல்லாமல் பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும். ஆகவே, நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, அதே நேரத்திலே எந்தச் சூழ்நிலையிலும் மருத்துவக் கல்லூரி, பல் மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு அரசு அனுமதிக்கக் கூடாது என்ற நிலையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராடி வருகிற மருத்துவக் கல்லூரி மாணவர்களுடைய பிரச்சினையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு, நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளை நடத்தி, இந்தப் போராட்டத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். அவர்கள் முன்வைத்திருக்கிற நியாயமான கோரிக்கைகளை அனுதாபத்தோடு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, எதிர்கால மருத்துவர்களாக விளங்கப் போகிற அந்த மாணவர்களின் போராட்டத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.

அடுத்து, உலகத்தை அச்சுறுத்தி இருக்கக்கூடிய, அச்சுறுத்தி வரக்கூடிய, வேகமாகப் பரவி வரக்கூடிய, இன்னும் சொல்லப் போனால், தமிழ்நாட்டில் இப்போது ஒரு பீதியை உருவாக்கக்கூடிய அளவுக்கு ஏராளமான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த 'சார்ஸ்' நோய் சம்பந்தமாக—இதிலும்கூட--ஹக்கீம் பின்னாலேயிருந்து என்ன சொல்கிறார் என்றால், சீனாவிலிருந்துதான் இது வந்திருக்கிறது என்று அதிலும் கொஞ்சம் செருக முடியுமா என்று அவர் பார்க்கிறார். அது எங்கேயிருந்து வந்திருந்தாலும் சரி, தமிழ்நாட்டில் நீங்கள் எடுக்கிற தடுப்பு நடவடிக்கை உதவுமானால், அதைச் சீனாவிற்கு அனுப்பி



வைக்கலாம். எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆக, *26* நாடுகளிலே இது உருவாகி, வளர்ந்து, மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்டதுபோல, *4000*-க்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு, *250*-க்கும் மேற்பட்டவர்கள் இறந்திருக்கிறார்கள்.

முற்பகல் *11-25*

*20* பேரிலே ஒருவருக்கு சாவு நிச்சயம் என்று உத்தரவாதப்படுத்தப் பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் இங்கே என்ன எச்சரிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், வலுவற்ற நோய்த் தடுப்பு விதிகளும், அரைகுறைக் கண்காணிப்பு முறைகளும் நம்முடைய நாட்டிலே இருக்கின்றன. ஆகையினால், இது வேகமாகவும், பலமடையவும் . 'ய்ப்பு இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. வேலூரில் சி.எம்.சி. மருத்துவ மனையில் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த ஏழுமலை என்பவருக்கு இது உறுதி செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை வந்திருக்கிறது. ஆகவே, உண்மையிலேயே பயமாக இருக்கிறது. ஒன்று, நம்முடைய ஞானசேகரன் வேலூருக்குப் போவதைத் தடை செய்ய வேண்டும். இல்லையென்றால், அவர் போய்விட்டு இங்கு வருவதாக இருந்தால், சிறை அல்ல, அவருக்குத் தனி அறை வைக்க வேண்டும். (சிரிப்பு) நாம் எல்லாம் பாதுகாப்பாக இருக்க வேண்டி இருக்கிறது என்பதையும் சொல்லி, (சிரிப்பு) ஆகையினால்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஞானசேகரன் அப்படி வைக்கப்பட வேண்டிய ஆள்தான். (சிரிப்பு).

**திரு. கே.சி. கருணாகரன்:** ஆகையினால், இதன்மீது தீவிர நடவடிக்கைக்கு அரசு முன்வர வேண்டும், தகுந்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மக்களுக்கு இந்த நோயின்மீதும் தங்கள் வாழ்வின்மீதும் அச்சம் ஏற்படாமல் தடுக்க வேண்டும் என்று நான் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த ஏழுமலை என்பவருக்கு 'சார்ஸ்' நோய் இருப்பது உறுதி செய்யப்பட்டு இருப்பதாக மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இது

தமிழகத்திலே ஓர் அச்சத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அது பீதியாக மாற்றப்படக் கூடாது என்பதிலே எனக்கும் அழுத்தமான கருத்து இருக்கிறது. இருந்தாலும், அந்த நோயினுடைய தன்மையைப் பற்றிச் சொல்கிறபோது, மக்களுக்குப் பீதி ஏற்படக்கூடிய வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. ஆகவே, இந்தியாவிலே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாவது தடுக்கப்பட வேண்டும் என்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்று சொன்னாலும், வளர்ந்து இருக்கிற நாடுகளிலேயே தடுப்பது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. சீனா, ஹாங்காங், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இப்படிப்பட்ட பாதிப்பு ஏற்பட்டு, பல உயிர்கள் பலியாக்கப்பட்டு இருக்கின்றன என்ற செய்தி வந்து கொண்டிருக்கிறது. இந்தியா போன்ற மிகப் பெரிய நாடுகளிலே இது விரைவாகத் தடுக்கப்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற அந்த விருப்பத்தின் அடிப்படையிலேதான், அது கருத்தாகவும் அல்லது பீதியாகவும்கூட உருவாவதற்கான நிலைகள் ஏற்பட்டு இருக்கின்றன. குறிப்பாக, கருணாகரன் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, நமது இந்தியாவிலே நோயைத் தடுப்பதற்கான விதிகளும் இல்லை, கண்காணிப்பு முறைகளும் போதுமானதாக இல்லை என்ற ஒரு பொதுவான நிலை இருக்கிறது. ஆகவே இது வைரஸ் மூலமாகப் பரவுகிற நோயாக இருக்கிற காரணத்தினாலே தமிழ்நாட்டிலே எச்சரிக்கை உணர்வோடு நமது அரசு செயல்பட வேண்டுமென்ற என்னுடைய கருத்தை நான் வலுவாகப் பதிய வைக்க விரும்புகிறேன். குறிப்பாக, இப்போது ஏழுமலைக்கு உறுதி செய்யப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறபோது, அதற்குரிய கண்காணிப்பு முயற்சிகள், அதற்கான மருத்துவர்கள், அவரது சொந்தக் கிராமத்திலேயே தங்கி, கண்காணித்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்வது நல்ல செய்தி.

அதே நேரத்தில், தமிழ்நாட்டிலே இப்படிப்பட்ட நோய் வராமல் தடுப்பதற்கான முயற்சியை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள வேண்டும். புனேயிலே ஆராய்ச்சி செய்து அதன்மூலமாக அந்தத் தீர்வுகள் சொல்லப்படுவதாக அறிகிறேன். அதைப்போலவே, புனேயிலே இருப்பதைப்போல ஆராய்ச்சி மையத்தை, நல்ல திறமையுடன்கூடிய நமது மருத்துவர்களைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டிலே உருவாக்குவதற்கான முயற்சியை இந்தச் சந்தர்ப்பத்திலே செய்ய வேண்டுமென்று நான் இணைந்த முறையிலே அதில் வேண்டுகோளாக வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். கடந்த நூற்றாண்டிலே 'Flu' என்ற



வைரஸ் எப்படி மிகப் பெரிய கொள்ளை நோயாக மாற்றப்பட்டதோ, அதைப்போல இந்த நூற்றாண்டிலே 'சார்ஸ்' நோய் உருவாகி இருக்கிறது. ஆகவே, இது கொள்ளை நோயாக மாறுமானால், மிகப் பெரிய பாதிப்பு இந்தியாவிற்கு, தமிழகத்திற்கு வரும். அந்த நோயிலிருந்து தடுப்பதற்கான முயற்சியைத் தமிழகம் விரைவாக எடுத்து, முன்மாதிரியாக இருந்தது என்ற அடிப்படையிலே அதை உருவாக்குவதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, மருத்துவ மாணவர்களுடைய போராட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். அதிலே குறிப்பாக, மாணவர்களை அழைத்துப் பேசவேண்டும் என்று நீதிமன்றமே சொல்லி இருக்கிறது. அந்த அடிப்படையிலே, நீதிமன்றத்தினுடைய அந்த வேண்டுகோளையும் அறிவுரையையும் ஏற்று, நமது அரசு உடனடியாக மருத்துவ மாணவர்களை அழைத்துப் பேசி, அவர்களுடைய நம்பிக்கையைப் பெறுகின்ற வகையிலே, தனியார் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட மாட்டாது என்ற உத்தரவாதத்தைத்தர வேண்டும். மாணவர்கள் உதவித் தொகை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள், அதைக் கொடுப்பதற்கான முயற்சியையும் இந்த அரசு மேற்கொண்டு, நிபந்தனை இல்லாத முறையிலே உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். P.G. students கோரிக்கையும் அதிலே இணைக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் கோரிக்கையைப் பற்றியும் பரிசீலித்து, அதற்காகத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன்.

*முற்பகல் 11-30*

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சார்ஸ்' நோய் காற்றின் மூலமாகப் பரவுகிறது என்று சொல்கிறார்கள். நம்முடைய சட்டமன்றப் பேரவைக் கட்டடம் கடற்கரை அருகிலே இருக்கிறது. *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கேயும் எதற்கு பீதியைக் கிளப்புகிறீர்கள்? *(சிரிப்பு)*

**திரு. ப. அரசன்:** ஆகவே, எங்களுக்கெல்லாம் முகமூடி தருவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) முகமூடி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்படி அடையாளம் தெரிந்து நான் கூப்பிடுவது? (சிரிப்பு)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரசன் அவர்களின் அச்சத்தை இந்தக் கட்டத்திலேயே போக்கிவிடுவது நல்லது என்று கருதுவதால்தான் நான் விளக்கம் கூற எழுந்திருக்கிறேன். இந்த 'சார்ஸ்' நோய் குறித்து மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த வைரஸ் காற்றின் மூலம் பரவுவது இல்லை. பாதிக்கப்பட்டவரின் எச்சில் பட்டால்தான் அது பரவும்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வியாதி, இந்த நோய் வெளிநாட்டிலே இருந்துதான் வருகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, வெளிநாட்டிலே இருந்து வருகிற விமானப் பயணிகளை விமான நிலையங்களிலேயே மருத்துவப் பரிசோதனை செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஒரு வார காலமாக வீதியிலே அமர்ந்து போராடிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல பாடப் பிரிவுகளுக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்பது அதிலே ஒரு கோரிக்கை. அதைப்போல, பல் மருத்துவர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுவதற்கு அமர்த்த வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. புதிய தனியார் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க அனுமதி அளிக்கக்கூடாது என்ற அவர்களுடைய கோரிக்கையையும் கனிவோடு இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சார்ஸ்' என்கின்ற உயிர்க்கொல்லி நோயானது, கிழக்கு ஆசிய நாடுகளான சீனா, தாய்லாந்து, சிங்கப்பூர் போன்ற பகுதிகளிலே துவங்கி, அங்கிருந்து





இந்தியா வருகின்ற பயணிகளின் மூலமாக; ஏன்? தமிழகத்திலேகூட திருவண்ணாமலையைச் சேர்ந்த ஏழுமலை என்பவர் அதிலே பாதிக்கப்பட்டிருக்கிறார் என்கின்ற செய்தியை இன்றைக்கு நாம் உறுதி செய்திருக்கிறோம். அதுபோல, இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலே; ஏன்? கர்நாடகா, மகாராஷ்டிரா, டெல்லி, கொல்கத்தா போன்ற இடங்களில் எல்லாம் இது பரவி இருக்கிறது என்கின்ற செய்தி வந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும், தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, இந்த வியாதியை உடனடியாகக் குணப்படுத்துகின்ற ஒரு நிலையைக் கூட நமது மருத்துவர்கள் ஏற்படுத்தி இருக்கிறார்கள். பல்வேறு இடங்களிலே இந்த வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக உயிரிழக்கின்ற ஒரு நிலையும் இருந்திருக்கிறது. ஆனால், இங்கே C.M.C. மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள், அந்த ஏழுமலையை உடனடியாக மருத்துவமனையிலே அனுமதித்து, சிகிச்சை அளித்து, ஓரளவுக்கு அவர் குணமடைகின்ற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மருத்துவர்களை நாம் ஊக்குவிப்பதுபோல இந்த அரசுகூட அவர்களைக் கௌரவித்து, சில விருதுகளைக்கூட வழங்கினால் அவர்களுக்கு ஒரு ஊக்கமாக இருக்கும் என்கின்ற நிலையையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல, நமது தமிழகத்திலே அதிகமாகக் கிடைக்கின்ற பப்பாளிப் பழத்திலே இருந்து அதற்குரிய மருந்தைத் தயார் செய்ய முடியும் என்பதை ஜப்பானிய விஞ்ஞானிகள் கண்டறிந்து சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையிலும், இனி வருகின்ற காலத்தில் அப்படிப்பட்ட நோய் வருமானால், அதை ஒரு மருந்தாகப் பயன்படுத்துவதற்கு நமது அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, இப்போது மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஒரு வார காலமாகத் தங்களுடைய பல்வேறு கோரிக்கைகளை வைத்து வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இருக்கிறார்கள். அதற்கு உயர் நீதிமன்றம்கூட, உங்களுடைய வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு, அரசோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதைக் கூறியிருக்கிறது. அரசு பேச்சுவார்த்தை நடத்துவதாக இருந்தால், அவர்களிடத்திலே பேசுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்கின்ற நிலையை மாணவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்த அரசு, மாண்புமிகு அமைச்சரும், முதல்வர் அவர்களும் அதற்கு வழிகாட்டியாக இருந்து, அவர்களை அழைத்துப் பேசி, ஒரு சுமுகமான தீர்வினை ஏற்படுத்துவதற்கு முயல வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சார்ஸ்' என்று சுருக்கமாகச் சொல்லப்படுகின்ற 'Severe Acute Respiratory Syndrome' என்ற இந்த நோய் இன்றைக்குப் பயமுறுத்தி வருவதற்கும், பயங்கரமான இந்த நோயைப் பார்த்து உலக நாடுகளே பயப்படுவதற்கும் காரணம், இந்த நோய் ஒரு புதுமையான நோய், புதிய வகையான நோய். இது எந்த வகையில் பரவுகிறது என்பதிலே சில பேருக்கு சந்தேகம் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதைப்போல, இப்போது நடத்தப்பட்ட ஆராய்ச்சியின்படி, காற்றிலே பரவுவதைவிட, மனிதனுடைய எச்சில் மூலமாகத்தான் அது அதிகமாக மற்றவர்களைத் தாக்குகிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இது ஆராயப்பட வேண்டிய ஒரு நோயாக இருந்து வருகிறது. இன்னும் சொல்லப் போனால், இதற்கு மருந்து இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்பதும் பயத்திற்கு ஒரு மிக முக்கியமான காரணமாக இருக்கிறது. எனவே, நான் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்வது, பத்திரிகையிலே, மிகவும் பயங்கரமான ஒரு வியாதியாக இது பரபரப்பாகச் சொல்லப்படுவதன் மூலம் மக்கள் மத்தியிலே ஒரு பீதி ஏற்படுகிறது. ஆனால், இந்த வியாதியால் பாதிக்கப்பட்ட அனைவரும் இறந்து விடுவதில்லை. அதுதான் உண்மை. அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். மற்ற நோயால் இறப்பதைப் போலத்தான் இதிலும் mortality rate இருக்கிறது. இப்போது சாதாரணமாக T.B. (காச நோய்) என்று எடுத்துக்கொண்டால்கூட, 2% mortality rate, இறப்பு விகிதம் இருக்கிறது. அதைப்போல, typhoid என்று எடுத்துக்கொண்டால்கூட 2% இருக்கிறது. எனவே, அந்த வகையிலே 'சார்ஸ்' நோய்க்குக்கூட மற்ற வியாதியைப், போல 5% தான் இறப்பு விகிதம், mortality rate இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, தாக்கப்படுகிற அனைவரும் அல்லது இந்த வியாதியால் பாதிக்கப்படுகிற அனைவரும் இறந்துவிடுவதில்லை. காரணம், மனிதனுடைய உடலில் நோய் எதிர்ப்பு சக்தி இருக்கிற வரை இந்த நோயை நாம் சமாளித்துக்கொள்ளலாம். எனவே, அந்த வகையிலே இந்த நோயைப் பொறுத்த வரையில், ஆறுதலான செய்தி நமக்கு ஒன்று இருக்கிறது என்று சொன்னால், இந்த நோய் குறிப்பாக குளிர்



பிரதேசத்தைத்தான் தாக்குகிறது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நீங்களேகூட பார்த்தீர்களானால், இந்த நோயால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிற சீனா, ஹாங்காங், கனடா, சிங்கப்பூர் மற்றும் வியட்நாம் ஆகிய இந்த நாடுகளிலெல்லாம் இப்போது குளிர் அதிகமாக உள்ள சூழ்நிலையில், குளிர்காலமாக இருப்பதால் அங்கு அதிகமாகத் தாக்குகிறது. ஆனால், நம்முடைய நாட்டைப் பொறுத்த வரையில் நம்முடைய நாடு வெப்ப நாடு. அதிலும் இப்போது summer start ஆகிவிட்டது. எனவே, இந்த வைரஸைப் பொறுத்தவரையில், இந்த வெப்பத்தைத் தாங்கிக்கொள்ள முடியாது என்று சொல்கிறார்கள். எனவே, அந்த வகையிலே நம்முடைய நாட்டுக்கு அதிகமாக நிச்சயமாகப் பாதிப்பு இருக்காது என்று--ஓர் ஆறுதல்தான்--- ஓர் ஆறுதலான செய்தி வந்திருக்கிறது.

இப்பொழுது வேலூரிலே அனுமதிக்கப்பட்டிருக்கின்ற ஏழுமலை என்ற 'சார்ஸ்' வியாதியால் பாதிக்கப்பட்ட அந்த நோயாளி, சிங்கப்பூரில் ஐந்தாண்டுகள் டிரைவராகப் பணியாற்றிவிட்டு இங்கே திரும்பி இருக்கிறார். இங்கு விமான நிலையத்திலே வந்தவரை, விமான நிலையத்திலே இருந்த டாக்டர்கள் குழு, அவருக்கு ஏதாவது பாதிப்பு இருக்கிறதா என்று, ஒரு அட்டையைக் கொடுத்து அந்த விளக்கங்களையெல்லாம் கேட்டிருக்கிறார்கள். எனக்கு எதுவும் இல்லையென்று சொல்லி அவர் இங்கிருந்து எப்படியோ தப்பித்துவிட்டார். அங்கே வேலூரிலே போகிறபோது, அந்த நோய்க்கே இருக்கின்ற அதிகப்படியான காய்ச்சல், 104 degree காய்ச்சல், சளியில்லாத இருமல், அதைப்போல உடம்பு வலி, இந்த வலி இருந்ததால் சி.எம்.சி. மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் சொன்னதைப்போல, அந்த டாக்டர்கள் சந்தேகப்பட்டு, அவரை அங்கே அனுமதித்து நல்ல முறையில் சிகிச்சை அளித்திருக்கிறார்கள். நிமோனியா காய்ச்சலுக்கு என்ன சிகிச்சை அளிக்கப்படுகிறதோ, அதே சிகிச்சையை நல்ல முறையில் அளித்திருக்கிறார்கள். அந்த ஏழுமலை இப்போது நன்றாகக் குணமாகி விட்டார். நல்ல முறையில் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார். புத்தகம் படித்துக் கொண்டிருக்கிறார். நல்ல உடல் நலத்தோடு இருக்கிறார். இருந்தாலும், அவருடைய ரத்தத்தைப் பரிசோதனைக்கு Pune-க்கு அனுப்பி, அந்தப் பரிசோதனையின் முடிவு, அங்கே Pune-யிலுள்ள National Institute of Virology என்ற நிறுவனத்திலிருந்து, அந்தப் பரிசோதனையினுடைய முடிவு நேற்றுதான் வந்தது.

'S.A.R.S. Positive' என்றுதான் வந்திருக்கிறது. இருந்தாலும், இப்போது அவர் குணப்படுத்தப்பட்டிருக்கிறார். நேற்று முன்தினமே, அவர் discharge செய்யுங்கள், நான் வீட்டிற்குப் போகிறேன் என்று சொல்லி, டாக்டர்களைக் கேட்டுக்கூட டாக்டர்கள் மறுத்து விட்டார்கள். காரணம், அவர் இங்கே இருப்பதுதான் பாதுகாப்பு என்று சொல்லி அவரைத் தனி அறையிலே வைத்து, அங்கே பாதுகாப்பாக மேலும் சிகிச்சை அளித்து வரப்படுகிறது. அவர் நல்ல நிலையிலே இருக்கிறார். உடல் நலம் தேறிவிட்டது. எனவே, அபாயம் இல்லை. இருந்தாலும், நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அனைத்து மருத்துவமனைகளிலும்--தமிழகத்திலே இருக்கிற அனைத்து மருத்துவமனைகளிலும்--இதுகுறித்து உஷார்படுத்தி, அதற்கு வேண்டிய தேவைகளை நீங்கள் செய்து கொடுங்கள் என்று எங்களுக்கு உத்தரவிட்டதன்பேரில், தண்டையார்பேட்டை தொற்று நோய் மருத்துவமனையிலே அதற்கென்று ஒரு தனி வார்டை ஏற்படுத்தி, 20 படுக்கைகளை நாங்கள் ஒதுக்கி இருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவுப்படி சென்னை மருத்துவமனையிலே 4 படுக்கைகள் கொண்ட தனி வார்டை இப்போது ஏற்படுத்தி இருக்கிறோம்.

*முற்பகல் 11-40*

இப்போது வேலூரிலே நம்முடைய அடுக்கம்பாறை காச நோய் மருத்துவமனையிலே அதற்காக 10 படுக்கைகள் கொண்ட தனி வார்டை ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆலோசனைப்படி உத்தரவிட்டிருக்கிறோம். எனவே, இதுகுறித்து பீதி அடைய வேண்டியதில்லை. பயம் அடைய வேண்டியதில்லை. நாங்கள் ஏற்கெனவே இந்தத் தகவல் எங்களுக்கு வந்தபோது, விமான நிலையத்திலும், துறைமுகத்திலும் நம்முடைய டாக்டர்கள் குழுவையும், அங்கே இருக்கிற டாக்டர் குழுவோடு ஒத்துழைப்புக்காக அனுப்பி நல்ல முறையிலே, அங்கே வருகின்றவர்களை--விமானத்திலே வருகின்றவர்களை--துறைமுகத்தைப் பொறுத்த வரையிலே, அங்கே பயணிகள் கப்பல் எதுவும் வருவதில்லை. சரக்குக் கப்பல்கள் வருகின்றன. அதிலே வருகிற sailors-ஐ--எல்லாம் நாங்கள் பரிசோதித்து, நல்ல முறையிலே அவர்களுக்கு சிகிச்சை அளித்து, இந்த நோய் இருக்கிறதா என்று எச்சரிக்கையாக நாங்கள் கண்காணித்துக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், இது உலகத்தையே உலுக்கக்கூடிய ஒரு பயங்கரமான நோயாக இருப்பதாலே,





தமிழக முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டிலே இதற்காக ஒரு State Level Committee-ஐ ஏற்படுத்த வேண்டுமென்று எங்களுக்கு உத்தரவிட்டதன்பேரில் நம்முடைய Airport Authority, Port Authority, அதேபோல, சுகாதாரத் துறை அதிகாரிகள். I.M.A.-Indian Medical Association என்பதன் பிரதிநிதிகள், National Institute of Epidemology என்ற அதனுடைய பிரதிநிதிகள். அதேபோல National Institute of Medical Research என்ற அந்த நிறுவனத்திலே இருக்கிற பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், N.G.O.-க்களுடைய பிரதிநிதிகள் ஆகியோரை எல்லாம் கொண்டு மாநில அளவிலான ஒரு கமிட்டியை இங்கே ஏற்படுத்தச் சொல்லியிருக்கிறார்கள். அந்த கமிட்டியை அமைப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். எனவே, அனைத்து மாவட்டங்களிலுமே இதுபோன்று எச்சரிக்கையோடு மருத்துவமனைகள் இருக்க வேண்டும் என்று நாங்கள் மருத்துவமனைகளை உஷார்படுத்தி இருக்கிறோம். எனவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் பப்பாளியைச் சாப்பிடுவது இந்த நோய்க்கு எதிர்ப்பு சக்தியைக் கூடுதலாக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபோல, துளசிச் சாறு இந்த நோய்க்கு நல்ல மருந்து என்று சொல்கிறார்கள். அந்த வைரஸைக் கொல்லுகின்றன, துளசியும், மிளகும். எனவே நம்முடைய உணவே மருந்து. அந்த வகையிலே, பப்பாளி, துளசி, மிளகு இவற்றைக்கூட நாம் சாப்பிட்டு, ஓரளவிற்கு நம்மைத் தற்காத்துக்கொள்ளலாம். காரணம் நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், மருந்து சாப்பிடுவதைவிட, உணவே மருந்து என்கிற வகையிலே, உணவிலேகூட நாம் நம்முடைய உடலிலே எதிர்ப்பு சக்தியை நாம் இந்த நேரத்திலே ஏற்படுத்திக் கொள்ளலாம். இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால், வளரும் இளம் பெண்களுக்கு நாங்கள் இரும்புச் சத்து மாத்திரை, Folic Iron Tablet-ஐக் கொடுத்து வந்தோம். இரும்புச் சத்து மாத்திரை. எங்களுடைய துறையை ஆய்வு செய்தபோது, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னது, இந்த மாத்திரைகளைவிட இரும்புச் சத்து, வளரும் இளம் பெண்களுக்கு நீங்கள் அதிகமாக அந்த இரும்புச் சத்தைக் கொண்டு வருவதற்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், கருவேப்பிலை சட்னி, அதேபோல முருங்கைத் தழை--முருங்கைக் கீரையைச் சாப்பிட்டாலேகூட அதிக இரும்புச் சத்து வரும் என்று சொன்னதன் அடிப்படையில், நாங்கள் இப்போது துணை இயக்குநர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு

நாங்களே எங்களுடைய துறையின் மூலம் கடிதமே எழுதி இருக்கிறோம். நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 'சார்ஸ்' நோயைப் பொறுத்த வரையில், மாண்புமிகு உறுப்பினர்களும், தமிழக மக்களும் அதிக அளவுக்குப் பீதி அடையத் தேவையில்லை என்பதற்காக, அவர்களுக்குத் தைரியமூட்டுகிற ஒரு செய்தியை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11-45*

வேலூர் சி.எம்.சி., மருத்துவமனையில் 'சார்ஸ்' நோயால் பாதிக்கப்பட்ட இந்த நோயாளிக்கு சிகிச்சை செய்த ஒரு மருத்துவர் நேற்றுத் தொலைக்காட்சியில் அளித்த பேட்டியை நான் பார்த்தேன். அப்போது அந்த மருத்துவர் தெளிவாகக் குறிப்பிட்டார்; இந்த நோயாளியுடன் அதே மருத்துவமனையில் அவருடைய உறவினர்கள் ஏறக்குறைய 15 பேர் அங்கேயே சில நாட்கள் இருந்திருக்கிறார்கள். அதனால் சந்தேகத்தின் பேரில், இந்த உறவினர்கள் 15 பேரையும் தனி அறைகளில் வைத்து, அவர்களையும் மருத்துவர்கள் சோதித்துப் பார்த்திருக்கிறார்கள், ஆனால், இந்த உறவினர்களில் ஒருவருக்குக்கூட 'சார்ஸ்' நோய் வரவில்லை. ஆகவே, அவர்கள் அனைவரும் அங்கிருந்து அனுப்பப்பட்டு விட்டார்கள். ஆகவே, அந்த மருத்துவர் தெளிவாகச் சொன்னார், ஒருவர் 'சார்ஸ்' நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் அவர் அருகில் இருப்பதாலோ அல்லது அவரைத் தொடுவதாலோ, அந்த நோய் தொற்றிக்கொண்டு விடாது. மாறாக, அந்த 'சார்ஸ்' நோயாளி இருமும்போது அல்லது தும்மும்போது, அந்த எச்சில் துளிகள், அந்த saliva நம்மீது பட்டால் அப்போதுதான் நமக்கும் அந்த நோய் தொற்றிக்கொள்ளும் அபாயம் ஏற்படுகிறது. அதனால், 'சார்ஸ்' நோய் என்பது, காற்று மூலமாக அவ்வளவு எளிதில் பரவிவிடாது என்பதை மருத்துவர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல், மாண்புமிகு உறுப்பினர்கள் தினந்தோறும் ஒரு பப்பாளிப் பழத்தைச் சாப்பிட்டால் அதுவே போதுமானது; 4,5 துளசி இலைகளை நீங்கள் உண்டால் அதுவே போதுமானது; 'சார்ஸ்' நோய் வராமல் தவிர்த்து விடலாம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் விளக்கம் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சி.எம்.சி. மருத்துவர் மிகச் சிறப்பாக இதிலே பணியாற்றுகிறார். குறிப்பாக, குரியன் தாமஸ் அவர்களையும் இந்த State Level Committee-ல் உறுப்பினராகப் போட்டால், அவருடைய அனுபவம் இதற்கு நிச்சயமாக உதவும் என்ற வகையிலே, அவர்கள் நியமனம் செய்யப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி மாநில அளவிலான Committee போடப்படுகிறபோது நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும். எனவே, அந்த வகையிலே நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதைப்போல, இந்த நோயைப் பற்றி தமிழக மக்கள் யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. இருந்தாலும், அலட்சியமாக இருந்துவிடக் கூடாது என்ற அந்த அடிப்படையில் தீவிரக் கண்காணிப்போடு இருக்க வேண்டுமென்று எங்கள் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, அனைத்து மருத்துவமனைகளிலும் டாக்டர்கள் குழு இது குறித்து கண்காணிப்போடு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள், பயிற்சி டாக்டர்கள் சில கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடி வருவதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். நான் சென்ற வாரமே, இந்த அவையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கிறபோது, அவர்கள் எந்தவித முன்னறிவிப்புமின்றி, திடீரென்று போராட்டத்தில் இறங்கிவிட்டார்கள், எங்களுக்கேகூட பத்திரிகையிலே பார்த்த பிறகுதான் அந்தத் தகவலே வந்தது. எனவே, அந்த அடிப்படையிலே, நீங்கள் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு வாருங்கள், பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியும், அவர்கள் வரவில்லை. இன்னும் சொல்லப் போனால், அவர்கள்மீது எந்த நடவடிக்கையுமே நாங்கள் எடுக்கவில்லை. இருந்தாலும், அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய், எங்களை விடுதியிலேயிருந்து அப்புறப்படுத்தக் கூடாது, விடுதியை மூடக்கூடாது என்று சொல்லி, அவர்களாகவே

[திரு. செ. செம்மலை] [2003 ஏப்ரல் 30

கோர்ட்டிலே போய் ஒரு தடையாணை வாங்கியிருக்கிறார்கள். எனவே, எங்களை விளக்கம் கேட்கிறபோது, நாங்கள் நிலைமையைச் சொன்னோம். நிலைமையைச் சொன்ன பிறகு, நீதிமன்றமேகூட அந்தத் தடையாணையை நீக்கிவிட்டு, அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், வருகிற வியாழக்கிழமைக்குள் மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு வகுப்புக்குச் செல்ல வேண்டும், பயிற்சி டாக்டர்கள் பயிற்சிகளுக்குச் செல்ல வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதைப்போல, அரசின் சார்பிலே மாணவர்களுக்கு அவர்களுடைய கோரிக்கையைச் சொல்வதற்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டுமென்ற அந்த ஆலோசனையையும் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும், எங்களை அழைத்து, மாணவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி, அவர்களுடைய கோரிக்கையைக் கேளுங்கள் என்று எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். வருகிற 3 ஆம் தேதியே நீங்கள் பேச்சுவார்த்தைக்கு அவர்களை அழைத்துப் பேசுங்கள் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இருந்தாலும், இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தனியார் கல்லூரியைப் பொறுத்த வரையிலே, அது கூடாது என்ற ஒரு கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். உங்களுக்கே தெரியும், இந்த இரண்டு ஆண்டுகளிலே தமிழக அரசு எந்த மருத்துவக் கல்லூரிக்கும் அனுமதிக்கவில்லை, பரிந்துரை செய்யவில்லை. அப்படி அனுமதியளிக்கின்ற அதிகாரமும் எங்களுக்கு இல்லை. அது M.C.I.-யினுடைய வேலை; மத்திய சர்க்காருடைய வேலை. எனவே, இதிலே தேவையில்லாமல், நீங்கள் எங்களிடமிருந்து என்ன வார்த்தை வருகிறது என்று எதிர்பார்ப்பதற்கு இதை நீங்கள் எங்களிடம் சொல்ல வேண்டியதில்லை.

*முற்பகல் 11-50*

இன்னும் சொல்லப் போனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் இங்கே பேசுகிறபோது சொன்னார்கள், அதேபோல, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுகிற, அந்த மாணவர்கள் சொல்லுகிற கோரிக்கைகளை எல்லாம் நாங்கள் கேட்டு, பேச்சுவார்த்தைக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்; அவர்களுடைய கோரிக்கைகளாக 2, 3 கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். ஒன்று, கட்டணம் உயர்த்தக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல்,



2003 ஏப்ரல் 30] [திரு. செ. செம்மலை]

stipend-ஐ ஏற்ற வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து அரசு நிச்சயமாகப் பரிசீலித்து, அவர்களுடைய கோரிக்கைகளை நாங்கள் கேட்டு, அதற்கு நல்ல முடிவெடுப்போம் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லி, மாணவர்கள் Court-னுடைய--நீதிமன்றத்தினுடைய உத்தரவை ஏற்று, அவர்கள் போராட்டத்தை விலக்கிக்கொண்டு பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு அமைகிறேன்.

## 5. கவன ஈர்ப்பு

### அ) விளவங்கோடு வட்டம், மீனவ கிராமங்களில் கடல் அரிப்பு, தடைக்கற்கள் இடைவெளிவிட்டுப் போடுவதால் ஏற்பட்டுள்ள நிலை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு; திரு. டி. மணி அவர்கள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், மீனவ கிராமங்களில் கடல் அரிப்பினைத் தடுக்க தடைக்கற்களை இடைவெளி விட்டுப் போடுவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

#### அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், மார்த்தாண்டம் துறை, சின்னத்துறை, பூத்துறை, வள்ளவிளைத்துறை போன்ற கடலோரக் கிராமங்களில் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் I.I.T. நிபுணர்களின் ஆலோசனைகளின்படி கடலரிப்புத் தடுப்புப் பணிகள்

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில் இடைவெளி இருப்பது உண்மை. இந்த இடைவெளிகளில் இரண்டாம் கட்டமாக கடலரிப்புத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தந்திருக்கக்கூடிய விவர அறிக்கையில், தெளிவாக எதைச் செய்கிறோம் என்றெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த வேலை ஆரம்பிக்கின்றபோது அல்லது அதற்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கின்றபோது என்னுடைய கவனத்திலே இதைக் கொண்டு வந்திருந்தால், இந்த இடர்ப்பாடு ஏற்பட்டிருக்காது. ஏனென்றால், 4 வருடங்களுக்கு முன்னால் வள்ளவிளை என்ற கிராமத்தில் கடல் அரிப்பால் 33 வீடுகள் இழுத்துச் செல்லப்பட்டன. ஒரு உயிர்ச் சேதமும் ஏற்பட்டது. அந்த இடத்திலே தான் இவர்கள் இந்த gap-ஐ, இடைவெளியை ஏற்படுத்தி இருக்கிறார்கள். எனவேதான், 4 பகுதிகளிலே, மார்த்தாண்டம்துறை பகுதி, வள்ளவிளை கிராமம், அதுபோன்று சின்னத்துறை, பூத்துறை போன்ற 4 பகுதிகளிலே இடைவெளியிருக்கிறது. வரக்கூடிய 2 மாதங்கள் தாண்டினால், அந்தப் பகுதிகளினுடைய கால நிலை அடிப்படையிலே பார்த்தால், ஆனி, ஆடி மாதங்கள் மிகப் பெரிய கடல் சீற்றம், கடல் கொந்தளிப்பு ஏற்படுகின்ற காலம். அதற்கு முன்னால் இந்த இடைவெளியை அடைக்கவில்லை என்று சொன்னால், தடுக்கவில்லை என்று சொன்னால், மீண்டும் இந்த வீடுகள் ஆக்கிரமிக்கப்படுகின்ற ஒரு பேரபாயம் இருக்கிறது. எனவேதான், இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து, இங்கே வருவதற்கு முன்னால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அந்தக் கிராமத்திற்கு அழைத்துச் சென்று அவர்களும் பார்த்திருக்கிறார்கள். ஆனால் இந்த இடைப்பட்ட காலத்திலே இதைச் செய்து முடிக்க முடியுமா என்ற கேள்வியை அவர்கள் வைத்திருக்கிறார்கள். எந்த வகையிலாவது துரிதமாக, இந்த ஆனி, ஆடி மாதங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னால் அதைத் தடுத்து நிறுத்தக்கூடிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கடற்கரை ஓரங்களில் மிகுந்த





அலையின் காரணமாக, அலையின் சீற்றத்தின் காரணமாக, அந்தப் பகுதியில் இருக்கின்ற பகுதிகள் மிகுந்த கடல் அரிப்பிற்கும், அப்பகுதியில் இருக்கின்ற மீனவக் குடும்பங்கள் வெகுவாகப் பாதிக்கப்படுவதைப் பற்றி, கடந்த தி.மு.க அரசு காலத்தில், திரு. கருணாநிதி தலைமையிலான தி.மு.க அரசின் 5 ஆண்டு காலத்தில் இந்தக் கோரிக்கை வலுவாகச் சொல்லப்பட்டது. அவர்கள் அந்த ஐந்தாண்டு காலமும் கடலோர மீனவக் குடும்பங்களின் கோரிக்கையினைக் கிடப்பிலே போட்டு வைத்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இப்பிரச்சினை வந்தவுடனேயே இப்பிரச்சினை தீர்வதற்கு உடனடியாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்தார்கள். அந்த அடிப்படையில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் கடல் அரிப்பினால் பாதிக்கப்படுகின்ற பகுதிகளைத் தடுத்து நிறுத்துவதற்கு ஆய்வுகள் மேற்கொள்வதற்காக Indian Institute of Technology-யைச் சேர்ந்த நிபுணர்களின் ஆய்வுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்த நிபுணர்கள் அந்த நான்கு மாவட்டங்களுக்கும் நேரடியாகச் சென்று, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, எந்தெந்த இடங்களில் உடனடியாகப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், கடல் அலையினால் கடல் அரிப்பு, மிகுதியாக இருப்பதைக் கண்டு, அவர்கள் 35 இடங்களை அடையாளம் காட்டினார்கள். உடனே அந்த 35 இடங்களுக்கும் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக 57 கோடியே 68 இலட்சம் ரூபாயை ஒதுக்கி ஆணை பிறப்பித்தார்கள்.

*முற்பகல் 11-55*

அந்தப் பணிகள், இன்று கடல் அரிப்பைத் தடுக்கின்ற—தடுப்புக் கற்சுவர்கள் அமைத்து, தடுக்கின்ற--பணியாக 29 பணிகளும், தூண்டில் வளைவுப் பாலங்கள் பணியாக 7 பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இடைப் பகுதிகளில் கடல் அலை மிகுதியாக இருப்பதனால், அந்தப் பகுதியும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று இங்கே கோரிக்கையைச் சொல்லி இருக்கின்றார்கள். இரண்டாம் கட்டப் பணியாக அந்தப் பணியையும், Indian Institute of Technology நிபுணர்களை அழைத்துச் சென்று, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய

கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஒப்புதல் பெற்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதைப்போல, நம்முடைய தமிழகத்தில் கடற்கரையினுடைய நீளம் 960 கிலோ மீட்டர். அதில் 900 கிலோ மீட்டர் வங்காள விரிகுடாக் கடல் ஓரமாகவும், 60 கிலோ மீட்டர் அரபிக் கடல் ஓரமாகவும் அமைந்திருக்கின்றது. நம்முடைய வட சென்னை பகுதியில் கடல் அலையினால் கடல் அரிப்பு மிகுதியாகக் காணப்படுவதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தவுடனேயே, 2.38 கிலோ மீட்டர் நீளம் உள்ள எண்ணூர் நெடுஞ்சாலைக்கு, கடல் அரிப்புப் பணிகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் உடனடியாக ரூபாய் 10 கோடியே 58 இலட்சத்தினை ஒதுக்கி ஆணையிட்டிருக்கின்றார்கள். ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு முடிவுறும் தறுவாயில், இன்னும் ஓரிரு தினங்களில் அப்பணி ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, கடற்கரையைப் பாதுகாக்கின்ற திட்டத்தின்கீழ், இதுவரை எந்தத் திட்டத்திலும் சேராத ஏழு மாவட்டங்களில் உள்ள 13.824 கிலோ மீட்டர் நீள கடற்கரைப் பாதுகாப்பினைப் மேற்கொள்ளும் பொருட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ரூபாய் 169 கோடியே 39 இலட்சத்திற்குத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, மைய நீர்வள ஆணையத்திடம் 5-9-2002 அன்று அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது. அங்கிருந்து ஒப்புதல் கிடைத்தவுடன், அந்தப் பணியும் மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தெளிவான விளக்கங்களை எல்லாம் இங்கே தந்திருக்கின்றார்கள். தலையீடு என்பது, நடந்திருக்கின்ற நிகழ்ச்சிகள் என்பதெல்லாம் வரவேற்கக்கூடிய விஷயம். இருந்தாலும்கூட, சாதாரணமாகக் கற்களை மலை போல் குவிப்பதுதான் இவர்களுடைய பணியாக முன் காலங்களிலே இருந்தது. ஆனால் தற்போது அதை வேறு ஒரு ரீதியிலே, விஞ்ஞான ரீதியாக, இந்தக் கடல் அலை, கற்களை



இழுத்துப் போகாத நிலையில், மணலுக்குள்ளே அமுங்கிப் போகாத நிலையில் ஒரு சம்பிரதாயத்தை மேற்கொண்டிருக்கின்றார்கள். இது வரவேற்கத்தக்க விஷயம்; பாராட்டக்கூடிய விஷயம். ஆனால் நான் இங்கே குறிப்பிட்டிருக்கின்ற அந்த இடைவெளி என்பதை இந்தக் குறுகிய காலத்திற்குள்ளே தடுக்கவில்லை என்று சொன்னால், வீடுகள் ஆக்கிரமிக்கப்படும். வீடுகள் ஆக்கிரமிக்கப்படுகின்றபோதுதான், ஏற்கெனவே நான் முன்னாலே நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சொன்னேன். உயிர்ச் சேதம் ஏற்பட்டிருந்தது. அந்த வகையிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

நண்பகல் 12-00

**திரு. டி. மணி:** அந்த வகையிலே இதைச் செய்வதற்கு, அந்த இடைப்பட்ட காலத்திலே அந்த இடைவெளியை நிஜமாக அடைப்பதற்குத் துரித நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைவெளிப் பகுதியில் இருக்கின்ற மக்களை எச்சரிக்கை செய்து, கடல் அலை ஏற்படுகின்ற, வருகின்ற மாதங்களில் அங்கிருந்து பாதுகாப்பான இடங்களில் அமரச் செய்வதுடன், இரண்டாம் கட்டப் பணியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடங்களில் பணிகளை எடுத்துக்கொள்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுமெனத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## (ஆ) செஞ்சி, வனப் பகுதிகளில் வனத் துறை நடும் மரக்கன்றுகளால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. வெ. ஏழுமலை.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செஞ்சி தொகுதியிலுள்ள அத்தியூர், கொசப்பாளையம் வனப் பகுதிகளில் வனத் துறையினரால் மரக் கன்றுகள் வறட்சி சூழ்நிலையில்

நடுவதால் அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

**அறிக்கை**

தமிழகத்தில் உள்ள 22845 சதுர கிலோ மீட்டர் பரப்பில் உள்ள காடுகளில் 7000 சதுர கிலோ மீட்டர் தரமிழந்துள்ளது. இதனால் 3000-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஜப்பான் நாட்டிடை கூட்டுறவு வங்கியின் கடனுதவி மூலம் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் 1997-98 முதல் தமிழகத்தில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கூட்டு வன நிர்வாக அடிப்படையில் கிராம வளர்ச்சியும், காடு வளர்ப்பும், ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு அடிப்படையிலான மேம்பாட்டுப் பணியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வன வளர்ப்பு, வறுமை ஒழிப்பு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் மழை நீர் சேகரிப்புப் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

2. செஞ்சி தொகுதியில் 2000 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட அத்தியூர் திட்ட கிராமத்தின் அருகில் உள்ள காப்புக் காட்டில் 350 எக்டேர் பரப்பளவிலும், கொசப்பாளையம் திட்ட கிராமத்தின் அருகில் உள்ள காப்புக் காட்டில் 2001 ஆம் ஆண்டில் 330 எக்டேர் பரப்பளவில் மர வளர்ப்புப் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் எழுப்பப்பட்டுள்ள தோட்டங்களில் உயிர்ச் செடிகளின் சதவீதம் 80 விழுக்காடு அளவு உள்ளது. வறட்சியினைத் தாங்கும் விதத்தில் நல்ல தரமான, வீரியமான மற்றும் உயரமான மரக்கன்றுகள் இத்திட்டத்தில் நடப்படுகின்றன. மழைக் காலங்களில் நீரைத் தேக்கி வைக்கக்கூடிய அளவில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் செய்யப்பட்டதால் ஈரப்பதம் நீண்ட நாட்களுக்கு நிலைநிறுத்தப்பட்டு, மரக்கன்றுகள் நன்கு வளரும் தன்மை அடையுமாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



நன்கு வளர்ச்சியடைந்த செடிகள், மண்வளப் பாதுகாப்பு, இதர வேலைகள் (வனத் துறை) காப்புக் காடுகளில் செய்ததன் பொருட்டு, இக்கடும் வறட்சிக் காலத்திலும் 80 சதவீத மரக்கன்றுகள் உயிரோடிருப்பது சிறப்பு வாய்ந்ததாகும். இது மட்டுமன்றி, இப்பகுதியில் உள்ள கிராம வனக் குழுக்கள் இத்தோட்டங்களுக்கு நல்ல சமூகப் பாதுகாப்பு நல்கி, கால்நடை மற்றும் நெருப்பினால் ஏற்படும் சேதங்களைத் தடுத்து வருகிறார்கள். எனவே, வறட்சியினால், இப்பகுதியில் அரசுக்கும் சேதம் ஏதுமில்லை.

**நீர் வள மேம்பாடு**

இப்பகுதிகளின் வறட்சித் தன்மையைக் கருத்தில்கொண்டு, இத்திட்டத்தின் வாயிலாக வனப் பகுதிகளில் பல்வேறு வகையான மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகள் செய்யப்பட்டுள்ளன. தடுப்பணைகள், கசிவு நீர்க் குட்டைகள், சமதானக் குழிகள் போன்றவற்றின் மூலம் வனப் பகுதியில் கிடைக்கும் பருவ மழை நீர் கணிசமாகச் சேமிக்கப்பட்டு நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது; கிணறுகளில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் சாகுபடிப் பரப்பும் அதிகரித்துள்ளது. மழை நீர் சேமிப்பினால் கடும் வறட்சியிலும் நீர் மட்டம் முந்தைய ஆண்டுகளைவிடக் குறையாமல் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். விவர அறிக்கையிலே, இந்தியாவிலேயே தமிழகத்தை முதல் மாநிலமாக உருவாக்கச் சூளுரைத்து, அதற்கான நடவடிக்கைகளில் இதய தெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்களும், அம்மா அவர்களின் ஆணைப்படி மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது, அம்மா அவர்களின் அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டும் என்ற தீய எண்ணத்துடன் சில அதிகாரிகள் தவறான தகவல்களை அமைச்சருக்கு அளித்துள்ளார்கள். சென்னையைத்தவிர, 28 மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள் அறிவித்து, மழை பொய்த்துள்ள நிலையில் மாநில மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற நல்ல நோக்கத்துடன் திட்டங்களை நிறைவேற்றி வரும் வேளையில், கடந்த கால அரசால் 1997-98 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்தால் எந்தவிதப் பயனும் ஏற்படாமல், உண்மைக்கு மாறாகக் கணக்கு......

[2003 ஏப்ரல் 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கேள்விதான் கேட்கலாம். ஏதோ ஒரு கேள்வி மட்டும் கேளுங்கள்.

**திரு. வெ. ஏழுமலை:** நடப்பட்டதாகக் கூறப்பட்ட கன்றுகள் எல்லாம் காய்ந்து, கருகியுள்ள நிலையில், பொத்தாம் பொதுவாக அறிக்கையில், அத்தியூர், கொசப்பாளையம் வனப் பகுதிகளில் 2000 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுவதாகச் சொல்லப்பட்டு உள்ளது.

இத்திட்ட மதிப்பீடு எவ்வளவு, இதுவரை செலவிடப்பட்ட தொகை எவ்வளவு, எவ்வளவு கன்றுகள் நடப்பட்டன, வறுமை ஒழிப்புக்கு எவ்வளவு செயல்படுத்தப்பட்டது, மண்வளப் பாதுகாப்புப் பணிகளுக்கு எவ்வளவு செலவிடப்பட்டது என்ற விவரங்களை அமைச்சர் அறிவிப்பாரா? கடுமையான வறட்சி நிலவும் இந்த நேரத்தில்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு முடியுங்கள். வனத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், வறட்சிக் காலங்களில் மரக்கன்றுகள் நடுவது கிடையாது. பருவ மழைக் காலங்களில்தான் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. மழையை வைத்துத்தான், தரம் குன்றிய காடுகளையும், காடுகளுக்கு அருகில், மலைகளுக்கு அருகில் உள்ள கிராமங்களையும் தத்தெடுத்து மரக்கன்றுகள் நடப்படுகின்றன. அப்படி வறட்சியைத் தாங்கக்கூடிய நாவல், புளி மற்றும் புங்கை போன்ற மரக்கன்றுகள் நடப்படுகின்றன. இரசாயன உரங்களைப் பயன்படுத்தினால் வறட்சியில் பட்டுவிடும். ஆனால் காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் இயற்கை உரங்களையும், நுண்ணுயிர் உரங்களையும் பயன்படுத்துகிறார்கள். அதனால் தண்ணீரை இழுத்து வைத்துக் கொண்டு, வறட்சிக் காலங்களில் பட்டுப் போகாமல் இருக்கின்றன. குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த இரண்டு கிராமங்களிலும் 80 சதவீதம் மரக்கன்றுகள் நல்லவிதமாக இருக்கின்றன. 20 சதவீதம் சாதாரணமாகப் பட்டுவிடும். பிறகு பருவ காலங்களில் அந்தக் கன்றுகளை அகற்றிவிட்டு புதுக் கன்றுகள் நடப்படும். ஒரு கிராமத்திற்கு கிட்டத்தட்ட 350 எக்டேர் நிலங்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு இருக்கின்றன. 50 இலட்சம் ரூபாய் மூன்று வருடங்களுக்கு அந்தக் கிராமங்களுக்குச் செலவிடப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.



2003 ஏப்ரல் 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

*பிற்பகல் 12-05*

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் அப்பகுதியில் அரசுக்கு சேதம் இல்லை என்று விவர அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல், வறட்சியைத் தாங்கும் விதத்தில், நல்ல தரமான, வீரியமான மற்றும் உயரமான மரக் கன்றுகள் நடப்பட்டன; இதனால் 80 விழுக்காடு அளவுக்கு உயிர்ச் செடிகள் உள்ளன என்ற தவறான தகவல் அதிகாரிகளால் கூறப்பட்டுள்ளது. எங்களுடைய பகுதியில் மிகவும் கடுமையான வறட்சி நிலவுகிறது. மக்கள் குடிநீருக்குக் கஷ்டப்படுகின்றார்கள். கால்நடைகளுக்குக் கைப்பம்புகளில் தண்ணீர் வைத்துக் காட்டுகின்றார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுக்குக் கெட்ட பெயரை உருவாக்கும் வகையில் இவ்வாறு தவறான தகவலைத் தந்த அலுவலர்கள்மீது நடவடிக்கை எடுப்பதுடன், உண்மை நிலையை நேரில்கண்டறிந்து, என் தொகுதி மக்களின் குறையைத் தீர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்த இரண்டு கிராமங்களுக்கும் சென்று ஆய்வு நடத்தி, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன நிலவரப்படி அங்கு தவறு நடந்திருந்தால், அதிகாரிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல், மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. சிவசாமி.

**திரு. சி. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001—2003 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக்

[திரு. சி. சிவசாமி] [2003 ஏப்ரல் 30

குழுவின், ஊரக வளர்ச்சி குறித்த 18-வது அறிக்கையையும், கிராமக் குடிநீர் வழங்கல் தொடர்பாக அரசு எடுத்த நடவடிக்கை குறித்த 19-வது அறிக்கையையும், குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## (ஆ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001—2003 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்தி ஒன்றாவது முதல் நூற்று எழுபத்து மூன்றாவது வரையிலான 13 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## (இ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

**திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001—2003 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினான்காவது முதல் நூற்று முப்பத்து ஒன்றாவது வரையிலான 18 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

மேற்படி அறிக்கைகளில் 118 முதல் 131 வரையிலான 14 அறிக்கைகள் போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக, படி எடுத்த பிரதிகளாக அளிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன், அவை பேரவையின் உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்குப் பெருமை தேடித் தரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பொது நிறுவனங்கள் குழுவிற்கு பெண் உறுப்பினரை முதல் தலைவியாக நியமனம் செய்து, பெண் குலத்திற்குப் பெருமை தேடித் தந்துள்ளார்கள், எங்கள் பொன்மனத் தலைவி அம்மா அவர்கள், வரலாற்றில் சாதனை



2003 ஏப்ரல் 30] [திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி]

படைத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவியாகவும், எங்கள் குழுவிற்கு இரண்டு ஆண்டு காலம் பணிபுரியவும் அனுமதி அளித்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, உளங்கனிந்த நன்றியை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். நன்றி, வணக்கம்.

## (ஈ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001—2003 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு உறுதிமொழிக் குழுவினுடைய பதினாறாவது முதல் இருபத்து ஒன்றாவது வரையிலான அறிக்கைகளைப் பேரவைக்குச் சமர்ப்பிக்கிறேன்.

## (உ) மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2001—2003 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவின் இருபத்து ஐந்தாவது முதல் முப்பதாவது வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## (ஊ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001—2003 ஆம் ஆண்டுகளுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்து ஒன்றாவது முதல் முப்பத்து நான்காவது வரையிலான 4 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### வக்ஃபு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2003 ஆம் ஆண்டு வக்ஃபு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்

பிற்பகல் 12-10

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு வக்ஃபு (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



## 8. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 10—வணிக வரித் துறை—வணிக வரிகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 10—வணிக வரித் துறை—வணிக வரிகள். மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வணிக வரித் துறை — வணிக வரிகள் மானியக் கோரிக்கை எண் 10-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.446,60,09,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 598, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை — வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6102, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 749, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை — வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4499, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை — வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5091, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை — வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5474, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை — வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5598, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"வணிக வரித் துறை — வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6695. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை — வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7304, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7610, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8040, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை — வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8153, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை — வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.எஸ். உலகரட்சகன், இருக்கையில் இல்லை.

திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.



"வணிக வரித் துறை — வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6740, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை — வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7480, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை — வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6276, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை — வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5818, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிறு தொழில் வணிகர்களுக்கு மீண்டும் ஒற்றை வரி விதிப்பு முறையை அமல்படுத்துவது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை - வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4553, திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'VAT முறையில் வரி விதிக்கவிருப்பது குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை - வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6973, திருமதி எஸ். மகேஸ்வரி.

**•திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Value Added Tax எனப்படும் மதிப்புக் கூட்டு வரியானது மீண்டும் பலமுனை வரி முறையைப் புகுத்தும் என்பதால் மதிப்புக் கூட்டு வரி முறையை அரசு அமல் செய்வதைக் கைவிட வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை - வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 991, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '(VAT) மதிப்புக் கூட்டு வரியைத் தமிழகத்தில் செயல்படுத்தினால் ஆண்டுக்கு ரூ.2,500 கோடி இழப்பு ஏற்படும் என்பதால் அதைக்



கைவிட வேண்டியதன் அவசியம் பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை - வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4687, திரு. ப. அரசன்.

**•திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அத்தியாவசியப் பொருட்கள்மீது வரி விதிக்கப்பட்டுள்ளதால், ஏழை, நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, அத்தியாவசியப் பொருட்கள்மீது விதிக்கப்பட்டுள்ள வரியினைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை - வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7837, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் ஏழை, எளிய மக்கள் அன்றாடம் வாங்கும் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, பருப்பு, கோதுமை ஆகிய பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரிகளைக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை - வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6161, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விவசாயிகளுக்குத் தேவையான அனைத்து உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கு முழு வரி விலக்கு அளிக்க வேண்டியதன்

அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை - வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1112, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொச்சின் மற்றும் மங்களூர் துறைமுகங்களில் இறக்குமதி செய்யப்பட்டு, தமிழ்நாட்டிற்குக் கொண்டு வரப்படும் வெள்ளை மண்ணெண்ணெய்க்கும் 25 சதவிகிதம் வரி விதிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை - வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 446,60,09,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1589, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விற்பனை வரி, வணிக வரி போன்றவற்றில் வசூலிக்கப்படாமல் உள்ளவற்றைத் துரிதமாக வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வணிக வரித் துறை - வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6869, திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகாசியில் உள்ள வணிக வரித் துறை அலுவலகங்களுக்குப் புதிய அலுவலக வளாகம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





"வணிக வரித் துறை - வணிக வரிகள் பற்றிய 10 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.446,60,09,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னுரையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை - வணிக வரிகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டிலே பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதில் உரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 7 உறுப்பினர்கள் பேசுவதற்குப் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சருடைய பதில் உரையோடு 1½ மணிக்குள்ளே முடிக்கவேண்டும். ஆகவே, பேசுகின்ற உறுப்பினர்கள் 5 மணித்துளிகள் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. எஸ். தாமோதரன்.

பிற்பகல் 12-15

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 விற்பனை வரி விவாதத்தின்கீழ் இன்று என்னைப் பேச அனுமதித்ததற்கு நன்றி கூறுகிறேன்.

விற்பனை வரிச் சட்டத்தில் அகில உலக வணிகம், இந்திய வணிகம், வணிக வரிக்கு ஒப்பவும், அகில இந்திய ரீதியில் விற்பனை வரி ஒரே சீராக இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு 'VAT' விதிமுறைகளை 2003-2004 ஆம் ஆண்டில் கொண்டு வருவது குறித்த கருத்துகளையும், 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட சிறு வணிகர்கள் நலன்

@ 501 முதல் 523 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

கருதியும், தமிழக மக்கள் தொகையில் 30 சதவீதம், சுமார் 2 கோடி மக்கள் நம்பியுள்ள தொழில்கள் நலன் கருதியும் என் கீழ்க்கண்ட கருத்துகளை வலியுறுத்தி, அரசின் நிவாரணத்தை வேண்டுகிறேன்.

கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து வறட்சி நிலவியபோதும், கடுமையான நிதி நெருக்கடி இருந்தபொழுதும், 2000-2001-ல் 8,667 கோடி ரூபாயாக இருந்த விற்பனை வரி, 2001-2002-ல் ரூ.8,905 கோடியாகவும், 2002-2003-ல் ரூ.10,200 கோடியாகவும் உயர்ந்துள்ளது. இது நடப்பாண்டில் 16 Percent அதிகம் ஆகும் என்பதைத் தெரிவிப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன். 2003-2004 ஆம் ஆண்டு இதேபோல 16 Percent வரை உயர்வதற்கு வாய்ப்புள்ளது. விற்பனை வரியில் நல்ல வரவு செய்த அரசையும், வணிகப் பெருமக்களையும், தொழில் அதிபர்களையும் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

இந்த விற்பனை வரி என்பது, நமது நடப்பு நிதிநிலை அறிக்கையின்படி 22,666 கோடியில் 52½ Percent ஆகும்.

கொள்கை விளக்கக் குறிப்பில் வரி எதிர்பார்ப்பு, 2003-2004-க்கு எவ்வளவு என இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, வணிக வரித் துறைக்கு வரும் பட்ஜெட் கூட்டங்களில் கூடுதலான நேரம் ஒதுக்கிட வேண்டுகிறேன். 52½ பர்சன்ட் வருவாய் கொடுக்கும் விற்பனை வரிக்கு இன்னும் கூடுதலான நேரம் ஒதுக்கும்படி பேரவைத் தலைவர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள்....

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 66 சதவீதம் வணிக வரி மூலமாக அரசுக்கு வருமானம் வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. எஸ். தாமோதரன்:** நன்றி. இவ்வளவு அதிகமாக வரி கொடுக்கும் விற்பனை வரிக்குக் கட்டாயமாகக் கூடுதல் நேரம் ஒதுக்க வேண்டுமென்று மறுபடியும் பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாநில அளவிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுக்களில், தொழில் வணிகத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களை நியமனம் செய்வதன்மூலம் வரி வசூல் கூடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



விற்பனை வரி கூட வேண்டுமென்றால், தமிழகத்தில் 60 Percent மக்கள் நம்பியுள்ள விவசாயமும், 30 Percent நம்பியுள்ள தொழில் துறையும் முன்னேற, அரசு உறுதியான, குறுகிய காலத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய மாநில நிதியமைச்சர்களின் கூட்டுக் குழு விற்பனை வரிப் பதிவுக்கு ரூபாய் 5 இலட்சம் என்றும், 'VAT' அமல் செய்ய ரூபாய் 30 இலட்சம் turn over எனவும் முடிவு செய்தது. ஆனால், நமது நிதி நிலை அறிக்கையில் விற்பனை வரிப் பதிவுக்கு 3 இலட்சம் ரூபாய் எனவும், 'VAT' அமல் செய்ய ரூபாய் 10 இலட்சம் எனவும் உள்ளது. இதைக் கூட்டு மாநில நிதியமைச்சர்கள் எடுத்த முடிவின்படியும், தமிழக அரசு அதில் ஒப்புக்கொண்டபடியும் 26-03-2003-ல் எடுத்த கூட்டு முடிவின்படி விற்பனை வரிப் பதிவுக்கு ரூபாய் 5 இலட்சம் எனவும், 'VAT' அமல் செய்ய ரூபாய் 40 இலட்சம் எனவும் நடப்பு நிதிநிலை அறிக்கையில் மாற்றிட வேண்டுகிறேன்.

தமிழகத்தில் ரூபாய் 40 இலட்சம் வரை வியாபாரம் செய்யும் சிறிய வணிகர்கள் 4 Percent, 12½ Percent எனத் தனித்தனியாகக் கணக்கு வைப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, அவர்களுக்கு விதிக்கப்படும் இணக்க வரி 1 Percent-க்கு மிகையாகாமல் இருக்க வேண்டும். ஏனென்றால், ஒரு வணிகர் 100 ரூபாய்க்குப் பொருள் வாங்கி, 110 ரூபாய்க்கு விற்றால் 4 Percent என்றால் 10 பைசா, 12½ Percent என்றால் ஒரு ரூபாய் 25 பைசாதான் வரும். ஆகவே, சராசரியாக 1 Percent என்று இணக்க வரி இருக்க வேண்டும். இதில் அரசுக்கு நஷ்டம் எதுவும் இல்லை. 'VAT' அமல் செய்யும்பொழுது, Resale Tax, A.S.T., Entry Tax, Surcharge, Luxury Tax ஆகியவற்றை எடுத்திட வேண்டுகிறேன். 'VAT'-ல் விவசாயப் பொருள்கள் 70-க்கு, Zero Percent எனவும், தினசரி உபயோகம் மற்றும் கச்சாப் பொருள்கள் 187-க்கு, 4 Percent எனவும், இதரப் பொருள்களுக்கு 12½ Percent எனவும் உள்ளது. இதிலே வர்த்தகர்கள், தொழிற்சாலைகள், 'E'-Form, 'C'-Form செலுத்தி வாங்கும் வரியையும், T.N.G.S.T-ஐயும், 'VAT' வரியில் கழித்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

மண்ணெண்ணெய் வரியை 4 Percent-லிருந்து 25 Percent ஆக உயர்த்தியுள்ளதால் ரூபாய் 17-க்கு விற்ற மண்ணெண்ணெய் ரூபாய் 21-ஆக உயர்ந்துள்ளது. ரேஷன் கடையில் விநியோகம் செய்யும், கிராமப்புறத்திற்கு 3 லிட்டர், நகர்ப்புறத்திற்கு 5 லிட்டர்

[திரு. எஸ். தாமோதரன்] [2003 ஏப்ரல் 30

மண்ணெண்ணெய் என்பது போதுமானதாக இல்லை. கூடுதல் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலையில் கிராமப்புற மக்கள் உள்ளனர். ஆகையினால், மண்ணெண்ணெய் விற்பனை வரியைக் குறைத்திட வேண்டுகிறேன்.

டீசலும் ஒரு அத்தியாவசியப் பொருளாகும். இதன் வரியை 25 Percent-லிருந்து குறைத்திடுவதற்கு ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வெள்ளை மண்ணெண்ணெய் விலையைப் பற்றிக் கூறினார்கள். ரேஷன் கடையிலே 4 சதவிகிதத்தில்தான் கிடைக்கிறது. வெள்ளை மண்ணெண்ணெயைத் தவறாக டீசலில் கலப்படத்திற்குப் பயன்படுத்துவதால் சுற்றுச்சூழலும் பாதித்து விடுகின்றது. வாகனங்களும் பாதிக்கப்படுகின்றன என்று தெரிந்துதான், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குச் சென்று, வெள்ளை மண்ணெண்ணெய்க்கு 25 சதவிகிதமாக உயர்த்துவதன் மூலமாக தமிழகத்தில் இருக்கின்ற வாகனங்களும், அதேபோன்று, சுற்றுச்சூழலும் பாதிக்கப்படாமலிருக்க உயர்த்தப்பட்டது என்பதையும், ஏழைகள் வாங்கக்கூடிய மண்ணெண்ணெய் 4 சதவிகித வரிவிதிப்பில்தான் இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக் காண்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-20

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளை மண்ணெண்ணெய் பயன்படுத்தினாலே சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுவதால், 25 சதவிகிதம் அதற்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய தமிழ்நாட்டிலே விற்கப்படுகின்ற அந்த வெள்ளை மண்ணெண்ணெய்க்கு மட்டும்தான் அந்த வரி இருக்கிறது. தமிழ்நாட்டிற்கு இன்றையதினம் கொச்சியிலிருந்தும், மங்களூரிலிருந்தும் அந்த வெள்ளை மண்ணெண்ணெய் பெருமளவிற்கு வருகிறது. இங்கே நாம் அதை உபயோகிக்க முடியாமல் செய்த காரணத்தினால், 200 கோடி ரூபாய் நமக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அங்கேயிருந்து வரும் மண்ணெண்ணெய்யையும் இங்கே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த மண்ணெண்ணெய்யைத் தடுத்து நிறுத்துவதற்கும், அல்லது சட்டத்தின் இண்டு இடுக்குகளைப் பயன்படுத்திக் கொண்டு அந்த வரி



2003 ஏப்ரல் 30] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்]

செலுத்தாமல் இருக்கின்ற அவர்கள் வரி செலுத்த வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கும் ஆவன செய்யப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துப்படி இன்று வெள்ளை மண்ணெண்ணெய்க்கு 25% வரி என அறிவித்ததற்குப் பின்னால், வணிக வரித் துறையினுடைய செயலாக்கப் பிரிவு, Enforcement நடவடிக்கை எடுத்ததற்குப் பின்னால், ரூ.2 கோடியே 34 இலட்சம் வரி ஏய்ப்பு மாண்புமிகு அம்மாவின் அரசால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாமோதரன், 2 மணித்துளிகளுக்குள் முடியுங்கள்.

**திரு. எஸ். தாமோதரன்:** **மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முடிக்க வேண்டும், தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** தயவுசெய்து 15 நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 நிமிடங்கள் எல்லாம் முடியாது. 5 மணித்துளிகளுக்குள் முடியுங்கள். (குறுக்கீடு) தாமோதரன், விருதுநகர் பெருந்தலைவர் பிறந்த ஊர், அவர் 2 நிமிடத்திற்கு மேலே பேசவே மாட்டார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று பேரவைத் தலைவரிடம் கூறியது, அவை கண்ணியத்திற்கு மாறானது. அதைத் திரும்பப் பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அவர் ரொம்ப கண்ணியமான ஆள், முடித்துவிடுவார். (குறுக்கீடு)

**திரு. எஸ். தாமோதரன்:** மன்னிக்க வேண்டுகிறேன். ஏப்ரல் மாதம் டீசல் விலை 2 தடவை குறைந்து, இப்போது 23 ரூபாயாக உள்ளது. இது இன்னமும் குறைய வாய்ப்பு உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் 1 பீப்பாய் கச்சா எண்ணெய் 32

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

டாலராகச் சென்ற மாதம் இருந்தது; தற்போது 22 டாலராக உள்ளது. இது இன்னும் குறைய வாய்ப்பு உள்ளது. மைய அரசை, மாநில அரசு பீப்பாய் கச்சா எண்ணெய் கொள்முதலுக்கு ஏற்ப பெட்ரோல், டீசல் விலையை நிர்ணயம் செய்ய வற்புறுத்த வேண்டும். தற்போதுள்ள விலைக்கு—டீசல் ரூ.18 என்பது நியாயமான விலையாக இருக்கும் என்று நினைக்கிறேன். லாரி ஸ்டிரைக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வற்புறுத்தி வாபஸ் செய்ததுபோல, இதைச் செய்தால் தமிழக அரசுக்கு, போக்குவரத்துத் துறை, இதரத் துறைகள் மூலம் ரூ.600 கோடி வருடத்திற்கு செலவு குறையும் என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நுழைவு வரியிலிருந்து, Job Works-க்கு வெளி மாநிலங்களிலிருந்து அரசு நிறுவனம் அல்லது தனியார் நிறுவனம் எதுவாக இருந்தாலும், முழுமையாக நுழைவு வரியிலிருந்து நீக்கம் செய்ய வேண்டும். இதை நடப்பு ஆண்டிலேயே தாங்கள் செய்து கொடுத்ததற்கு எங்களுடைய அச்சகத்தின் சார்பிலே மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், 27-3-2002-லிருந்து 21-3-2003 வரை உள்ள இடைப்பட்ட காலத்திற்கும் இந்த நிவாரணம் அளிக்கப்பட வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். சட்டத்தில் Section 3(ஜ)-யின்படி அச்சுப் பொருட்கள் விற்பனைக்கு 3 சதவிகிதம் இணக்க வரி விதிக்கப்பட்டிருந்தது. புதிய 'VAT' சட்டத்தில் இது இடம் பெறவில்லை. 'VAT' சட்டத்திலும் இந்த இணக்க வரி, நகைகள் மற்றும் உணவு விடுதிகள் ஆகியவற்றுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது போல், அச்சுப் பொருட்களுக்கும் இணக்க வரி விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். C.S.T.. 4 சதவிகிதமாக இருந்தபொழுது இணக்க வரி 3 சதவிகிதமாக விதிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது C.S.T.. 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளதால் இணக்க வரியை 1 சதவிகிதமாகக் குறைத்து நிர்ணயம் செய்யும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

தயாரிப்பாளர்கள், வியாபாரிகள் பொருட்கள் தயாரிப்பதற்கும், வினியோகம் செய்வதற்கும் பயன்படுத்தும் இயந்திரங்கள், delivery Van, ஆட்டோ ஆகியவை வாங்கும்பொழுது கட்டும் விற்பனை வரியை 'VAT'-ல் கழித்துக்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டும். கொள்முதல் வரி, Section 7-ஏ, தயாரிப்பாளர்கள் நலன் கருதி நீக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பருப்பு, உணவு, எண்ணெய் வகைகளுக்கு விதித்துள்ள வரியை அரிசிக்குப் போன்று நீக்கம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். எண்ணெய் வித்துகளுக்கு இவர்கள் ஏற்கெனவே வரி செலுத்திவிட்டார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.



பாரபின் மெழுகு, Match wax, residue wax போன்றவை தீப்பெட்டி தயார் செய்யவும், மெழுகுத் திரி தயார் செய்யவும், கச்சாப் பொருட்களாக உபயோகப்படுகின்றன. இதைத் தற்பொழுது Form 17 அடிப்படையில் 3 சதவிகிதம் கொடுத்து வாங்குகிறார்கள். 1-6-2003-க்கு பின்பு Form 17 கிடையாது. மேலும் கையினால் செய்த தீப்பெட்டிக்கு வரி கிடையாது. எனவே, வரியை set off செய்ய முடியாது. கையினால் செய்யும் தீப்பெட்டித் தொழில் நலன் கருதியும், 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நலன் கருதியும், 'VAT' முறையில் பாரபின் மெழுகு, தீப்பெட்டி மெழுகு, residue மெழுகுக்கு 4 சதவிகிதம் மட்டும் விற்பனை வரி விதித்திட வேண்டுகிறேன். மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் உணவுப் பொருளாகிய காப்பித்தூள், சிக்கிரித் தூளுக்கு 'VAT' சிஸ்டத்தில் 4 சதவிகிதம் வரி விதித்திட வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12-25*

Compound வரி விகிதத்தில் Cable T.V. Operator-களுக்கு ரூ.10,000/-லிருந்து ரூ.5,000/-ஆக முனிசிபல் பகுதிகளுக்கும், ரூ.2,500/- என இதரப் பகுதிகளுக்கும் குறைத்ததை வரவேற்கிறேன். அவர்கள் சார்பிலே எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) 2 நிமிடங்களில் பேசி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அண்ணாமலை. (குறுக்கீடு) திரு. தாமோதரன், பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) திரு. தாமோதரன்.

**THIRU S. DHAMODHARAN:** Penalty clause:-Section 73/2 stipulates compulsory imprisonment for filing wrong/false returns or invoice in addition to fine. The Section should be amended as imprisonment 'or' fine. The word 'and' should be deleted, as clerical errors/suppliers, mistakes/human errors cannot be avoided. So, severe penalty may be avoided. Raid by enforcement wing should be avoided for the small dealers having turn over upto Rs.50 lakhs.

Vexatious assessment:— In Maharashtra and Goa, there is a provision in V.A.T. Act to take action against erring officials who make vexatious assessments. In the Tamil Nadu Act also, similar Section is to be incorporated. Similar to assessees, the Assessing Officers should also be subjected to penal action. Same scale of punishment should be applied to the officers also, as to the assessees.

விற்பனை வரி பாக்கி ரூ.7,000 கோடி எனக் கூறுகிறார்கள். இது உண்மைக்குப் புறம்பானதாகும். அதிகப்படியாகப் போட்ட வரிகள் காரணமாகவும், தவறான ஆர்டர்கள் போட்டதன் மூலமாகவும்தான் இது உள்ளது. பொது மக்கள், வணிகர்களும், ஆலை அதிபர்களும் வரி ஏய்க்கிறார்கள் என்ற தவறான கருத்தைக் கொண்டுள்ளார்கள். இந்த அவச்சொல்லைப் போக்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Computer மென்பொருள் ஆடைகள் பூங்கா போல், அச்சகத் தொழில் மென்பொருள் பூங்காவிற்கு ரூ.25 கோடி மைய அரசு ஒதுக்கியுள்ளது. இதைப் பாரம்பரியமிக்க அச்சுத் தொழில் மையமான சிவகாசியில் அமைத்திட மாநில அரசு மைய அரசை வலியுறுத்திட வேண்டுகிறேன். புதிதாகத் தொடங்கவுள்ள Information Technology Park No.II விருதுநகரில் அமைத்திட வேண்டுகிறேன். கூடுதல் விற்பனை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) திரு. அண்ணாமலை (குறுக்கீடு) sentence-ஐ முடித்துவிட்டார்.

**திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..... (குறுக்கீடு)

**திரு. எச்.எம். ராஜு:** நன்றி சொல்லி முடித்துவிடட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம்தான் முக்கியம், நன்றி சொல்ல வேண்டியது முக்கியமல்ல.

**திரு. கு. அண்ணாமலை:** முட்புதர்கள் மூடிக் கிடந்தாலும், கட்டாந்தரையாக இருந்தாலும்...(குறுக்கீடு)

**திரு. எஸ். தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அண்ணாமலை, கொஞ்சம் இருங்கள். திரு. தாமோதரன் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. எஸ். தாமோதரன்:** பொருளாதார ஏற்றத்திற்கு அரசு எடுக்கும் அத்தனை கொள்கைகளுக்கும் காங்கிரஸ் கட்சி அனுசரணையாக இருக்கும் என்று கூறி, இந்த அரசாங்கம் வரவுகளுக்கு அதிகப்படியாக ஏற்பாடு செய்வதற்குண்டான நடவடிக்கைகள் எடுப்பதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று கூறி, அவற்றிற்கு honorary முறையிலே வேலை செய்யவும் ஒத்துழைக்கிறோம் என்று கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. அண்ணாமலை.

**திரு. கு. அண்ணாமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்புதர்கள் மூடிக் கிடந்தாலும், கட்டாந்தரையாக இருந்தாலும், காடு திருத்தி, நாடாக்கி, மக்கள் வாழ்வுக்கு வளமூட்டி, புதிய அத்தியாயம் படைக்க வந்த சரித்திரத் தாயே!

இலக்கியத்தைக் கற்றோம், இலக்கணத்தைக் கற்றோம். ஆனால் மக்கள் இதயங்களைக் கற்றீர்களா என்ற புதிய மனித நேயக் கொள்கையை எங்களுக்குக் கற்பித்து, அதன் வழி நடக்கச் சொன்ன மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்கி, எனக்கு வாக்களித்த தென்காசி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றி கூறி, எனது உரையைத் தொடங்குகின்றேன்.

வணிகத்தை வணிகமாக வாழ வைக்க வேண்டுமென்ற எண்ணத்தை விடுத்து, எங்கே கொக்கி போடலாம், எங்கே இழுக்கலாம் என்ற வியாபாரத்தை, விருது பெறும் நோக்கமாக இயங்கும் சிலரையும், அதனை வருடிவிடும் சிலரையும், அதற்காக ஒத்து ஊதும் சிலரையும் பார்க்கும்போது மனதிற்குக் கொஞ்சம் வேதனையாக இருக்கின்றது.

மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக, தமிழ்நாடு புதுமையான வளர்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இது எதனால் என்றால், அரசின் திடமான வரித் திறனால் சாத்தியமாகிறது. அரசின் பெரும் பகுதி வருவாய், வணிக வரிகளாலேயே கிடைக்கின்றது.

தேவையற்ற பளுவைச் சாதாரண குடிமக்கள்மீது சுமத்த வேண்டும் என்ற நோக்கம் இந்த அரசிற்கு இல்லாததால், பொருளாதார வளர்ச்சியைச் சீரான நிலைக்கு மேம்படுத்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

மதிப்புக் கூட்டு வரித் திட்டம் ஒரு திருப்புமுனையே தவிர, திருத்துமுனை கிடையாது. இதைச் சரியாகப் புரிந்துகொள்ளக்கூடப் பலருக்கு மனம் கிடையாது.

2002-2003 ஆம் ஆண்டுக்கான வடிப்புகளைப் பெற்றுச் சரிபார்த்ததில், பிளாஸ்டிக் மூலப் பொருட்களின் மீதான ரூ.250 கோடி அளவில் கொள்முதல் மற்றும் விற்பனைத் தொகை மறைப்புச் செய்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. வரி ஏய்ப்புகள் கண்டறியப்பட்டு, குறிப்பிடத் தகுந்த அளவிற்கு வரி வசூலிக்கப்பட்டுள்ளது.

[திரு. கு. அண்ணாமலை] [2003 ஏப்ரல் 30

விற்பனை வரி ஒத்திவைப்பு, தள்ளுபடித் திட்டத்தின் சில நிபந்தனைகளை மீறியிருந்தபடியால், அந்த நிறுவனங்களிடமிருந்து மட்டும் கடந்த ஓராண்டில் ரூபாய் 30 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

வணிக வரிப் பணியாளர்களுக்குப் பணியிடைப் பயிற்சி, கணினிப் பயிற்சி, மதிப்புக் கூட்டு வரிப் பயிற்சி எனப் பயிற்சிகள் தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது கண்டு பெரிதும் உளமார வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 12-30

வரி வசூலில் மகத்தான பெருமையை இத்துறை பெற்றுள்ளது என்பதனை எடுத்துச் சொல்லும் வகையில், 2001-2002 ஆம் ஆண்டில் ரூபாய் 8,904.68 கோடியாக இருந்த வரி வசூல், 2002-2003 ஆம் ஆண்டில் ரூபாய் 10,200 கோடியாக, 14.55 விழுக்காடு வளர்ச்சியைக் காட்டியுள்ளது. வரி நிலுவைகளைக் குறைப்பதற்கான சிறப்பு முயற்சிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்ற கடந்த ஆண்டு அறிவிப்பின்படி, சமாதானத் திட்டத்தின்கீழ் நிலுவையாக இருந்த வரித் தொகையில் ரூபாய் 10.34 கோடி வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

வணிகர்களின் நலனுக்காகவும், அவர்களுக்கு சில குறிப்பிட்ட வகைகளில் உதவும் நோக்கத்துடனும், 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வணிகர் நல வாரியம் அரசால் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் 31-3-2003 அன்றைய நிலவரப்படி, 40,127 உறுப்பினர்கள் உள்ளனர். இப்போது உறுப்பினர் கட்டணமாக ரூபாய் 250-ம், மொத்தம் ரூபாய் 71.63 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. வாரியத்தின் 335 உறுப்பினர்கள் ரூபாய் 63.71 இலட்சம் உதவித் தொகையாகப் பெற்றுப் பயனடைந்துள்ளார்கள் என்பது பெருமகிழ்ச்சியாக இருக்கின்றது. வணிக வரித் துறை மாபெரும் வருவாயை அரசுக்குப் பெற்றுத் தருவதோடு, சராசரி மக்களுக்கு எந்த வகையிலும் துன்பம் வந்து சேரக்கூடாது என்பதில் இவ்வரசு மிகுந்த அக்கறை கொண்டு செயல்படுகிறது என்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

தென்காசி தொகுதியிலுள்ள அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில் திருப்பணிக்கு ரூபாய் 47 இலட்சம் ஒதுக்கித் தந்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், தென்காசி மக்கள் சார்பாகவும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2003 ஏப்ரல் 30] [திரு. கு. அண்ணாமலை]

என் தொகுதி சம்பந்தமான சில கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். தென்காசி தொகுதியிலுள்ள குற்றாலம், ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படுவதுண்டு. எழில்மிகு குற்றால அருவி இங்கு உள்ளது. மழைக் காலங்களில் அருவியில் விழும் நீர் கடலில் கலந்து வீணாகிறது. இங்கு பெரும்பாலோர் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். குற்றால மலைமீது தண்ணீர் சேமிப்பதற்கு அம்மா அவர்கள் ஒரு திட்டத்தை உருவாக்கித் தரப் பணிவுடன் வேண்டுகிறேன். இத்திட்டத்தால் குடிநீர்ப் பிரச்சினையும் தீரும்; விவசாயிகளின் பிரச்சினையும் தீரும்.

படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கிட தென்காசி தொகுதியில் தொழிற்சாலை அமைத்துத் தரும்படி அம்மா அவர்களைப் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

தென்காசி தொகுதி, கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள பாவூர்சத்திரம் வளர்ந்து வரும் நகரம். இங்கு போக்குவரத்து வாகனங்கள் மிகுதியாக வருவதால், பாவூர்சத்திரத்தில் ஒரு பேருந்து நிலையம் அமைக்க அம்மா அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன்.

தென்காசி தொகுதியில் அரசுக் கல்லூரி எதுவும் கிடையாது. எனவே, அரசு கலைக் கல்லூரி அல்லது தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுகிறேன்.

கீழப்பாவூர் ஒன்றியத்தில் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் விடுபட்ட ஆவுடையானூர், அரியபுரம், துப்பணம்பட்டி, கல்லூரணி, சிவநாடானூர், குணராமநல்லூர், குலசேகரப்பட்டி, மேலப்பாவூர், கீழவெள்ளகால், இடையர்தவணை ஆகிய ஊராட்சிப் பகுதிகளுக்கு கடனா நதித் திட்டம் மூலம் குடிநீர் கிடைக்க அம்மா அவர்கள் ஆணை பிறப்பித்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட காலமாகப் பராமரிக்கப்படாமல் இருக்கும் முத்துசாமி நகராட்சிப் பூங்காவைச் சீரமைத்துத் தந்து, செங்கோட்டை பகுதி மக்களின் குறையை நீக்கிட அன்புடன் வேண்டுகிறேன்.

தென்காசி மற்றும் பாவூர்சத்திரம் ஆகிய இடங்களில் railway level crossing பொது மக்களின் போக்குவரத்திற்கும், வாகனப் போக்குவரத்திற்கும் பெரிதும் இடைஞ்சலாக உள்ளதால், அப்பகுதிகளில் ரயில்வே மேம்பாலங்கள் கட்டி, அப்பகுதி மக்களின் நீண்ட நாளைய கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப்

பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களது பொற்பாதங்களில் என் நன்றியைக் காணிக்கையாக்குவதோடு, எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மானியக் கோரிக்கை எண் 10, வணிக வரித் துறை—வணிக வரிகள் குறித்துப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், நான் சார்ந்துள்ள பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனரும், உலகத்திலுள்ள அனைத்துத் தமிழர்களுடைய நலனுக்குக் குரல் கொடுத்து வரும் டாக்டர் ஐயா அவர்களுக்கும், பசுமைத் தாயகம் படைத்து வரும் டாக்டர் சின்ன ஐயா அவர்களுக்கும், இந்த மாமன்றத்தில் எங்களுக்கு வழிகாட்டியாக உள்ள தியாகச் செம்மல் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை ஆரம்பிக்கின்றேன்.

1939 ஆம் வருடம் முதலமைச்சராக இருந்த மூதறிஞர் இராஜாஜி அவர்கள் மதுவிலக்கை அமல்படுத்தியபோது ஏற்பட்ட நிதி நெருக்கடியை ஈடுசெய்வதற்காக, ரூபாய் 5 கோடிக்கு விற்பனை வரி விதிக்கப்பட்டது. இன்றைக்கு எதற்கெடுத்தாலும் வரி விதிப்பு என்ற நிலை உருவாகியுள்ளது. ராஜா செல்லையா கமிட்டி, கார்த்திகேயன் கமிட்டி போடப்பட்டன. தற்போது One time payment என்று சொன்னீர்கள். அதனுடைய நிலை என்ன என்பதையும் அரசு தெளிவுபடுத்த வேண்டும். வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு, நிலுவையிலுள்ள தொகை எவ்வளவு என்பதையும் அரசு தெளிவாக்க வேண்டுகின்றேன்.

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கடுமையான வறட்சி இருக்கும் சூழ்நிலையில், புதிய வரிகள் விதித்தால் விலைவாசி உயர்ந்து, பொது மக்கள் மிகவும் அவதிப்படுவார்கள். எனவே, புதிய வரி விதிப்புக் கூடாது; தவிர்க்கப்பட வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வலியுறுத்துகின்றேன். தொலைபேசிக் கட்டணம், டீசல், பெட்ரோல், மண்ணெண்ணெய் ஆகியவற்றின் மீதான வரி விதிப்பை ரத்துச் செய்யவேண்டும். புதிய வரி விதிப்பைத் தவிர்த்து,



நிலுவையில் உள்ள வரி பாக்கியை வசூலித்தாலே அரசுக்குக் கூடுதலான தொகை வரும். நியாயமான, திறமையான, அர்ப்பணிப்புள்ள அதிகாரிகளை நியமித்து, நிலுவையில் உள்ள வரிகளைப் போர்க் கால அடிப்படையில் வசூலிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். வரி பாக்கி ரூ.6000 கோடி முதல் ரூ. 8000 கோடி வரை உள்ளது என்கிறார்கள். உண்மை நிலையை அரசு தெரிவிக்கவேண்டும்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலுவையில் உள்ள வரியைப் பற்றி ஏற்கெனவே சட்டமன்றத்தில் மாண்புமிகு மணி அவர்கள் குறிப்பிட்டபோதே, நான் குறிப்பிட்டேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வணிக வரித் துறையின் தவறான செயல்பாட்டினால் ரூ.5060 கோடி நிலுவைக் கடன் நிலுவையில் இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டேன். அதுமட்டுமல்ல; நிலுவையிலே இருப்பதெல்லாம், நீதிமன்றத்தின் தடையாணை போன்றவை இருக்கின்ற காரணத்தினால். இன்றையதினம் 'சமாதானத் திட்டத்தின்' மூலமாக, ரூ.10 கோடியே 34 இலட்சம் ஈட்டப்பட்டது. அதேபோன்று மேலும் தீர்ப்பாயங்களின் வழியாக இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு துரிதமாக வசூலில் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி இன்றையதினம் விரைவாக நிலுவைத் தீர்வு செய்வதற்கான ஒரு அறிவிப்பு வர இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ். நடராஜன்:** அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்புக் கூட்டு வரி நடப்பாண்டில் அமல்படுத்தப்படுமா, இல்லையா என்பது இன்னும் முடிவாகாமல் உள்ளது. பிரச்சினையாக இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், தொழில் வணிகத் துறையிடம் விரிவான விவாதம் நடத்தி ஒரு நல்ல முடிவிற்கு வருவது நல்லதாக இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் இதுவரை ஒருமுனை வரி விதிப்பின்கீழ், வரி செலுத்த வேண்டாதிருந்த இலட்சக்கணக்கான சிறு வணிகர்களையும், நுகர்வோர்களையும் பாதுகாக்கவும், சிறு சில்லறை வணிகர்களைப் பல்வேறு சிக்கலான நடைமுறைகளிலிருந்தும், அதிகாரிகளின் கெடுபிடிகளிலிருந்தும் விடுவிக்கவும், மதிப்புக் கூட்டு வரியினை அமல்படுத்த அதிகாரம் பெற்ற மாநில நிதியமைச்சர்களின் உயர்நிலைக்

[திரு. எஸ். நடராஜன்] [2003 ஏப்ரல் 30

குழுவில் (Empowered Committee) எடுக்கப்பட்ட முடிவின்படி ரூ.40 இலட்சம் வரை ஆண்டு மொத்த விற்பனைத் தொகை உள்ள வணிகர்கள், அவர்கள் விருப்பத்திற்கிணங்க, மதிப்புக் கூட்டு வரி முறைப்படி வரி செலுத்தலாம்; அல்லது 1 சதவிகித ஒருங்கிணைந்த வரி செலுத்தலாம் என்று சட்டத் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று வர்த்தகர் சங்கத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்புக் கூட்டு விற்பனை வரியின்கீழ் பதிந்துகொள்ள, ஒரு வணிகருக்கு ஆண்டு விற்பனைத் தொகை வரம்பினை, தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள ரூ.3 இலட்சத்திலிருந்து, மத்தியக் குழுவின் பரிந்துரைப்படி ரூ.5 இலட்சமாக உயர்த்தவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்புக் கூட்டு வரி முறை அமலாக்கப்பட்ட பின்னர், மறு விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி, நுழைவு வரி, உபரி வரி, கூடுதல் உபரி வரி, ஆடம்பர வரி போன்ற, பொருட்கள் விற்பனையின்மீது விதிக்கப்படும் இதர வரிகள் அனைத்தும் ரத்துச் செய்யப்படவேண்டும். மக்களின் அன்றாட, அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, கோதுமை, பயறு, பருப்பு மற்றும் உணவு எண்ணெய் ஆகியவற்றிற்கு மதிப்புக் கூட்டு வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும்.

தொழில் துறை உலகமயமாக்கப்பட்டு வருவதாலும், பன்னாட்டுப் பொருட்களின் வருகையாலும், கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சிறு தொழில் துறைக்கு விற்பனை வரித் தொகை வரம்பை நிர்ணயித்து, வரிச் சலுகை அளிக்கவேண்டும். ஆண்டு ஒன்றுக்கு ரூ.5 கோடி விற்பனை உள்ள மென் பானங்கள் (Soft Drinks), Paint Brush, Detergent soap தயாரிக்கும் சிறு தொழில்களுக்கும் முதலில் பரிட்சார்த்தமாக இச்சலுகை அளிக்கலாம்.

அரிசிக்கு விற்பனை வரியை நீக்கியதுபோல் மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பயறு, பருப்பு, வெல்லம் ஆகிய அத்தியாவசியப் பொருட்களுக்கும் வரி விலக்கு அளிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நடராஜன், இரண்டு மணித் துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சில குறிப்பிட்ட காகித வகைகளுக்கு மட்டுமே நுழைவு



2003 ஏப்ரல் 30] [திரு. எஸ். நடராஜன்]

வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அனைத்து வகைக் காகிதங்களுக்குமே வரி விலக்கு அளிக்கப்பட வேண்டும். அதேபோன்று, கொசு வலைத் துணிக்காக உபயோகப்படுத்தப்படும் H.D.P.E. குருணைகள் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுவதில்லை. ஆகவே, வெளி மாநிலங்களிலே கொள்முதல் செய்யப்படும் raw material-க்கு விதிக்கப்பட்டுள்ள entry tax நீக்கப்படவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாட்ராம்பள்ளி தொகுதி மிகவும் வறட்சியான தொகுதியாகும். இங்குள்ள விவசாயக் கூலிகள், பக்கத்து மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகத்திற்குச் சென்று, பிழைப்புத் தேடி வருகிறார்கள். ஆகவே, நாட்ராம்பள்ளியை ஒரு தொழில் நகரமாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-40*

என்னுடைய தொகுதியில் அக்ரகாரம் என்கிற கிராமத்தில் பட்டு நூல் நூற்கும் நூற்பாலை பல வருடங்களாக இயங்காமல் இருக்கின்றது. அதை இயக்கி, அதில் பணி புரிந்து வந்த 200 தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்ராம்பள்ளி தொகுதியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளியோ, அரசுக் கல்லூரியோ இல்லாததால், இந்த நிதியாண்டில் கல்லூரி அமைக்க அரசு முன்வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்ராம்பள்ளியின் வழியாக தேசிய நெடுஞ்சாலை--நான்கு வழிப் பாதைப்--பணி நடந்து வருகின்றது. அதுபோன்று ஒரு ஒன்றியத்திற்கு ஒரு hospital என்ற வகையில் 30 படுக்கைகளைக் கொண்ட ஒரு மருத்துவமனை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தில், என்னுடைய நாட்ராம்பள்ளியைச் சேர்த்து மேம்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் சந்தன எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை தெக்குப்பட்டு கிராமத்தில் இயங்கி வருகிறது. அதன்மூலம் அரசுக்குப் பல கோடி ரூபாய் அன்னியச் செலாவணி ஈட்டித் தரப்படுகிறது. அந்தத் தொழிற்சாலை இயங்குவதற்கு, அரசிடம் இருக்கின்ற சந்தனக் கட்டைகளைப் பொது ஏலம் விடாமல் எங்கள் தொழிற்சாலைக்குத் தர வேண்டுமென்று கேட்டு, பாலாற்றின் குறுக்கே இரண்டு Check dam-களைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த நேரத்திலே நன்றி தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. வெங்கடாஜலம்.

•**திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தாய், தான் பெற்றெடுத்த பெண் சிசுவை வளர்க்க முடியாமல் கொன்று குவிப்பதை அறிந்து அரசானது அந்தப் பெண் சிசுவை வளர்க்கிறது என்றும், அந்தப் பெண் குழந்தைக்குக் கல்வி அறிவு கொடுக்கிறது என்றும், அந்தக் குழந்தைக்கு ஒரு வாழ்க்கையை உருவாக்கிக் கொடுக்கிறது என்றும் ஒரு உன்னதத் திட்டமான, அன்னை தெரசா அவர்களால் பாராட்டப்பெற்ற திட்டமான தொட்டில் குழந்தைத் திட்டம் மூலமாக 750 பெண் சிசுக்களின் உயிரைக் காப்பாற்றிய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை"

ஊக்கம் உடையவர் இருக்கும் இடத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, ஆக்கமானது அவரிடம் போய்ச் சேரும் என்பது இக்குறளின் கருத்து என்பதை நாம் அறிவோம்.

அதுபோல், தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கும்போது மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எவ்வளவு ஊக்கத்தோடும், உழைப்போடும் பாடுபட்டு வருகிறார்கள் என்பதை இந்த நாடு அறியும். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுக்கு சீரும், சிறப்பும், பேரும், புகழும் வெற்றிமீது வெற்றி வந்து சேருவதற்குச் சான்று, 5 இடைத் தேர்தல்களிலும் மக்கள் கொடுத்த உன்னத வரவேற்பை இன்று நாம் காண்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் உயிர் நாடியான துறை வணிக வரித் துறை என்றால் அது மிகையாகாது. நாட்டின் வளர்ச்சியை உருவாக்கிக் கொடுக்கும் துறை, வணிக வரித் துறையாகும். கடந்த கால ஆட்சியில் இத்துறையைச் சீரழித்ததன் விளைவாக, மாண்புமிகு தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதல்வர் அம்மா அவர்கள் இத்துறையைச் சீரமைப்பதில் மிகுந்த



கவனத்துடன், ஏழை மக்கள், நடுத்தர மக்கள் பாதிக்காத வகையில் சீரமைத்து வருவது பாராட்டுக்குரியது. ஆனால் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிச் சீர்கேட்டை உருவாக்கியவர்கள் இன்று வெளியில் இருந்து கொண்டு வசைபாடுகிறார்கள். வக்கணை பேசுகிறார்கள். அவர்கள் ஆளுகின்றபோது கற்பூரத்திற்கும், விபூதிக்கும் வரி போட்டவர்கள் இன்று பேசுகிறார்கள், எங்களது ஆட்சிக் காலத்தில் ஏகப்பட்ட வரிச் சலுகைகளைக் கொடுத்துள்ளோம் என்று கூறுகிறார்கள். குறிப்பாக, 145 கோடியே 56 இலட்சம் ரூபாய் வரிச் சலுகைகள் கொடுக்கப்பட்டன எனத் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வரிச் சலுகைகள் எல்லாம் யாருக்குக் கொடுக்கப்பட்டன? ஏழை மக்கள் பயனடைந்தார்களா? நடுத்தர மக்கள் பயனடைந்தார்களா என்பதை ஒரு கணம் எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்கூடக் கோடிட்டுக் காட்டியுள்ளார்களே, திரு. கருணாநிதி அவர்கள் தந்த வரிச் சலுகையால் பலம் பெற்ற தனியார் நிறுவனங்கள், குறிப்பாக, Tata Engineering Locomotive Company Limited நிறுவனத்திற்கு மட்டும் 8 கோடியே 38 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வரிச் சலுகை காட்டப்பட்டது: Tata Engineering Company என்ன, ஏழை மக்களுடைய கம்பெனியா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

Empee's Distilleries என்ற அமைப்பு, மதுபானம் தயாரிக்கும் நிறுவனம். இந்த நிறுவனத்திற்கு மட்டும் 12 கோடியே 44 இலட்சம் ரூபாய் வரிச் சலுகை காட்டப்பட்டது. இந்த கம்பெனி மதுபானம் தயாரிக்கும் நிறுவனம். இந்தத் தொழில் ஏழை மக்கள் தொழிலா? குடிசையில் வாழும் மக்கள் தயாரிக்கும் தொழிலா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அதைப்போலவே, எம்.எஸ்.டி.சி. லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு 11 கோடியே 44 இலட்சம் ரூபாய் வரிச் சலுகை கொடுத்துள்ளார்களே, இவர்கள் எல்லாம் பண முதலைகளாக உள்ளவர்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் அறியாதவர்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதுபோன்று பல நிறுவனங்களுக்கு வரிச் சலுகை கொடுத்ததன் மர்மம் என்ன? இதில் ஆதாயம் பெற்றவர்கள் யார், யார் என நாட்டு மக்கள் கேட்க மாட்டார்களா? அன்று நிதிநிலையை மோசமாக்கிவிட்டு, இன்று மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12-45*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் முதலமைச்சர் பதவியோடு, இந்த வணிக வரித் துறையையும் கூடுதலாக வைத்துக்கொண்டு, வரி ஏய்ப்பிற்கு வழி காட்டியுள்ளார்கள். அவர்கள் ஆண்ட 2000-2001 ஆம் ஆண்டில் துறையின் வருவாயோ ரூ.8,664 கோடியாகும். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், இந்த ஆண்டு--2002-2003 ஆம் ஆண்டில் வருவாயோ ரூ.10,200 கோடியாகும். அதாவது, அவர்களது ஆட்சிக் காலத்தைவிட 1,536 கோடி ரூபாய் அதிக வருவாயை ஈட்டியிருக்கிறது என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்தத் துறைக்கு முன்னுரிமை கொடுத்து, துறையைச் செயல்படுத்துவது பாராட்டுக்குரியதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வணிகர் நலச் சங்கம் என்ற பெயரை வைத்துக்கொண்டு, விற்பனை வரி ஏய்ப்போர், நாட்டையும், ஆட்சியையும் அச்சுறுத்துகிறார்கள். சில அரசியல் பிரமுகர்கள் இவர்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். ஆர்ப்பாட்டம் நடத்தவும், கடையடைப்புச் செய்யவும் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். வெள்ளையன் போன்றவர்கள், தமிழகத்தினுடைய கறுப்பர்களாக, குண்டர்களாக மாறி, Tata Sumo-வில் வந்து மிரட்டுகிறார்கள்; கடைகளை உடைக்கின்றார்கள். இதுபோன்ற பேர்வழிகளைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்ப் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், இந்தச் சூழ்நிலை மாற வேண்டுமென்றால்--கடந்த கால புரட்சித் தலைவி அம்மாவுடைய ஆட்சிக் காலத்தில், 1991 முதல் 1996 வரை, அப்பொழுது Consumer Committee என்று ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கொண்டு அந்தக் கமிட்டி செயல்பட்டது. அதுபோன்று—ஒரு Consumer Committee அமைத்தால், வணிகர்களுக்கும், வணிக வரித் துறை அலுவலர்களுக்கும் இடையே நல்ல உறவு ஏற்படுகின்ற வகையிலே, வரி ஏய்ப்பைத் தடுக்கவும், வரி ஏய்ப்பைக் குறைக்கவும் வாய்ப்புகளை ஏற்படுத்தும். எனவே அந்த Consumer Committee-யை அமைத்தால் மிகவும் நன்றாக இருக்கும் என்று பணிந்து தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், விவசாயிகள் பொருளாதாரத்தில் உயர வேண்டும் என்ற



எண்ணத்தில், சேலம் மாவட்டத்தில் SAGOSERVE என்னும் தொழிற் கூட்டுறவு சேவைச் சங்கத்திற்குக் கூடுதல் விற்பனை வரி 2½ சதவிகிதம் நீக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இருப்பினும், ஜவ்வரிசித் தொழிற்சாலை அதிபர்களும், வடநாட்டு வியாபாரிகளும் வெளி மார்க்கெட்டை ஊக்குவித்து, கள்ளச் சந்தையில் விற்பதால், விற்பனை வரி ஏய்ப்பு மட்டும், ஆண்டொன்றிற்குக் கிட்டத்தட்ட 5 கோடி ரூபாய் அளவிற்குச் செய்து கொண்டிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள், SAGOSERVE சங்கத்தில் விற்பனை செய்யும் சரக்குகளுக்கு Agricultural Marketing Society மூலம் விதிக்கப்படும் Cess வரிக்கு விலக்களித்தால், சங்கத்தில் விற்பனை அதிகரிக்கும் என்பதைப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இந்தத் தொழிலைக் காப்பாற்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள், இதைப் பரிசீலிக்க வேண்டுமாய்ப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, திருப்பூர் பனியன் தொழிலிலே இன்றையதினம் எந்த அளவிற்கு நசுங்கிப் போயிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். C-Form என்பதால், அந்தத் தொழிலே அடியோடு நசுக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு, அதைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டுமாய்ப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, சிறு தொழிலை ஊக்குவிக்கின்ற அரசாக இருந்து வந்துகொண்டிருக்கிறது. இருப்பினும், கடந்த கால தி.மு.க. அரசு, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் சில முரண்பட்ட சட்ட விதிகளை உருவாக்கியதன் விளைவாக, பல சிறு தொழிற்சாலைகளை உருவாக்க முடியாமல் உள்ளது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மூலம் தொழிற்சாலைகளை இரண்டு வகைகளாகப் பிரித்திருக்கின்றார்கள். (1.) நச்சுத் தன்மை அதிக அளவில் உள்ள தொழிற்சாலைகள், (2.) நச்சுத் தன்மை குறைந்த அளவில் உள்ள தொழிற்சாலைகள் என இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. நச்சுத் தன்மை குறைந்த அளவில் உள்ள தொழிற்சாலைகள், குறிப்பாக ஓடை மற்றும் ஆறுகளில் இருந்து 5 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டுமென்று விதிமுறைகள் இருந்து வந்துகொண்டிருக்கின்றன. தற்போது எந்தத் தொழிற்சாலையாக இருந்தாலும், சிறு தொழிற்சாலையாக இருந்தாலும், Treatment Plant அமைத்தால்தான், அங்கே licence கொடுக்கப்பட்டு வந்து

அபிவிருத்தி செய்ய, ஒரு கோடியே 90 இலட்சம் ரூபாயில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பணியினைச் செய்து கொடுக்க வேண்டுமாய்ப் பணிந்து வேண்டுகின்றேன்.

நிலத்தடி நீர் மாசு ஏற்பட்டும், சுகாதாரக் கேடு ஏற்படும் வகையில் நகரின் மையப் பகுதியில் குப்பை மேடு இருந்து கொண்டிருக்கிறது. எனவே, அந்தக் குப்பை மேட்டை நகரின் வெளிப்பகுதிக்கு எடுத்துச் சென்று, குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமாய்ப் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

திருமணி முத்தாறு என்னும் திட்டம் பாதியிலேயே இருந்து கொண்டிருக்கிறது. நிலத்தடி நீர் குறையாமல் இந்தத் திட்டப் பணிகளை மாற்றி, திட்டத்தை நிறைவேற்றி, இரு பக்கமும் சாலைகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமாய்ப் பணிந்து கேட்டுக்கொள்கின்றேன்.

இறுதியாக, பாதாளச் சாக்கடைத் திட்டம், சேலம் மாநகரின் கானல் நீராகவே இருந்துவந்து கொண்டு இருந்தது. இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்திருக்கின்றார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, தாயே, கடந்த கால தி.மு.க ஆட்சியில் borewell போடுவதில் மட்டும் இரண்டரைக் கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்துள்ளதாக Vigilance துறையால் கண்டுபிடிக்கப்பட்டு, இன்றையதினம் F.I.R. போடப்பட்ட நிலையிலேயே இருந்துவந்து கொண்டிருக்கிறது. இன்றும், ஒன்றரை ஆண்டுகளாக F.I.R. போட்ட நிலையிலேயே இருந்துவந்து கொண்டிருக்கிறது. குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படாமல் இருந்து வந்து கொண்டிருக்கிறது.

தாயே, நம்மீது உண்மைக்கு மாறான வழக்குப் போட்டவர்கள், இன்று உண்மையான குற்றவாளியாக இருந்துகொண்டு, நாட்டிலே வலம் வந்து கொண்டிருக்கின்றார்கள். அன்று உண்மைக்கு மாறான வழக்கால், தாயைச் சிறையில் அடைத்தார்கள். நாங்கள் இரத்தக் கண்ணீர் வடித்தோம். அதே நிலை இன்று இருந்துவந்து கொண்டிருக்கிறது. உண்மையான குற்றவாளிகள் நாட்டிலே வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டரைக் கோடி ரூபாய் borewell போட்டதில் மட்டும் ஏப்பம் விட்டவர்கள், இன்றையதினம் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, கருணையோடு இந்த வழக்கின்மீ

துரித நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தாயே, தமிழே, மாண்புமிகு அம்மா அவர்களே, உங்களுக்கு நன்றி கூறி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை மானியக் கோரிக்கையின்மீது சில கருத்துகளை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அறிக்கையின் முன்னுரையில், "அரசின் மொத்த வரி வருவாயில் பெரும் பகுதி வணிக வரிகளாலேயே கிடைக்கப் பெறுகிறது. அரசின் வரிக் கொள்கை மாநிலத்தின் நிதி ஆதாரத்தைத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்டிருப்பினும், தேவையற்ற பளு சாதாரணக் குடிமகன்மீது சுமத்தப்படுவதில்லை" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே ஒரு நல்ல பார்வையோடு இருந்தாலும்கூட, நடைமுறையில் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டு வருவதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே சமயத்தில், சென்ற ஆண்டு வருவாய், இந்த ஆண்டு வரி வருவாய் சம்பந்தமாக ஒரு குறிப்பு இதிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 2002-2003 ஆம் ஆண்டு வருவாய் வசூல் மிகவும் பாராட்டத்தக்கதாக உள்ளது என்று குறிப்பிட்டு, முதலில் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.8904.68 கோடியாக இருந்த அந்த வரி வசூல், அடுத்த ஆண்டு--2002-2003 ஆம் ஆண்டில் ரூ.10,200 கோடியாக, அதாவது 14.55 விழுக்காடு வளர்ச்சியைக் காட்டியுள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இந்தச் சிறப்பிற்கு துறையைச் சார்ந்த அதிகாரிகளும், அமைச்சகமும், அதில் உள்ள பணியாளர்களும் மிகப் பெரிய பங்கு வகித்திருக்கிறார்கள். ஆனால், இந்தப் பணியிலே ஈடுபடக்கூடிய பணியாளர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. அவர்களுடைய பணியிடங்கள்--தமிழ்நாடு வணிக வரிப் பணியாளர் சங்கம் என்ற முறையில் அவர்கள் வைத்திருக்கிற அமைப்பில், அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கை--நீண்ட காலமாக அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. எனவே, காலியாக இருக்கக்கூடிய



பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். அவர்கள் சென்று வரி வசூலிலே ஈடுபடும்போதுதான் வருவாயும் கூடுதலாக அமைவதற்கு ஏதுவாகும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எனவே, அரசு இதன்மீது கனிந்த பார்வையோடு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-55*

காவல் துறை சீரமைப்பைப் போலவே, இந்தத் துறையும் சீரமைக்கப்படுவது, வரி வருவாய்க்கு மிகுந்த உதவி செய்யும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, V.A.T. விதிப்பு சம்பந்தமாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது -- Value Added Tax. இதை நிறைவேற்றுகிறபோது, தமிழக அரசு, தமிழகத்திலுள்ள வணிகர் அமைப்புகளோடும் பேசி, மத்திய அரசோடும் கலந்து பேசி, ஓர் இறுதி முடிவை சுமுகமான முறையில் எடுக்க வேண்டும் என்பதையும் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நிறையக் கோரிக்கைகள் இங்கே வந்திருக்கின்றன. நேற்று, அரசின் சார்பிலான கொள்கை விளக்கக் குறிப்பும் கிடைத்திருக்கிறது. வணிகர் அமைப்புகளுடைய கோரிக்கைகளும் எங்களுக்குத் தொடர்ந்து வருகின்றன. ஆகவே, தொலைக்காட்சியில் தலைப்புச் செய்தி என்று சொல்வதைப்போல, இந்த வணிகர் அமைப்புகளுடைய பெயர்களையும், அவர்கள் வைத்திருக்கக்கூடிய கோரிக்கைகளின் உள்ளடக்கத்தையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு தொழில் வர்த்தகர் சங்கம், மரியாதைக்குரிய இரத்தினவேல் அவர்கள் தலைமையில் இருக்கக்கூடிய அமைப்பும், தமிழ்நாடு செங்கல் மற்றும் ஓடு உற்பத்தியாளர்கள் நலச் சங்கமும், மரியாதைக்குரிய யாசின் முகமது அவர்கள் தலைமையிலுள்ள அமைப்பும், மதுரை, Paper Merchants Association என்கிற அமைப்பும், மரியாதைக்குரிய சங்கர் அவர்கள் தலைமையிலுள்ள அமைப்பும், தமிழ்நாடு உணவுப் பொருள் வியாபாரிகள் சங்கம், மரியாதைக்குரிய சங்கரலிங்கம் அவர்கள் தலைமையிலான அமைப்பும், அதேபோன்று, தமிழ்நாடு வெல்லம் வணிகர்கள் சங்கமும், பெரிய கருப்பன் அவர்கள் தலைமையிலான அமைப்பும் மற்றும் பல அமைப்புகளும், அரசுக்கும் மனுக் கொடுத்து, எங்களுடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறார்கள். அதில் இருக்கக்கூடிய சாத்தியமான அம்சங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் பரிந்துரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, அத்தியாவசியப் பொருள்கள்மீது வரி விதிக்கிற நேரத்தில், அவர்களுடைய வரி விதிப்பு கூடுதலாகிற நேரத்தில், விலையும் கூடுகிறது. (மணியடிக்கப்பெற்றது) இந்த அடிக்காகத்தான் நான் முதலிலேயே சுருக்கினேன். விலையும் கூடுகிறது. அண்டை மாநிலங்களோடு போட்டியிட முடியாத நிலைமை ஏற்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே, 50 இலட்சம் ரூபாய் வரையிலும் turn over செய்யக்கூடிய வியாபாரிகளுக்கு, ஒரு சதமான வரி என்பதை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதை, நானும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமாதான் திட்டம் என்பதைக் குறித்து அறிக்கையிலே இருக்கிறது. எவ்வளவு தூரம் வருவாய் வந்திருக்கிறது என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இன்னும் எவ்வளவு வரவேண்டுமோ, அந்தத் தொகையைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கம்பிவடத் தொலைக்காட்சி--Cable T.V. Operators, அவர்களுக்கான வரி என்பது, கிராம ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி என்ற முறையில், மாநகராட்சி என்ற முறையில், விதித்து இருக்கிற வரி கூடுதலாக இருக்கிறது; அதைக் குறைக்க வேண்டும் என்பதையும், காப்புத் தொகையையும் குறைக்க வேண்டும் என்பதையும் நான் குறிப்பிடுகிறேன்.

வணிகர்களுடைய குறை தீர்க்கும் குழு, இந்தக் குழுவில் யார், யார் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்பதை....(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காப்புத் தொகையை, மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு குறைத்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறேன். ரூ.10 ஆயிரமாக இருந்ததை ரூ.5 ஆயிரமாகவும், அதற்குக் கீழே இருப்பவைகளுக்கு ரூ.2,500/- ஆகவும் குறைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். நன்மாறன்:** காப்புத் தொகைக் குறைப்பிற்கு நன்றி தெரிவிக்கிறேன். வரி விதிப்பின்மீதும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, சோதனை; கடைகளில் சோதனை என்று வருகிற நேரத்தில், ஒரு பெரிய கஷ்டத்திற்கு ஆளாகிறார்கள். Income Tax Department—லிருந்து வருகிறவர்கள், ஒரு முனைக்கு 4 முனைகளிலேயும் விவரங்களை விசாரித்து வருகிறார்கள். Correct-ஆகப்



பிடிக்க முடிகிறது. ஆனால், இந்தக் கடைகளிலே சோதனைக்கு வருகிறவர்கள், நிலைமை தெரியாமல் வந்து, பெரிய சிரமம் உருவாகிறது. ஆகவே, 4 முனைகளிலும் விசாரித்து, சோதனையின் மூலம் அவர்களுக்குக் கிடைக்கிற வருவாய் நாட்டுக்குத்தான். அந்த வணிகர்களும் ரொம்பத் துன்புறாத வகையில் இதை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்கள். அந்த அடிப்படையிலே இதனை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களிடமிருந்து இன்னொரு கோரிக்கை இருக்கிறது. இந்தக் கடை சோதனையோடு, வெளியிலேயும் சோதனை நடத்துங்கள் என்று சொல்கிறார்கள். லாரிகளில் இப்போது சோதனை போடப்படுகிறது. லாரிகளோடு இப்போது Omni பஸ்களையும் இணைக்கச் சொல்லி, வணிகர் அமைப்புகள் கோரியிருக்கின்றன. எனவே, அந்தச் சோதனை என்பது நாட்டுக்கு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேகமாக...

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைகளைப் பொறுத்த வரையில், செயலாக்கப் பிரிவு கடினமான சோதனை எதையும் செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். செயலாக்கப் பிரிவைப் பொறுத்த வரையில், கடந்த கால ஆட்சிக்குப் பின்னர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், கடுமையான சோதனைகளை சிறு வணிகர்களிடம் செய்யவில்லை. மேலும், பெரிய வசதி படைத்தவர்கள், வணிகர்களின் அதிக வரி ஏய்ப்பைக் கண்டுபிடித்ததை நான் என்னுடைய அறிக்கையிலே பின்னர் குறிப்பிட இருக்கிறேன் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-00

**திரு. என். நன்மாறன்:** அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. Omni பஸ் வேகமாக வரும் என்ற ஒரு image இருக்கிறது. அதைப் பயன்படுத்தி, வேகமாகக் கடத்தலும் நடக்கிறதோ என்கிற அச்சம் வணிகர்களுக்கு இருக்கிறது. ஆகவே, அது உண்மையாக இருந்தால், அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அத்தியாவசியப் பொருட்கள் சம்பந்தமாக...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் முடியுங்கள்.

**திரு. என். நன்மாறன்:** ஒரு மணித்துளியில் முடித்துவிடுகிறேன். அடுத்து, காகிதம், செங்கல் ஆகியவை சம்பந்தமாகக் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். செங்கல் வணிகர்களோடு நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும், வணிக வரி அமைச்சர் அவர்களும், துறைச் செயலாளர் அவர்களும் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்கள். அது நிறைவேற்றப்பட வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வணிகர் நல வாரியம் சீரமைக்கப்பட்டு, அது நல்ல முறையில் செயல்படுத்தப்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். பொருட்களில் I.S.I. முத்திரை என்று ஒன்று தருகிறோம். இது எதற்காக என்றால், இது quality உள்ளது என்று காட்டுவதற்காக. வணிகர்களிலும் முறையாக வரி செலுத்திய வணிகர்களை ஊக்கப்படுத்துகிற முறையில் அரசினுடைய செயல்பாடு இருந்தால், வருவாய் அதிகரிப்புக்கு அதுவும் உதவும் என்பதைக் குறிப்பிட்டு, வணங்கி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரி மானியத்தின்மீது பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வருகின்ற ஜூன் மாதத்திலே மதிப்புக் கூட்டு விற்பனை வரியை அமல்படுத்துவதற்கு முன்பாக, தொழில்/வணிகத் துறையினருடனும், மத்திய அரசுடனும் விரிவான விவாதம் நடத்தப்பட்டு, தேவையான மாறுதல்கள் செய்ய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

கடந்த ஆண்டிலே, வரி என்பது அந்தத் துறையைச் சேர்ந்த பணியாளர்களால் அதிக அளவிலே வசூல் செய்யப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டு இருந்தாலும்கூட, வரி பாக்கி வசூல் செய்யும்போது, அந்தத் துறையைச் சார்ந்த ஊழியர்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய சூழ்நிலையில், அவர்களுக்குப் போதிய பணிப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதேபோல, வரி வசூல் பாக்கி சம்பந்தமாக அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் வினவிய கேள்விக்குப் பதிலாக விளக்கம் அளித்தார்கள். தமிழகத்திலே வணிகர்களைப் பொறுத்தமட்டிலும், வணிக வரி பாக்கி நிலுவையைச் செலுத்தாமல் உள்ள வணிகர்களுடைய பட்டியலை வெளியிட அரசு தயாராக உள்ளதா என்பதை இந்த நேரத்திலே நான் கேட்க விரும்புகிறேன். அதேபோல, வணிக வரித் துறையிலே போதிய அளவிற்கு அலுவலர்கள் நியமிக்கப்படாததன்



காரணமாக, வரி வசூல் செய்வதிலே மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது என்ற ஐயப்பாடு உள்ளது. அதை நீக்குவதற்குத் தேவையான பணியாளர்களை நியமிக்க வேண்டும்; அதாவது, Commercial tax அதிகாரிகள் பணியிடங்கள் 140, அந்தத் துறையிலே காலியாக இருப்பதாக அறிகிறேன்; அந்தப் பணியிடங்களில் பணியாளர்களை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, திருப்பூர் பனியன் தொழிற்சாலையைப் பொறுத்த வரையிலே, C-Form பிரச்சினையால் பனியன் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. அரசுக்கும் வணிக வரி வசூலில் மிகவும் பாதிப்பு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், அந்த C-Form...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, C-Form என்பது ஒரு மையச் சட்டம்; மையச் சட்டத்தினுடைய இறுக்குப்பிடி அதிகமாக இருக்கிற காரணத்தால், தமிழகத்திலிருந்து பனியன் போன்றவை எல்லாம் பிற மாநிலங்களுக்குச் செல்கிறபோது, ஆங்கு அவர்கள் Sales tax register பண்ணுவதில்லை; C-Form-ஐத் தருவதில்லை; அப்படியிருக்கிற நேரத்தில், 10 சதவீதம் Penalty வருகிறது. 10 சதவீதம் Penalty-ஐக் குறைக்க வேண்டும் என்று நாங்களும் மைய அரசிடம் சொல்லி இருக்கிறோம். இது மைய அரசினுடைய பொறுப்பிலே இருக்கிற ஒரு பிரச்சினையாக இருக்கிறது. மைய அரசுக்கு மாநில அரசு இது குறித்து எழுதி இருக்கிறது.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இந்தப் பிரச்சினையை மைய அரசிடம் வலியுறுத்தி எடுத்துக் கூறி, தமிழக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தென்னை விவசாயிகளுக்குத் தேங்காய் விலை இல்லை என்பதால், மத்திய, மாநில அரசுகள் கொப்பரைத் தேங்காய்க் கொள்முதலுக்கு ஆதரவு விலை கொடுக்கின்றன. ஆனால், தேங்காயிலிருந்து துருவல் உற்பத்தி செய்தோ அல்லது இளநீர் உற்பத்தி செய்தோ, packet செய்து வெளி நாடுகளுக்கு, வட மாநிலங்களுக்கு அனுப்பும்போது, விற்பனை வரி நிர்ணயம் செய்யப்படுகின்றது. எனவே, தேங்காய்த் துருவலுக்கும், இளநீருக்கும் விற்பனை வரி விலக்குக் கொடுத்து, விவசாயிகளை, அதிலும் குறிப்பாக, தென்னை

விவசாயிகளைக் காப்பாற்றுவதற்குப் போதிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தொலைபேசி; Cellular phone-களுக்கு, தமிழக அரசு 12 சதவீதம் வரி விதிப்பு அறிவித்து இருக்கின்ற சூழ்நிலையில், அதை முழுவதுமாக ரத்துச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இன்று தொலைத் தொடர்பு என்பது மிகவும் வளர்ந்து வருகின்ற சூழ்நிலையில் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல...

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொழிலாளர்களுக்கே வாதிடுவது கொள்கையெனக் கொண்டிருக்கிற கம்யூனிஸ்ட் பேரியக்கம் எதற்காகத் தற்போது Cell phone முதலாளிகளுக்காக வாதாடுகிறார்கள் என்பது புரியாத புதிராக இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. பழனிசாமி, நான் சொல்லி விடுகிறேன். புரட்சித் தலைவி ஆட்சியில் தொழிலாளர்களும் Cell phone வைத்துக்கொள்கிற அளவுக்கு வளர்ந்து இருக்கிறார்கள் என்று அவர் கருதுகிறார் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று பால் வண்டிக்காரர்கூட, சமயத்தில் வண்டியை நிறுத்திவிட்டு Cell phone-இலே பேசிக் கொண்டிருக்கிறார். இது நம்முடைய வளர்ச்சி என்பது அல்ல. பொதுவாக, உலகம் முழுமையும் இருக்கக்கூடிய விஞ்ஞான வளர்ச்சி இது. அதை நாம் பயன்படுத்துவதற்கான முயற்சியை எடுத்திருக்கிறோம். அதாவது, இது ஏழை, பணக்காரன் என்று வித்தியாசம் இல்லாமல் இருக்கிற காரணத்தாலேதான், மத்திய அரசு ஒரு வரியைப் போட்டிருக்கிறது. மாநில அரசும் ஒரு வரியைச் சுமத்தக் கூடாது என்றுதான் அவர் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராசேந்திரன், ஒரு மணித்துளியில் உரையை முடியுங்கள். அமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கிறது.

**திரு. சோ. இராசேந்திரன்:** அரிசிக்குத் தமிழக அரசு விற்பனை வரியை நீக்கியதுபோல, அன்றாடம் உபயோகிக்கின்ற, மக்களுடைய



வாழ்க்கைத் தரத்தோடு இணைந்து உபயோகிக்கப்படுகின்ற பயறு, பருப்பு, வெல்லம் போன்ற உணவுப் பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். அதுபோல, அரசின் பரிசீலனைக்கு சில கருத்துகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

உணவு எண்ணெய் மீதான 4 சதவிகித வரியை ரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், உலகமயமாக்கல் கொள்கையில் பன்னாட்டுப் பொருள்கள் வருகையால், சிறு தொழில் பாதிப்பு என்பது ஏற்பட்ட நிலையில், விற்பனை வரித் தொகை வரம்பை நிர்ணயித்து, வரிச் சலுகை அளிக்க வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, வணிகர்கள் விற்பனை செய்கின்ற பொருட்களுக்கான விலைப் பட்டியல் என்பது, அந்தக் கடைகளிலே வைக்கப்படாத சூழ்நிலையிருக்கிறது. இதை அரசு வலியுறுத்தி, விலைப் பட்டியலை வணிகர்கள் கடைகளிலே வைப்பதற்குத் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நுகர்வோர் நலன், பாதுகாப்பு என்ற அடிப்படையிலே, வணிகர்கள் விற்கின்ற பொருட்களுக்கான ரசீது வழங்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலேயும் அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், வணிகர் நல வாரியம் தற்போது செயல்படாத சூழ்நிலையில் உள்ள காரணத்தால், வணிகர் நல வாரியம் செயல்படுவதற்குத் தேவையான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், நஷ்ட ஈட்டுத் தொகையை அதிகரிக்க வேண்டிய அவசியத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல, வணிக வரித் துறையிலே...

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர் நல வாரியம்--மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியின்போது 1993—1994 ஆம் ஆண்டுதான் முதல் நிதி உதவி வணிகர்களுக்கு வழங்கப்பட்டது. அதற்குப் பின்னர் இன்று, 40,127 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மொத்தம் 350 உறுப்பினர்களுக்கு, குடும்ப நலம், கல்வி, மருத்துவம் மற்றும் விபத்து நிவாரணம் போன்றவற்றிற்கு உதவித் தொகை ரூ.66 இலட்சத்து 42 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சி 2001-லே பொறுப்பேற்றதற்குப் பின்னர் மட்டும் 350 பேரில் 106 உறுப்பினர்களுக்கு

ரூ.18 இலட்சத்து 98 ஆயிரம் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, தமிழகத்திலே தென் பகுதியிலே கையாலே தயாரிக்கப்படுகின்ற தீப்பெட்டி, பட்டாசுத் தொழில்களுக்கான வரி விலக்கு என்பது முற்றிலும் அளிக்கப்படுவதன் மூலமாக, அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற 10 இலட்சத்திற்கும் மேற்படியான தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு போதுமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே கேட்டு, எனது தொகுதி சம்பந்தமான ஒன்றிரண்டு பிரச்சினைகளைக் கூறி முடிக்கலாம் என்று இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசேந்திரன், அதை எழுதிக் கொடுத்து விடுங்கள். திரு. கே.என். இலட்சுமணன். (குறுக்கீடு) அவர் உரையை முடித்து விட்டார்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னான நேரம் கருதி, மிக விரைவிலே முடிக்க நான் விரும்புகிறேன். ஏற்கெனவே பல உறுப்பினர்கள் வரிச் சலுகைகளை வலியுறுத்திச் சொல்லி இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் மீண்டும், மீண்டும் சொல்லாமல், குறிப்பிட்ட சில வகைகளை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-10*

உணவு எண்ணெய் என்பதை மிகச் சாதாரண மக்கள்கூட இன்றையதினம் பயன்படுத்துகிறார்கள். இன்றையதினம் தமிழக அரசு 4 சதவிகிதம் வரி வசூலிக்கிறது. அதை முழுமையாக ரத்துச் செய்ய வேண்டுமென்றும், விற்பனை வரி, அதற்கு மேலே மேல் வரி–Additional tax,--கூடுதல் விற்பனை வரி, Resale-tax என்கின்ற பல்வேறு வரிகளை, வரிக்கு மேல் வரியாக இருப்பதை அறவே நீக்க வேண்டுமென்றும், சிறு தொழில் துறைக்கு விற்பனை வரித் தொகை வரம்பை நிர்ணயித்துச் சலுகை அளிக்க வேண்டும் என்றும், பயறு, பருப்பு, வெல்லம்—சென்ற பட்ஜெட்டிலே நாங்கள் கேட்டு இருக்கிறோம்—கடலை மாவு, பட்டாணி மாவு என ஏழை எளியவர்கள் பயன்படுத்துகின்ற உணவுப் பண்டங்கள் மீது இருக்கிற விற்பனை வரியை ரத்துச் செய்ய வேண்டுமென்றும், அனைத்து வகைக் காகிதங்களும் இன்றையதினம் பல்வேறு மாவட்டங்களில்....



**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்புக் கூட்டு வரி அமலுக்கு வரும்போது, கூடுதல் வரி ரத்துச் செய்யப்படும் என்பதைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், மதிப்புக் கூட்டு வரி நடைமுறைப்படுத்தப்படும்போது தேசிய அளவில் ஒரு முறையான வரியாகத்தான் இருக்குமே ஒழிய, அத்தியாவசியமான, மக்களுக்குத் தேவையான அரிசியின் விலையை மட்டும் குறைக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு இன்றைக்கு மத்திய அரசை வலியுறுத்திக்கொண்டு இருக்கிறது. இங்கு இருக்கக்கூடிய அத்தியாவசியப் பொருள்களுக்கும், அதேபோல் மக்களைப் பாதிக்காத அளவுக்கு இருக்கக்கூடிய தொழில்களுக்கும் பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலே, மதிப்புக் கூட்டு வரியிலே இருக்க வேண்டுமென்ற உணர்வைத்தான் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வலியுறுத்திக்கொண்டு இருப்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்கு நீங்களும், மத்திய அரசின் இயக்கத்தில் இருக்கின்றவர்கள், தமிழகத்திலே இருக்கின்ற நிலைகளை எடுத்துக் கூறி, உதவியாக இருக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** வர இருக்கிற மதிப்புக் கூட்டு வரியானது, நம்முடைய மாநிலத்திலே வருமா, வராதா என்கிற நிலை இருக்கிறது. 5, 6 ஆண்டு காலமாக இந்த மதிப்புக் கூட்டு வரி விதிப்பைத் தள்ளிப் போட்டுக்கொண்டே வந்து இருக்கிறோம். பல மாநிலங்கள் அதை அமல்படுத்தவில்லை. இந்தியாவிலே இருக்கின்ற அத்தனை மாநிலங்களும் அதை அமல்படுத்தினால்தான், தமிழ்நாட்டிற்கும் அது சரியாக இருக்கும் என்பதை தமிழக அரசு உணர்ந்து இருக்கிறது. ஆகவே 4, 5 தடவை தள்ளிப் போட்டு இருக்கிறார்கள். ஜுன் மாதம் கண்டிப்பாக வரும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. வந்தால் நாங்கள் வரவேற்கிறோம். மாநிலங்கள் எல்லாம் சேர்ந்து முடிவெடுத்தது இந்த மதிப்புக் கூட்டு வரித் திட்டம். மத்திய அரசிற்கும், இதற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பதை நான்

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலங்கள் எல்லாம் எப்போது அப்படி ஒரு முடிவுக்கு வந்தது என்றால், ஒவ்வொரு மாநிலத்திற்கும் VAT வருகிற காரணத்தால் ஏற்படுகிற இழப்பை ஈடுகட்டுவதாக மைய அரசு வாக்குறுதி கொடுத்து இருக்கிறது. தமிழக அரசுக்கு மட்டும் ரூ.2,500 கோடி ஆண்டுக்கு இழப்பு ஏற்பட இருக்கிறது. அதை அவர்கள் ஈடுகட்ட

வேண்டும். Service Tax-ஐப் பொறுத்த வரைக்கும் முழுமையாக மைய அரசே எடுத்துச் சென்று விடுகிறது. அதில் மாநில அரசிற்குப் பெரும் பங்கு வேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். அதற்கு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் பாராளுமன்றத்தில் என்று சொல்லியிருக்கிறோம். இதையெல்லாம் அவர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும். மாநிலங்கள்மீது பழியைப் போட்டுவிட்டு, மாநிலங்கள் இதை நடைமுறைப்படுத்தும்போது நஷ்டயீட்டை அவர்கள் தராமல் விட்டுவிட்டால் மாநில அரசுக்கும் வருவாய் இழப்பு; வரியை அதிகமாகப் போட வேண்டிய சூழ்நிலையில், மக்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுவிடும். தாமதத்திற்குக் காரணம் மைய அரசுதான்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மைய அரசு, மாநிலங்களுக்கு இதன் காரணமாக நஷ்டயீடு ஏற்பட்டால் கொடுக்கிறேன் என்று உறுதிமொழி அளித்து இருக்கிறது என்றால், அந்த வகையிலே, தமிழ்நாட்டுக்கு ஏற்படுகின்ற வரிச் சுமையை மத்திய அரசு...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதால் மாநிலங்களுக்கு ஏற்படுகின்ற நஷ்டத்தை முழுமையாக, நிரந்தரமாக ஈடுசெய்வதாக மத்திய அரசு உறுதிமொழி அளிக்கவில்லை. மத்திய அரசு இப்போது என்ன உறுதி அளித்து இருக்கிறது என்றால், முதல் ஆண்டுக்கு மட்டும் முழுமையாக அந்த நஷ்டயீட்டை அவர்கள் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். இரண்டாவது ஆண்டு அதைக் குறைப்பார்களாம். மூன்றாவது ஆண்டில் அதை இன்னும் குறைத்து, பிறகு அதை நிறுத்தி விடுவார்களாம். இது எங்களுக்கு ஏற்புடையது அல்ல. ஆகவே, மத்திய அரசு இந்த VAT-இனால் ஏற்படுகின்ற இழப்பை, அந்த நஷ்டயீட்டை நிரந்தரமாக வழங்க வேண்டும் என்று நாங்கள் கோரி வருகின்றோம். மாண்புமிகு உறுப்பினரும் மத்தியிலே அதை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-15*

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மத்திய அரசு கண்டிப்பாக, தமிழக அரசின், மாண்புமிகு முதலமைச்சருடைய கோரிக்கையை ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்றும், அதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்பதையும் சொல்லிக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி)



சில காகிதங்கள்; இந்த VAT வந்துவிட்டால் விற்பனை வரி மாறும். அது ஒரு வேளை தள்ளிப் போடப்பட்டு விட்டால் என்ன செய்வது என்பதால், இதிலேயும் நாங்கள் சலுகை கேட்டு வைக்கிறோம். VAT வந்துவிட்டால் இது மாறும். அப்போது அதற்குத் தகுந்த மாதிரி செய்து கொள்ளலாம். எனவே, இப்போது காகித அட்டைகள், இவைகளை எல்லாம் உற்பத்தி செய்வதற்கு கர்நாடகம், பல மாநிலங்களில் இருந்து, அட்டைகள் பெற வேண்டியிருக்கிறது. காகிதங்கள் பெற வேண்டியிருக்கிறது. நுழைவு வரி கட்ட வேண்டியிருக்கின்றது. ஆகையினாலே, இங்கே உற்பத்தி செய்கின்ற வணிகர்களுக்கு, தொழிற்சாலை நடத்துபவர்களுக்கு சிரமம் ஏற்படுகின்றது. ஆகையினாலே அந்த நுழைவு வரியை நீங்கள் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்றும், விற்பனை வரி அதிகாரிகள் வரி விதிப்பு ஆணையை எதிர்த்து ஒரு வேளை வணிகர்கள் appeal செய்ய வேண்டுமென்றால், 25 சதவிகித வரியை--விதிக்கப்பட்ட வரியில் 25 சதவிகிதம்--கட்டிவிட்டுத்தான் appeal செய்ய வேண்டும் என்பது இன்றையதினம் நடைமுறையிலே இருக்கின்றது. அதை மறுபரிசீலனை செய்து appeal செய்யும்போது, இருபத்தைந்தோ அல்லது பன்னிரண்டரையோ கட்டலாம். Appeal செய்கின்ற காலகட்டத்திலே 25 சதவிகிதம் வரியைக் கட்டிவிட்டுத்தான் நீங்கள் appeal செய்ய வேண்டும் என்ற அந்த ஆணையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறையின் மூலமாக, நடக்கக்கூடிய வரி ஏய்ப்புக்கு, மேல்முறையீட்டின் போதுள்ள 25 சதவிகிதத்தைக் குறைக்க வேண்டுமென்று குறிப்பிட்டால், வணிகர்களுடைய வழக்குகளில் மேல் தீர்ப்பாயத்தின் மூலமாகக் காலம் தள்ளிக்கொண்டே சென்று விடுவார்கள். அதற்காகத்தான் 25 சதவிகிதத்தையாவது முதலிலே கட்டி விட்டால், இருக்கின்ற வரியில், 100-ல் 25 சதவிகிதம் அரசுக்கு வருமானம் வரும் என்ற அடிப்படையில் விதிக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மதிப்புக் கூட்டு வரி பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்லி நிறைவு செய்ய விரும்புகின்றேன். ஒருமுனை வரி தமிழக வணிகர்கள் எல்லாம் போராடிப் பெற்ற ஓர் உரிமை. பலமுனை வரியை எல்லாம் மாற்றி, தமிழக அரசு ஒருமுனை வரியை விதித்திருக்கின்றது. மதிப்புக் கூட்டு வரி வந்து விட்டால், ஒவ்வொரு கட்டத்திலுமே வரி செலுத்துகின்ற நிலைமை வரும். அதை நீக்க வேண்டுமென்று இப்போதே நான் கேட்டுக்கொள்கிறேன். விற்பனை வரி...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, VAT என்பதும் ஒரு பலமுனை வரிதான். VAT-ஐ இந்தியாவிலே கொண்டு வருவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது மைய அரசுதான். (குறுக்கீடு) அதற்காகத்தான் சொல்கிறேன். VAT-ஐ நீக்குவதற்கு மைய அரசு முன்வர வேண்டும். மைய அரசினுடைய நோக்கம் என்னவென்றால், VAT-ஐ நடைமுறைப்படுத்துகிறபோது, ஒவ்வொரு கட்டத்திலும் Compliance of tax payment will become 100% perfect. அப்படி வருகின்ற நேரம், வரி ஏய்ப்பு இல்லாமல் போய்விடும். Everything will be brought under records. அப்படி எல்லோரும் தஸ்தாவேஜுகளோடு வந்து விடுகிறபோது, மைய அரசுக்குப் பெரிய ஆதாயம். நீங்கள் 4 சதவிகிதம் மாநில அரசுக்கு வரி தருகிறீர்கள். ஆனால் மைய அரசிற்கு 35 சதவிகிதம் Income Tax தரவேண்டிய ஒரு நிலை வருகிறது. எங்களுக்கு 4 சதவிகிதம் இலாபம் என்றால், மைய அரசுக்கு 35 சதவிகிதம் Income Tax இலாபம் வருகிறது. அந்த நோக்கத்தோடுதான் மைய அரசு இதைக் கொண்டு வந்திருக்கிறது. மைய அரசு VAT வேண்டாம் என்று சொல்லிவிட்டால், எங்களுக்கும் இழப்பைத் தர வேண்டியதில்லை; VAT வேண்டும் என்று நாங்களும் வற்புறுத்தமாட்டோம்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** டாக்டர் செல்லையா கமிட்டி--அந்த நிபுணர் கமிட்டிகூட VAT--மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தை வரவேற்றிருக்கிறார்கள். அதனால் மாநிலத்திற்குச் சிரமம் இல்லாமல், வணிகர்களுக்கும் சிரமம் இல்லாமல் இருக்கும். கணக்கு எழுதுகிற வணிகர்களுக்கெல்லாம் இது நன்மை. கணக்கே இல்லாத வணிகர்களுக்கு இது ரொம்பக் கொடுமையாகத்தான் இருக்கும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசுக்கு சிரமம் இல்லாமல், இழப்பு இல்லாமல், VAT-ஐ நடைமுறைப்படுத்த முடியாது. VAT-ஐ அறிமுகப்படுத்தி, அமல்படுத்தினாலே, இந்த மாநில அரசுக்கு ஆண்டுக்கு 2,500 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, மத்திய அரசு முழுவதுமாக நஷ்டயீட்டை வழங்கி, அந்த இழப்பைச் சரிக்கட்டினால்தான், நாங்கள் அமல்படுத்த முடியுமே தவிர, இல்லையென்றால் அமல்படுத்த முடியாது என்பதைத் தெளிவாக மத்திய அரசுக்கே தெரிவித்திருக்கிறோம்.

*பிற்பகல் 1-20*

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய நோக்கம்கூட, மத்திய அரசு நஷ்டயீட்டைக் கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். On condition--அந்த condition-என்பதோடுதான் இதைக் கொண்டுவர விரும்புகிறோம், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை. இல்லையென்றால், தமிழ்நாட்டில் இப்போது வேண்டியதில்லை. இன்னும் 10 வருடம் தள்ளிப் போடுவோம். அதற்காக நாம் இங்கே வரிச் சுமையை ஏற்படுத்தக் கூடாது. மத்திய அரசுக்கு 35% Income Tax வரியாக வருகிறதென்றால் நமக்கு வரவேண்டிய பங்கை, கண்டிப்பாகப் போராடிப் பெறவேண்டும். இதிலே கொஞ்சம்கூட நாங்கள் பின்தங்கவில்லை. ஆகையால் VAT இன்னும் வருமா, வராதா--ஜூன் 1 ஆம் தேதி வருமா, வராதா என்கின்ற நிலை இருக்கிறது. 2,500 கோடி ரூபாயை இழந்து--நாங்கள் தமிழ்நாட்டுக்கு பல நன்மைகள் செய்ய வேண்டுமென்ற நிலையிலே, கஜானா ரொம்பக் காலியாக இருக்கின்ற நிலையிலே, மீண்டும் 2,500 கோடி ரூபாய் விற்பனை வரி மூலம் நஷ்டம் ஏற்படுத்திக் கொண்டு நாம் இங்கு அரசாங்கம் நடத்த முடியாது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** ஒரு வரியில் பேச்சை முடித்துக்கொள்கிறேன். ஆகையால், VAT மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியத்தின் நிலையான முகவரியும், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாத உத்தமக் குணமும், கள்ளங்கபடமில்லா வெள்ளைத் தாமரையில் வீற்றிருக்கும் தெய்வாம்சமும், பொது வாழ்வில் தூய்மையும், மக்கள் சேவையில் வாய்மையும், இறையருளால் நிரம்பப் பெற்றிருக்கும், எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பாத மலர்களில் என்னுடைய பணிவான வணக்கத்தினைச் சமர்ப்பிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த 12-வது சட்டமன்றத்தில் வணிக வரித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு எனது பதிலுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

[திரு. செ.ம. வேலுசாமி] [2003 ஏப்ரல் 30

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி"

என்ற குறளுக்கிணங்க, நமது தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் சீரிய தலைமையிலுள்ள ஆட்சியில், வணிக வரித் துறை அயராது உழைத்து, புத்துணர்ச்சியுடனும், புது வேகத்துடனும், நேர்மையும், நியாயமும் கைகோர்த்துச் செல்லும் வண்ணம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

மாநிலத்தின் நிதியாதாரங்களுக்கு வணிக வரி 'எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்' என்பதற்கேற்ப, சிரசாக, ஒரு அரசின் செயல்பாட்டிற்கு சிகரம் போல், மிக அதிகமான வரி வருவாய் ஈட்டித் தருகிற துறையாக அமைந்துள்ளது. ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும், அந்தப் பொருளாதாரத்தின் உச்சக்கட்டத்தை எட்டிப் பிடிப்பதற்கும் மிகவும் உறுதுணையாக இருந்து, அந்த நிதியைத் திரட்டித் தருவது இந்த வணிக வரித் துறைதான்.

வரி விதிப்பில் எந்தவிதமான வரியை விதிக்க வேண்டுமென்றால்-- Good Tax System should ensure maximum social benefits to the society—நல்ல வரிக் கொள்கை என்பது சமுதாயத்திற்கு மிக அதிகமான நன்மையைத் தருவதாக அமையவேண்டும் எனப் பொருளாதார மேதை ஆடம் ஸ்மித் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கருத்தின் அடிப்படையில், வணிக வரித் துறை, தமிழக அரசின் வருவாயில் 66 விழுக்காட்டினை ஈட்டித் தந்து, அரசின் பொது நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கான நிதியாதாரங்களைப் பெருக்குவதில் முன்னோடியாகச் செயல்படுகிறது.

**வரி வருவாய் வசூல்**—கடந்த தி.மு.க. ஆட்சியின் திறமையற்ற நிருவாகத்தின் காரணமாக ஏற்பட்ட தொழில் வளர்ச்சியின்மை, பொருளாதாரப் பின்னடைவு என்பன போன்ற இடர்ப்பாடுகளுக்கு இடையிலும், 2001-2002 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் சுமார் 8,905 கோடி ரூபாய் மொத்த வருவாய் ஈட்டப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியில் ஈட்டபபட்ட வருவாயைக் காட்டிலும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் 241 கோடி ரூபாய் அதிகமாக ஈட்டப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியின் சிறப்பான மற்றும் திறமையான



2003 ஏப்ரல் 30] [திரு. செ.ம. வேலுசாமி]

நிருவாகம் காரணமாக, கடந்த ஆண்டு ஈட்டப்பட்ட வரி வருவாயைக் காட்டிலும் சுமார் 1,300 கோடி ரூபாய் அதிகமாக ஈட்டி, தமிழக வரலாற்றில் முதன்முறையாக 10,200 கோடி ரூபாய் (மேசையைத் தட்டும் ஒலி) வரி வருமானத்தைப் பெற்று மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு மகத்தான சாதனை புரிந்துள்ளது.

பிற்பகல் 1-25

**வரி நிலுவை**—வரி நிலுவை மிகவும் அதிகமாக இருந்ததற்கு, கடந்த தி.மு.க. ஆட்சியில் வணிக வரித் துறைப் பொறுப்பினைத் தன்னிடம் வைத்திருந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியே காரணம். மேலும், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அவசரமாக முடிக்கப்பட்ட வரி விதிப்புகளாலும், வரி விதிப்புகளை முடிப்பதில் தவறான அணுகுமுறையினைக் கையாண்டதாலும், வரி வசூலில் தீவிரக் கவனம் செலுத்தாததாலும், வரி நிலுவை அதிகரித்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் 1996 ஆம் ஆண்டு ஆட்சியின்போது வரி நிலுவை ரூபாய் 2,184 கோடியாக மட்டுமே இருந்தது. ஆனால் தி.மு.க. ஆட்சியின் இறுதிக் காலமான 2001 ஆம் ஆண்டு வரி நிலுவை ரூபாய் 7,244 கோடியாக உயர்ந்தது. அதாவது, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில், அவர்களது நிர்வாகச் சீர்கேடு காரணமாக வரி நிலுவையானது ரூபாய் 5,060 கோடி என்ற நிலைக்கு, எந்தக் காலத்திலும் இல்லாத அளவிலே உயர்ந்தது என்பது தெளிவாகிறது.

தற்போது மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசானது, வரி நிலுவை வசூலிலே முன்னேற்றம் காண, பல்வேறு பயன் அளிக்கக்கூடிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதால் வரி வசூல் அதிகரித்து, வரி நிலுவை குறைந்துள்ளது.

**செயலாக்கப் பிரிவு**—வணிக வரி நிர்வாகத்தில் Enforcement Wing-ன் பங்கு மிக முக்கியமானதாகும். இப்பிரிவு, வரி ஏய்ப்பினைத் தடுப்பது மட்டுமல்லாமல், வரி ஏய்ப்புச் செயலுக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது. நிறுவனங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றை ஆய்வு செய்தல் மற்றும் வாகனங்களைச் சோதனையிடுதல் போன்றவற்றின் மூலம் வரி ஏய்ப்பினைக் கண்டறிவது இந்தப் பிரிவின் முக்கியமான பணிகளாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் 1991-96 ஆட்சியின்போது தமிழகத்திலே 63 சோதனைச் சாவடிகள்

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி"

என்ற குறளுக்கிணங்க, நமது தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் சீரிய தலைமையிலுள்ள ஆட்சியில், வணிக வரித் துறை அயராது உழைத்து, புத்துணர்ச்சியுடனும், புது வேகத்துடனும், நேர்மையும், நியாயமும் கைகோர்த்துச் செல்லும் வண்ணம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

மாநிலத்தின் நிதியாதாரங்களுக்கு வணிக வரி 'எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்' என்பதற்கேற்ப, சிரசாக, ஒரு அரசின் செயல்பாட்டிற்கு சிகரம் போல், மிக அதிகமான வரி வருவாய் ஈட்டித் தருகிற துறையாக அமைந்துள்ளது. ஒரு நாட்டினுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும், அந்தப் பொருளாதாரத்தின் உச்சக்கட்டத்தை எட்டிப் பிடிப்பதற்கும் மிகவும் உறுதுணையாக இருந்து, அந்த நிதியைத் திரட்டித் தருவது இந்த வணிக வரித் துறைதான்.

வரி விதிப்பில் எந்தவிதமான வரியை விதிக்க வேண்டுமென்றால்— Good Tax System should ensure maximum social benefits to the society— நல்ல வரிக் கொள்கை என்பது சமுதாயத்திற்கு மிக அதிகமான நன்மையைத் தருவதாக அமையவேண்டும் எனப் பொருளாதார மேதை ஆடம் ஸ்மித் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கருத்தின் அடிப்படையில், வணிக வரித் துறை, தமிழக அரசின் வருவாயில் 66 விழுக்காட்டினை ஈட்டித் தந்து, அரசின் பொது நலத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்கான நிதியாதாரங்களைப் பெருக்குவதில் முன்னோடியாகச் செயல்படுகிறது.

**வரி வருவாய் வசூல்**—கடந்த தி.மு.க. ஆட்சியின் திறமையற்ற நிருவாகத்தின் காரணமாக ஏற்பட்ட தொழில் வளர்ச்சியின்மை, பொருளாதாரப் பின்னடைவு என்பன போன்ற இடர்ப்பாடுகளுக்கு இடையிலும், 2001-2002 ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் சுமார் 8,905 கோடி ரூபாய் மொத்த வருவாய் ஈட்டப்பட்டது. 1999-2000 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சியில் ஈட்டபபட்ட வருவாயைக் காட்டிலும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் 241 கோடி ரூபாய் அதிகமாக ஈட்டப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியின் சிறப்பான மற்றும் திறமையான



நடப்பு நிதியாண்டில், சோதனைச் சாவடிகள் உள்பட அனைத்து வணிக வரி அலுவலகங்களும் ஒரு மையத் தகவல் கணிப்பொறியுடன் இணைக்கப்படும். துல்லியமான தகவல்களைப் பராமரிக்கவும், தகவல் பதிவுகளில் ஏற்படும் தவறுகள் மற்றும் தாமதத்தைக் கட்டுப்படுத்தவும், ஒரு I.C.R. Scanning System பயன்படுத்தப்படும். மாநிலத்தில் வரி விதிப்பிற்கு உட்படும் வணிகர்களின் பதிவுகள் மற்றும் வருவாய்த் தகவல்களை மைய மேல்நிலைக் கணிப்பொறி கட்டுப்படுத்தும். பொது மக்களுக்கு மேலும் அதிகத் தகவல்களைத் தர, மின்னஞ்சல் வசதியுடன் துறையில் தற்போது செயல்பட்டு வரும் www.tnsalestax.com என்ற இணையதளம் இன்னும் அதிகத் தகவல்களை அளிக்கக்கூடிய வகையிலே மேம்படுத்தப்பட உள்ளது.

உலக அளவிலே மதிப்புக் கூட்டு வரி முறை ஏற்கப்பட்டு, இன்று சுமார் 120 நாடுகளில் நடைமுறையில் உள்ளது. இந்த மதிப்புக் கூட்டு வரி நடைமுறை திடீரென்றோ, அவசரப்பட்டோ எடுக்கப்பட்ட முடிவு அல்ல. 1993-94 ஆம் ஆண்டிலிருந்தே இதற்கான நடவடிக்கைகள் தேசிய அளவிலே எடுக்கப்பட்டுள்ளன.

மதிப்புக் கூட்டு வரியினை அமல்படுத்துவதால் தமிழ்நாட்டிற்கு ஏற்படக்கூடிய மிகுந்த வருவாய் இழப்பினை ஈடு செய்ய வேண்டும் என்று மத்திய அரசை, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் வற்புறுத்தியுள்ளார்கள். 21—12—2002 ஆம் ஆண்டு புது டில்லியிலே நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலே கலந்து கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள், மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதால் மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பினை, மத்திய அரசு 100 சதவீதம் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு ஈடு செய்ய வேண்டும் என்றும், மத்திய விற்பனை வரி நீக்கப்படுவதால் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பினை, 100 சதவீதம் நிரந்தரமாக ஈடு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருத்தினை, மாநாட்டிலே கலந்து கொண்ட பல்வேறு மாநில முதல்வர்கள் முழுமையாக ஆதரித்தார்கள்.

இந்தக் குழுவின் கூட்டத்தில் தமிழகத்தின் கருத்துகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தின்கீழ் சில பொருட்களின்மீது உள்ள வரி விகிதங்கள் நம்முடைய மாநிலத்திற்குப் பாதகமாக உள்ளன. நமது மாநிலத்தில் மிகவும் அத்தியாவசியமான சில பொருட்களுக்குப் பல ஆண்டு காலமாக வரி ஏதும் விதிக்கப்படாமல்

இருந்தன. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியின் முறைகேட்டுக்கு எடுத்துக்காட்டாக அப்போதைய வணிக வரித் துறையின் முதன்மை ஆணையர், அரசின் முன்அனுமதியின்றித் தன்னிச்சையாக முடிவெடுத்து, 13 சோதனைச் சாவடிகளை ஒரே நாளிலே 19-5-2000 அன்று கலைத்துள்ளார். மேலும், தி.மு.க. ஆட்சியில் 4 சோதனைச் சாவடிகளை வணிக வரித் துறையின் முதன்மை ஆணையர் 26-5-2000 அன்று கலைத்துள்ளார். இந்த 17 சோதனைச் சாவடிகளைக் கலைத்ததற்கு வணிக வரித் துறை பொறுப்பினைத் தன்னிடம் வைத்திருந்த முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி முக்கிய காரணம். இதன் மூலம், அரசுக்குப் பல கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படுத்தி, வரி ஏட்ப்புக்கு அன்றைய முதல்வர் திரு. கருணாநிதி மறைமுகமாக உறுதுணையாக இருந்தது தெரிய வருகிறது.

இதுபோன்று, வணிக வரித் துறையை முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி தன்வசம் வைத்துக்கொண்டு, தனக்கு வேண்டியவர் பயன்பெறும் வண்ணம், சமையல் எண்ணெய்க்கு வரி விலக்குக் கொடுப்பதாகக் கூறி, அதன் மூலம் அரசிற்குப் பல கோடி ரூபாய் வருவாய் இழப்பை ஏற்படுத்தியுள்ளதும் தெரிய வருகிறது.

இதேபோன்று, கடந்த தி.மு.க. ஆட்சியாளருக்கு வேண்டியவரான வணிக வரித் துறையினுடைய முதன்மை ஆணையாளராக இருந்தவர், ஆட்சியாளர்களுக்கு நெருங்கிய நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு, விதிமுறைகளுக்கு முரண்பாடாகச் செயல்பட்டு, 144 கோடியே 66 இலட்சம் ரூபாய் அளவுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் வகையில், வரியினையும்/வரி பாக்கியினையும் திரும்பச் செலுத்துவதற்குக் கால அவகாசமும், வரித் தடையாணைகளையும் தன்னிச்சையாக வழங்கியுள்ளார்.

மேலும், கடந்த தி.மு.க. ஆட்சியாளர்களுக்கு நெருங்கிய சிமெண்ட் நிறுவனங்களுக்கு, விதிமுறைகளுக்குப் புறம்பாக அரசாணைகள் பிறப்பித்து, அதன் மூலம் அந்த சிமெண்ட் நிறுவனங்கள் மட்டுமே பல கோடி ரூபாய் அளவிற்கு வரிச் சலுகைகளைப் பெற்றுப் பயன்பெறும் வகையில் முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி தன்னிச்சையாகச் செயல்பட்டுள்ளது தெரிய வருகிறது.

இதனால் பாதிப்பிற்கு உட்பட்ட சிமெண்ட் நிறுவனங்கள் நீதிமன்றங்களை அணுகி, அவர்கள் நீதியைப் பெற வேண்டிய சூழ்நிலை முந்தைய ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டது.



செயலாக்கப் பிரிவினுடைய செயல்பாடுகளைக் கண்காணிக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையின்பேரில், தமிழ்நாட்டிலுள்ள பல சோதனைச் சாவடிகளுக்கு, நானும், அதிகாரிகளும் திடீரென நேரிலே சென்று தணிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம். வரி ஏய்ப்பினைத் தடுத்து, இப்படிப்பட்ட தீவிர நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களது அரசு எடுத்து வருகிறது என்பதனை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சோதனைச் சாவடிகளில் பணிபுரியும் பணியாளர்களின் பணித் திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக, போக்குவரத்துக் காவல் துறையினர் அணிந்திருப்பது போல, 70 ஒளி பிரதிபலிக்கும் பட்டைகள் மற்றும் 70 ஒளிரும் குச்சிகள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே வழங்கப்பட்டுள்ளன.

செயலாக்கப் பிரிவு, வரி ஏய்ப்புக்கு அதிகம் வாய்ப்புள்ள பொருட்களின் விவரங்களைக் கண்டறிந்து, பொருட்களின் கொள்முதல், படிமங்கள் ஆகியவற்றை சென்னைத் துறைமுகம் மற்றும் வெளி மாநிலத் தயாரிப்பு முனைகளில் ஆய்வு செய்து, பிளாஸ்டிக் மூலப்பொருளில் மட்டும் 250 கோடி ரூபாய் விற்பனைத் தொகை வரி ஏய்ப்புச் செய்துள்ளதைக் கண்டுபிடித்து சாதனை புரிந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் செயலாக்கப் பிரிவு...(மணியடிக்கப்பெற்றது.)

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன்அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மேலும், செயலாக்கப் பிரிவு மாநிலத்தில் மேற்கொண்ட முறையான தணிக்கைகளில், பல வரி ஏய்ப்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக, அரசிற்குப் பல கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் அதிகமாக ஈட்டப்பட்டுள்ளது.

(1) பின்னல் ஆடை வரி ஏய்ப்பில் சுமார் ரூ.2 கோடியே 56 இலட்சமும், (2) மரத்துண்டு வரி ஏய்ப்பில் சுமார் ரூ.57 இலட்சமும், (3) எண்ணெய் வரி ஏய்ப்பில் சுமார் ரூ.47 இலட்சமும், (4) பருத்தி

நூல் வரி ஏய்ப்பில் சுமார் ரூ.20 இலட்சமும், (5) சிமெண்ட் மறு விற்பனை வரி ஏய்ப்பில் சுமார் ரூ.14 இலட்சமும், (6) சாயம் மற்றும் இரசாயனப் பொருட்கள் வரி ஏய்ப்பில் ரூ.7 இலட்சமும், (7) பிளாஸ்டிக் சிறுமணிகள் வரி ஏய்ப்பில் சுமார் ரூ.1 கோடியே 20 இலட்சமும், (8) வெள்ளை மண்ணெண்ணெய் வரி ஏய்ப்பில் சுமார் ரூ.2 கோடியே 34 இலட்சமும் அரசுக்கு வரியாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஈட்டப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், விற்பனை வரி ஒத்திவைப்பு/தள்ளுபடித் திட்டத்தின்கீழ் பயன்பெறும் வணிக நிறுவனங்களைச் சரிபார்த்ததில், ஒரு சில நிறுவனங்கள் நிபந்தனைகளை மீறி உள்ளதால், அந்த நிறுவனங்களிடமிருந்து கடந்த ஓராண்டில் மட்டும் அரசுக்கு சுமார் ரூ.30 கோடி அளவிற்கு வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

கடந்த தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற வரி ஏய்ப்பு/வரிக் கசிவு போன்றவை கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றைத் தடுக்கும் வண்ணம் செயலாக்கப் பிரிவின் நடவடிக்கைகள்--enforcement கடுமையாக்கப்பட்டுள்ளன என்பதை இம்மாமன்றத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இந்த நவீன காலகட்டத்தில் கணினியின் பயன் மிகவும் இன்றியமையாததாக உள்ளது. வணிக வரித் துறையில், தற்போது 323 வரி விதிப்பு வட்டங்களிலே 140 வரி விதிப்பு வட்டங்கள், 182 உதவி ஆணையர் அலுவலகங்கள், 5 துணை ஆணையர் அலுவலகங்கள், 6 மாநில எல்லை தணிக்கைச் சாவடிகள் முதலியன ரூ.3 கோடியே 57 இலட்சம் செலவில் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. வணிக வரித் துறை முழுவதையும் கணினிமயமாக்கும் பொருட்டு, மேலும் ரூபாய் 10 கோடியே 22 இலட்சத்தை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 25—6—2002 அன்று வழங்கியுள்ளார்கள். இந்தப் பணி நிறைவுபெறும் தறுவாயில் உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னையில் கணிப்பொறி மையம் ஓர் ஒருங்கிணைப்பு முனையமாகச் செயல்படும். இதுவரை 1,277 அலுவலர்களும், 184 உதவியாளர்களும், மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தின்கீழ் கணினிப் பயிற்சி பெற்றுள்ளனர்.



நடப்பு நிதியாண்டில், சோதனைச் சாவடிகள் உள்பட அனைத்து வணிக வரி அலுவலகங்களும் ஒரு மையத் தகவல் கணிப்பொறியுடன் இணைக்கப்படும். துல்லியமான தகவல்களைப் பராமரிக்கவும், தகவல் பதிவுகளில் ஏற்படும் தவறுகள் மற்றும் தாமதத்தைக் கட்டுப்படுத்தவும், ஒரு I.C.R. Scanning System பயன்படுத்தப்படும். மாநிலத்தில் வரி விதிப்பிற்கு உட்படும் வணிகர்களின் பதிவுகள் மற்றும் வருவாய்த் தகவல்களை மைய மேல்நிலைக் கணிப்பொறி கட்டுப்படுத்தும். பொது மக்களுக்கு மேலும் அதிகத் தகவல்களைத் தர, மின்னஞ்சல் வசதியுடன் துறையில் தற்போது செயல்பட்டு வரும் www.tnsalestax.com என்ற இணையதளம் இன்னும் அதிகத் தகவல்களை அளிக்கக்கூடிய வகையிலே மேம்படுத்தப்பட உள்ளது.

உலக அளவிலே மதிப்புக் கூட்டு வரி முறை ஏற்கப்பட்டு, இன்று சுமார் 120 நாடுகளில் நடைமுறையில் உள்ளது. இந்த மதிப்புக் கூட்டு வரி நடைமுறை திடீரென்றோ, அவசரப்பட்டோ எடுக்கப்பட்ட முடிவு அல்ல. 1993-94 ஆம் ஆண்டிலிருந்தே இதற்கான நடவடிக்கைகள் தேசிய அளவிலே எடுக்கப்பட்டுள்ளன.

மதிப்புக் கூட்டு வரியினை அமல்படுத்துவதால் தமிழ்நாட்டிற்கு ஏற்படக்கூடிய மிகுந்த வருவாய் இழப்பினை ஈடு செய்ய வேண்டும் என்று மத்திய அரசை, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் வற்புறுத்தியுள்ளார்கள். 21—12—2002 ஆம் ஆண்டு புது டில்லியிலே நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலே கலந்து கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள், மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதால் மாநிலங்களுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பினை, மத்திய அரசு 100 சதவீதம் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு ஈடு செய்ய வேண்டும் என்றும், மத்திய விற்பனை வரி நீக்கப்படுவதால் ஏற்படக்கூடிய வருவாய் இழப்பினை, 100 சதவீதம் நிரந்தரமாக ஈடு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருத்தினை, மாநாட்டிலே கலந்து கொண்ட பல்வேறு மாநில முதல்வர்கள் முழுமையாக ஆதரித்தார்கள்.

இந்தக் குழுவின் கூட்டத்தில் தமிழகத்தின் கருத்துகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. மதிப்புக் கூட்டு வரித் திட்டத்தின்கீழ் சில பொருட்களின்மீது உள்ள வரி விகிதங்கள் நம்முடைய மாநிலத்திற்குப் பாதகமாக உள்ளன. நமது மாநிலத்தில் மிகவும் அத்தியாவசியமான சில பொருட்களுக்குப் பல ஆண்டு காலமாக வரி ஏதும் விதிக்கப்படாமல்

[திரு. செ.ம. வேலுசாமி] [2003 ஏப்ரல் 30

இருந்து வருகிறது. அத்தகைய பொருட்களுக்கு வரி விதிக்கப்பட்டால், நமது மாநிலத்தின் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். இதையெல்லாம் கருத்தில் கொண்டு, சில அத்தியாவசியமான பொருட்களின்மீது நம் மாநிலத்தில் உள்ள சூழ்நிலைக்கேற்ப வரி விகிதங்களை நிர்ணயிக்க மத்திய அரசையும், அதிகாரமளிக்கப்பட்ட குழுவையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு வலியுறுத்தி வருகிறது.

*பிற்பகல் 1-35*

மேலும், மதிப்புக் கூட்டு வரியை நடைமுறைப்படுத்தும்போது தமிழகத்தில் சிறு வியாபாரிகளுக்கும், பொது மக்களுக்கும், மக்கள் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களுக்கும், ஒரு சிறு பாதிப்புக்கூட ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மைய அரசையும், அதிகாரம் அளிக்கப்பட்ட குழுவையும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவின் அரசு வற்புறுத்தி வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணிகர் நல வாரியம் செயல்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் இராசேந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். வணிகர் நலனுக்காக, அவர்களுக்கு உதவும் நோக்கத்துடன் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் 1993-94 ஆம் ஆண்டு முதலிலே நிதியுதவி வழங்கினார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, நான் ஏற்கெனவே கூறியபடி 350 உறுப்பினர்களுக்குக் கொடுத்ததில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னர், 106 பேருக்கு மட்டும், இன்றுவரை 1½ ஆண்டுகளுக்குள் கொடுத்திருக்கிறோம் என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். வணிகர் நல வாரியம் செயல்படாத ஆண்டான 1996-97-லே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே ஒரு வணிகருக்குக்கூட நல வாரியத்தினுடைய உதவி கிடைக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் எடுக்கப்பட்ட சிக்கன நடவடிக்கையின் காரணமாக வணிக வரித் துறையின் செலவினம் மிகவும் குறைந்துள்ளது. கடந்த தி.மு.க. ஆட்சியிலே 2000-2001 ஆம் ஆண்டில் வணிக வரித் துறையினுடைய செலவினம் 98 கோடியே 57 இலட்சம் ரூபாயாகும். ஆனால், தற்போது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில் 2002-2003 ஆம் ஆண்டில் செலவினம் ரூபாய் 84 கோடியே 94 இலட்சமாகும்.



2003 ஏப்ரல் 30] [திரு. செ.ம. வேலுசாமி]

வணிகர்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, தொழில் துறையின் வளர்ச்சியை உருவாக்கும் நோக்கோடு, பிளாஸ்டிக் மூலப்பொருட்கள், பி.வி.சி. ரெசின், பொட்டாசியம் குளோரைடு, லேப் சோடா, பிளாஸ்டிக் சோடா, குளோரின், அலுமினியம் போன்றவற்றின் மீதான வரி 3 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

பெரும் வணிகர்களின் பூசல்களைத் தீர்க்கத் தீர்வாணையம் ஒன்றை அமைக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

சர்ச்சைக்குரிய வரி விதிப்புகளால் வணிகர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் களைய சிறப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி நிலையினைக் கருத்தில்கொண்டு, பொது மக்களின் நலன் கருதி, அரிசியின்மீது விதிக்கப்பட்ட 2 சதவீத வரிக்கு அரசு விலக்கு அளித்தது.

தமிழகத்திலே சுற்றுலா வளர்ச்சியினை ஊக்குவிக்கும் பொருட்டு, தங்கும் விடுதிகளின்மீது விதிக்கப்பட்டிருந்த ஆடம்பர வரி 25 சதவீதத்திலிருந்து 12.5 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. குழந்தைகளின் நலன் கருதி, கேளிக்கைப் பூங்காக்களுக்கு விதித்திருந்த 20 சதவீத வரி 10 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

தமிழ்நாடு அரசுத் துறைகளுக்குப் பொருட்கள் விற்பனை செய்யும்போது 4 சதவீதம் என இருந்த சலுகை வரி கடந்த தி.மு.க. ஆட்சியில் நீக்கப்பட்டது. இதனால் தமிழகத்தில் தொழில்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. தமிழகத்தில் தொழிற்சாலைகளை உருவாக்கும் நோக்கோடு, அரசுத் துறைகளுக்கு விற்பனை செய்யும் பொருட்களுக்கு 4 சதவிகிதச் சலுகை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அறிவுரையின் பேரில், வணிக வரித் துறையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளை வெளியிடுகிறேன்:—

(1) வெள்ளை மண்ணெண்ணெய், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள் (I.M.F.L) மற்றும் அயல் நாட்டு மது வகைகள்

ஆகியவற்றிற்கான இடைமாறுபாட்டு அனுமதிச் சீட்டு (Transit Pass) அறிமுகம்:—

(அ) தற்போது தாவர எண்ணெய்கள், தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள், கச்சா இரப்பர், சலவைக் கற்கள், டீசல் எஞ்சின்கள், சலவை இயந்திரங்கள், குளிர்பதனப் பெட்டிகள் போன்றவற்றிற்கு இடைமாறுபாட்டு அனுமதிச் சீட்டு (Transit Pass) முறை நடைமுறையில் உள்ளது. இம்முறையின்படி தமிழ்நாட்டின் வழியாகப் பொருட்கள் கொண்டு செல்லும்போது, அவை மாநிலத்தில் நுழையும்போது இடைமாறுபாட்டு அனுமதிச் சீட்டினை சோதனைச் சாவடியில் பெற்றுக்கொண்டு, குறிப்பிட்ட காலவரையறைக்குள் மாநிலத்திலிருந்து வெளியேறும்போது, அதனை அங்குள்ள சோதனைச் சாவடியிலே சமர்ப்பிக்க வேண்டும். வரி ஏய்ப்பு மற்றும் சட்ட விரோதமான சரக்கு மாற்றம் போன்றவற்றைத் தடுக்கும் வகையில் இப்போது இம்முறை வெள்ளை மண்ணெண்ணெய், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது வகைகள் மற்றும் அயல் நாட்டு மது வகைகள் ஆகியவற்றுக்கும் அறிமுகப்படுத்தப்படும்.

பிற்பகல் 1-40

(ஆ) மேலும், அறிவிக்கை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பெருமளவில் இறக்குமதி செய்யப்படும் வரி ஏய்ப்பிற்கு வாய்ப்புள்ள பொருட்களுக்கும் இடைமாறுபாட்டு அனுமதிச் சீட்டு (Transit Pass) துறைமுகங்களில் வழங்கப்படும். இதன் விளைவாக, சமையல் எண்ணெய் இடைமாறுபாட்டு அனுமதிச் சீட்டு முறையின்கீழ் கொண்டு வரப்படும்.

(2) பொது ஏலத்தில் ஏலம் கேட்கப்படாத சொத்துகளை அரசுத் துறைகளே வாங்கிட அதிகாரம் அளிக்கும் வகையில் வருவாய் மீட்புச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வருதல்:—

அரசுக்கு வரவேண்டிய வருவாய் நிலுவையை வசூல் செய்ய வருவாய் மீட்புச் சட்டத்தின்கீழ் தற்போது நடவடிக்கை எடுக்க வணிக வரித் துறை அலுவலர்களுக்கும்கூட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனினும், உள்ளூரில் உள்ளோரின் கூட்டுச் சதியின் காரணமாக, அவர்களது செல்வாக்கின் காரணமாக, வருவாய் மீட்புச் சட்டத்தின்கீழ் பொது ஏலத்தின்போது ஏலம் கேட்க எவரும் முன்வராத நிலை அடிக்கடி ஏற்படுகிறது. இதற்குத் தீர்வு காணும்விதமாக, ஏலம் கேட்போர் எவரும் இல்லாத நிலையில் அரசுத் துறைகளே விற்பனைக்கு வந்துள்ள சொத்துகளை வாங்கிட அதிகாரம் அளித்திடும் வகையில் வருவாய் மீட்புச் சட்டத்திற்குத் தேவையான திருத்தங்கள் கொண்டு



வர மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இந்த நடவடிக்கை, நிலுவையிலுள்ள விற்பனை வரியைச் சிறந்த முறையில் வசூலித்திட வழி வகுத்திடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(3) வணிக வரித் துறையில் அமலாக்கப் பிரிவிற்கு செல்லுமிடத் தொலைபேசிகள் (Cell phone) வழங்குதல்:—

வணிக வரித் துறையின் அமலாக்கப் பிரிவு சிறப்பாகச் செயல்பட 7 துணை ஆணையர்கள், 10 உதவி ஆணையர்கள் மற்றும் 51 சுற்றுப் படைகளுக்கும் செல்லுமிடத் தொலைபேசிகள் (Cell phones) வழங்க தமிழகத்திலேயே முதன்முறையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்று கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) துரிதச் செய்திப் பரிமாற்றத்தை ஏற்படுத்தி, வரி ஏய்ப்பைத் தடுத்திட உடனடி நடவடிக்கை எடுத்திட அது ஏதுவாக இருக்கும்.

(4) வரி ஏய்ப்புக் குறித்து தகவல்கள் பெற்றிட தமிழகத்திலேயே முதன்முறையாக வணிக வரி ஆணையர் அலுவலகத்திற்கு, தகவல் பரிமாற்றக் குரல் பதிவு வசதி (Interactive Voice Recording System) ஏற்படுத்த முதன்முதலாக வணிக வரித் துறைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

வரி ஏய்ப்பு நிகழ்வுகள் குறித்து பொது மக்கள் தகவல்கள் தந்திட வகை செய்ய, தகவல் பரிமாற்றக் குரல் பதிவு வசதி ஒன்று வணிக வரி ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் அறிமுகப்படுத்தப்படும். பொது மக்கள் இத்தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு தகவல்களைப் பதிவு செய்திடலாம். தகவல் அளிப்பவர் பற்றிய விவரங்கள் இரகசியமாக வைக்கப்படும்.

(5) வணிக வரித் துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்குதல்:— சிறப்பாகப் பணிபுரியும் வணிக வரித் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை இனம் கண்டுகொள்ளும் வகையிலும், ஊக்குவிக்கும் வகையிலும், வியத்தகு வகையில் வரி ஏய்ப்பினைக் கண்டுபிடிப்பவர், குறிப்பிடத் தகுந்த அளவு வருவாயை வசூலிப்பவர், மேலும் நடப்பு மற்றும் முந்தைய ஆண்டுகளுக்கான வரி விதிப்புகளை முழுவதுமாக முடிப்பவர் போன்றவர்களுக்கு ஆண்டுதோறும் ரொக்கப் பரிசும், பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

இதன்படி அமலாக்கப் பிரிவில் மூன்று பரிசுகளும், பிற பிரிவுகளில் மூன்று பரிசுகளும் அளிக்கப்படும். ஒவ்வொரு பரிசும் ரூ.25000/- ரொக்கமாக இருக்கும். இத்தகைய ஊக்குவிப்புத் திட்டத்திற்கு தமிழகத்திலேயே முதன்முறையாக மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் செயல் ஆணை வழங்கியுள்ளார்கள் என்பதனை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(6) கடலூரில் உள்ள வணிக வரி உதவி ஆணையர் அலுவலகக் கட்டடத்தில் மூன்றாவது தளம் மற்றும் வண்டி நிறுத்துமிடம் கட்ட ரூ21.42 இலட்சம், சேலம் வணிக வரிப் பணியாளர்கள் குடியிருப்பில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு தோண்ட ரூ.1 இலட்சம், துணை ஆணையர்கள் (செயல்), திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி அலுவலகங்களுக்கு இயந்திரம் வழங்க ரூ. 1 இலட்சத்து 20 ஆயிரமும், சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் அலுவலகத்திற்கு உயர் அழுத்த நகல் எடுக்கும் இயந்திரம் வாங்க ரூ.1 இலட்சத்து 80 ஆயிரமும், கோவை, வணிக வரி அலுவலகக் கட்டடங்களில் ஒளி வெள்ள விளக்குகள் பொருத்துவதற்கு ரூ. 60 ஆயிரமும், வணிக வரித் துறையில் தொலைபேசி இல்லாத 9 சோதனைச் சாவடிகளுக்குத் தொலைபேசி இணைப்பு வழங்க ரூ. 2 இலட்சத்து 57 ஆயிரமும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்கள் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

(7) வணிக வரித் துறைக்கு 1991-94-ல் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் 29 வாகனங்கள் கொடுக்கப்பட்டன. அதற்குப் பின்னர் ஓரிரு வாகனங்கள்தான் வணிக வரித் துறைக்கே கொடுக்கப்பட்டன. மீண்டும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, இன்றையதினம் கருணையோடு வணிக வரித் துறைக்கு என்று 34 புதிய வாகனங்கள் 1 கோடியே 24 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயிலே வாங்க அனுமதித்துள்ளார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு"

என்னும் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழும், ஒப்பாரும் மிக்காரும் இல்லா எங்கள் உத்தமத் தலைவியே!

ஆறு கோடி மக்களுக்கும் அருள் பாலிக்கும் கற்பக விருட்சமே!!



இந்தியாவில் தமிழகத்தை முதன்மை மாநிலமாக்குவேன் எனச் சூளுரைத்து, சுடர்முகம் காட்டி, எடுத்த பணி முடிக்க, ஊண் இன்றி உறக்கம் இன்றி, ஓய்வு இன்றி, நித்தம் நித்தம் பாடுபடும் முத்தமிழ் மக்களின் முகவரியே! நீங்கள் தொட்டது துலங்கும்; உங்கள் திருக்கரங்கள் பட்டதும் பரிமளிக்கும்.

சிங்கமே! சீர்மிகு தமிழகத்தின் அங்கமே!
எங்கள் இதய தெய்வமே!
தந்தையும் தாயுமாய் எங்கள் வாழ்வுமாய்,
வளஞ்சேர் தமிழகத்தின் நிகழ்காலமே!

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை இருகரம் கூப்பி வணங்கி, என்னுடைய பதிலுரையை நிறைவு செய்கிறேன்.

பிற்பகல் 1-45

மாண்புமிகு உறுப்பினர்கள் பல அரிய கருத்துகளை எடுத்துக் கூறியுள்ளீர்கள். மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துகளையும், வெட்டுத் தீர்மானங்களிலுள்ள கோரிக்கைகளையும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, இந்த வணிக வரித் துறை மானியக் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 10—வணிக வரித் துறை—வணிக வரிகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.எஸ் உலகரட்சகன், இருக்கையில் இல்லை.

திரு. பி.எஸ். உலகரட்சகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. ஜெயக்குமார்.

**திரு. கு. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ், இருக்கையில் இல்லை.

திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.



திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

“வணிக வரித் துறை—வணிக வரிகள் மானியக் கோரிக்கை எண் 10-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.446,60,09,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்” என்றும் மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்கு கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 5-5-2003, திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும்.

அனைவருக்கும் மே தின வாழ்த்துகள். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-47 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[2003 ஏப்ரல் 30

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*86. 19-7-1982-லிருந்து 31-10-1984 வரையிலான கால அளவிற்கு கடப்பா, ஷாஹாபாத் கற்களின் விற்பனை குறித்து 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க 15 சதவீத ஒருமுனை வரி விதிப்புக்கும், 5 சதவீத பலமுனை வரி விதிப்புக்குமிடையேயுள்ள வேறுபாட்டுத் தொகையான ரூ.1,04,319-ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து நான்காயிரத்து முந்நூற்றுப் பத்தொன்பது மட்டும்) தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரித் துறையின் 31-10-2002-ஆம் நாளிட்ட 126 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]*

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

254. மானியக் கோரிக்கை எண் 10-வணிக வரித் துறை-வணிக வரிகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

255. ஊரக வளர்ச்சித் துறையின் 'மக்கள் சாசனம்' 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

256. "மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள்" என்ற புத்தகம். (தமிழ்)

257. "மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருள்களின் படத்தொகுப்பு மற்றும் குறிப்பு" என்ற புத்தகம். (தமிழ்)

258. "கடலூர் மாவட்டப் பொன் விழா கிராம சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகள்" என்ற புத்தகம். (தமிழ்)

259. "திருவள்ளூர் மாவட்ட ஊரக உற்பத்திப் பொருள்கள்" பற்றிய சிறு புத்தகம். (சணல் காலணி) (ஆங்கிலம்)

260. "திருவள்ளூர் மாவட்ட ஊரக உற்பத்திப் பொருள்கள்" பற்றிய சிறு புத்தகம். (பனை ஓலை) (ஆங்கிலம்)

261. "திருவள்ளூர் மாவட்ட ஊரக உற்பத்திப் பொருள்கள்" பற்றிய சிறு புத்தகம். (சணல் பைகள்) (ஆங்கிலம்)



2003 ஏப்ரல் 30]

262. "திருவள்ளூர் மாவட்ட ஊரக உற்பத்திப் பொருள்கள்" பற்றிய சிறு புத்தகம். (தேங்காய் ஓட்டின் உற்பத்திப் பொருள்கள்) (ஆங்கிலம்)

263. "ஊரக உற்பத்திப் பொருள்களின் அட்டவணை" பற்றிய சிறு புத்தகம். (மாவட்ட ஊரக மேம்பாட்டு முகவாண்மை, காஞ்சிபுரம்) (ஆங்கிலம்)

264. "ஊரக உற்பத்திப் பொருள்களின் அட்டவணை" பற்றிய சிறு புத்தகம். (மாவட்ட ஊரக மேம்பாட்டு முகவாண்மை, வேலூர் மாவட்டம்) (ஆங்கிலம்)

265. மதிப்பீட்டுக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2001-2003)

266. மதிப்பீட்டுக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2001-2003)

267. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து ஒன்றாவது அறிக்கை. (2001-2003)

268. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து இரண்டாவது அறிக்கை. (2001-2003)

269. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து மூன்றாவது அறிக்கை. (2001-2003)

270. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து நான்காவது அறிக்கை. (2001-2003)

271. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து ஐந்தாவது அறிக்கை. (2001-2003)

272. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து ஆறாவது அறிக்கை. (2001-2003)

273. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து ஏழாவது அறிக்கை. (2001-2003)

274. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து எட்டாவது அறிக்கை. (2001-2003)

275. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று அறுபத்து ஒன்பதாவது அறிக்கை. (2001-2003)

[2003 ஏப்ரல் 30

276. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபதாவது அறிக்கை. (2001-2003)

277. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்து ஒன்றாவது அறிக்கை. (2001-2003)

278. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்து இரண்டாவது அறிக்கை. (2001-2003)

279. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று எழுபத்து மூன்றாவது அறிக்கை. (2001-2003)

280. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினான்காவது அறிக்கை. (2001-2003)

281. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினைந்தாவது அறிக்கை. (2001-2003)

282. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினாறாவது அறிக்கை. (2001-2003)

283. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினேழாவது அறிக்கை. (2001-2003)

284. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பதினெட்டாவது அறிக்கை. (2001-2003)

285. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்றுப் பத்தொன்பதாவது அறிக்கை. (2001-2003)

286. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபதாவது அறிக்கை. (2001-2003)

287. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து ஒன்றாவது அறிக்கை. (2001-2003)

288. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து இரண்டாவது அறிக்கை. (2001-2003)

289. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து மூன்றாவது அறிக்கை. (2001-2003)



2003 ஏப்ரல் 30]

290. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து நான்காவது அறிக்கை. (2001-2003)

291. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து ஐந்தாவது அறிக்கை. (2001-2003)

292. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து ஆறாவது அறிக்கை. (2001-2003)

293. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து ஏழாவது அறிக்கை. (2001-2003)

294. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து எட்டாவது அறிக்கை. (2001-2003)

295. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து ஒன்பதாவது அறிக்கை. (2001-2003)

296. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பதாவது அறிக்கை. (2001-2003)

297. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கை. (2001-2003)

298. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2001-2003)

299. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2001-2003)

300. அரசு உறுதிமொழிக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2001-2003)

301. அரசு உறுதிமொழிக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2001-2003)

302. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபதாவது அறிக்கை. (2001-2003)

303. அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்து ஒன்றாவது அறிக்கை. (2001-2003)

104. மனுக்கள் குழுவின் இருபத்து ஐந்தாவது அறிக்கை (2001-2003)

105. மனுக்கள் குழுவின் இருபத்து ஆறாவது அறிக்கை (2001-2003)

106. மனுக்கள் குழுவின் இருபத்து ஏழாவது அறிக்கை (2001-2003)

107. மனுக்கள் குழுவின் இருபத்து எட்டாவது அறிக்கை (2001-2003)

108. மனுக்கள் குழுவின் இருபத்து ஒன்பதாவது அறிக்கை (2001-2003)

109. மனுக்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை (2001-2003)

110. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்து ஒன்றாவது அறிக்கை (2001-2003)

111. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்து இரண்டாவது அறிக்கை (2001-2003)

112. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை (2001-2003)

113. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை (2001-2003)



## இணைப்பு

[illegible]

**மானியக் கோரிக்கை எண்** [illegible]

**வணிக வரித் துறை**

**வணிக வரிகள்** [illegible]

**கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004**

185073

### 1. முன்னுரை

[illegible] (Value Added Tax) [illegible]

### 1.2. வணிக வரித் துறையினரின் நோக்கங்கள் [illegible]

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]
5. [illegible]

[2003 ஏப்ரல் 30

6. தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935

7. தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம், 1981

8. தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகனங்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்புச் சட்டம், 1990

9. தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டம், 1983

10. தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்புச் சட்டம், 2001

## 2. துறையின் அமைப்பும், செயல்பாடுகளும்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள், களப் பணி அளவில், துறைத் தலைவராக உள்ள வணிக வரி ஆணையரால் நடைமுறைப்படுத்தப்பட்டும், நிருவகிக்கப்பட்டும் வருகிறது. தலைமையகத்தில், பல்வேறு பிரிவுகளின் பொறுப்பிலுள்ள இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் கொண்ட ஒரு குழு அவருக்கு உதவுகிறது. களப் பணி அளவில், இத்துறை 10 வரி விதிப்புக் கோட்டங்கள் மற்றும் ஓர் இடை மாநிலப் புலனாய்வுக் குழுவை உள்ளடக்கிய 8 செயலாக்கக் கோட்டங்களையும் கொண்டுள்ளது.

### 2.1. வரி விதிப்புப் பிரிவு

பல்வேறு சட்டங்களின்கீழ் செலுத்தத்தக்க வரிகளின் நிர்ணயம், விதிப்பு மற்றும் வசூல் பணிகளை வரி விதிப்புப் பிரிவு செய்து வருகிறது. இப்பிரிவு 10 வணிக வரிக் கோட்டங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு கோட்டமும் ஒரு துணை ஆணையர் தலைமையில் செயல்பட்டு வருகின்றது. இக்கோட்டங்கள், மேலும் 40 வணிக வரி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள வணிக வரி மாவட்டங்கள், மண்டலங்கள் என அழைக்கப்படுகின்றன. மொத்தத்தில், உதவி ஆணையர் தலைமையில் இயங்கி வரும் 6 விரைவு வழி வரி விதிப்பு வட்டங்கள் (4 சென்னையிலும், 2 கோயம்புத்தூரிலும்) உள்ளிட்ட, 323 வரி விதிப்பு வட்டங்கள் உள்ளன. இவற்றில் 234 வரி விதிப்பு வட்டங்கள் வணிக வரி அலுவலர் தலைமையிலும், 83 வரி விதிப்பு வட்டங்கள் துணை



2003 ஏப்ரல் 30]

வணிக வரி அலுவலர் தலைமையிலும், 6 வரி விதிப்பு வட்டங்கள் உதவி ஆணையர் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன.

### 2.2. தணிக்கைப் பிரிவு

வரி விதிப்பு மற்றும் வரி வசூல் போன்றவை சரியான முறையில் உள்ளனவா என்பதை உறுதி செய்ய இத்துறையில் தணிக்கைப் பிரிவு ஒன்று உள்ளது. இப்பிரிவு, 40 உள்ளீட்டுத் தணிக்கைக் குழுக்களைக் கொண்டு உள்ளீட்டுத் தணிக்கைப் பணிகளை மேற்கொள்கிறது. மாநிலக் கணக்காயரின் தணிக்கைக் குழுவினரால் மேற்கொள்ளப்படும் தணிக்கை தவிர, இந்த உள்ளீட்டுத் தணிக்கைப் பிரிவும் தணிக்கைப் பணிகளை மேற்கொள்கிறது. வரி விதிப்பு தொடர்பான பதிவுகள் அனைத்தும் உள்ளீட்டுத் தணிக்கை மற்றும் மாநிலக் கணக்காயர் தணிக்கை மூலம் தணிக்கை செய்யப்படுகின்றன. உள்ளீட்டுத் தணிக்கை மற்றும் மாநிலக் தணிக்கை கணக்காயர் தணிக்கைக் குழுவின் அறிக்கைகள் மீதான தொடர் நடவடிக்கையினைக் கண்காணிக்க, ஒரு தனிப் பிரிவு, வணிக வரி ஆணையர் அலுவலகத்திலுள்ள இணை ஆணையர் (தணிக்கை) அவர்களின் கண்காணிப்பின்கீழ் செயல்பட்டு வருகிறது.

2002-2003 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2003 முடிய), தணிக்கைப் பிரிவின் பணித் திறன் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது:

| | 2002-2003 (பிப்ரவரி 2003 முடிய) | | |
|---|---|---|---|
| | பழையன | புதியன | மொத்தம் |
| I. உள்ளீட்டுத் தணிக்கைக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளின் எண்ணிக்கை | 32,604 | 35,513 | 68,117 |
| நிவர்த்தி செய்யப்பட்ட குறைகளின் எண்ணிக்கை | 18,435 | 13,585 | 32,020 |
| II. மாநிலக் கணக்காயரின் தணிக்கைக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட பத்திகளின் எண்ணிக்கை | 14,758 | 3,059 | 17,817 |
| நிவர்த்தி செய்யப்பட்ட பத்திகளின் எண்ணிக்கை | 1,812 | 250 | 2,062 |

## 2.3. செயலாக்கப் பிரிவு

எந்த ஒரு வரி நிருவாகத்திலும், செயலாக்கப் பிரிவின் பங்கு மிக முக்கியமானதாகும். இப்பிரிவு வரி வருவாயினைத் தருப்பது மட்டுமல்லாமல் அச்செயலுக்கு ஊர் அச்சுறுத்தலாகவும் உள்ளது. இப்பிரிவு, ஓர் இணை ஆணையர் மற்றும் 6 துணை ஆணையர்களின் தலைமையில் 7 பிரிவுகளாகச் செயல்படுகின்றது. இவர்கள் தவிர, 10 உதவி ஆணையர்கள் மற்றும் 15 வணிக வரி அலுவலர்கள் உள்ளனர். [illegible]

[illegible]

[illegible] (extracts) [illegible] 2002-2003 [illegible]

[illegible]

[illegible] 2002-2003 [illegible]



2003 ஏப்ரல் 30]

| வ. எண் | [illegible] | [illegible] |
|---|---|---|
| 1 | [illegible] (Hosiery goods) | [illegible] |
| 2 | [illegible] | [illegible] |
| 3 | [illegible] | 1.18 |
| 4 | [illegible] | [illegible] |
| 5 | [illegible] | [illegible] |
| 6 | [illegible] | [illegible] |
| 7 | [illegible] | 118.[illegible] |

[illegible]

[illegible]

[2003 ஏப்ரல் 30

## 3. மேல் முறையீட்டுக் கட்டமைப்பு

### 3.1. முதல் மேல் முறையீட்டு அதிகார அமைப்பு

மேல் முறையீட்டுப் பிரிவு, விற்பனை வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயத் தலைவரின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 20 மேல் முறையீட்டு உதவி ஆணையர்களும், சென்னை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு துணை ஆணையர் (மேல் முறையீடு) வீதம் 2 துணை ஆணையர்களும் உள்ளனர். 2002-2003 ஆம் ஆண்டு தீர்வு செய்யப்பட்ட மேல் முறையீடுகள் (பிப்ரவரி 2003 வரை) 7,649 ஆகும்.

### 3.2. விற்பனை வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம்

விற்பனை வரி மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம், மேல் முறையீட்டு உதவி ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்கள் (மேல் முறையீடு) ஆகியோரின் தீர்ப்புகளின்மீது எழும் மேல் முறையீடுகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குகிறது. இத்தீர்ப்பாயத்தில் 4 விற்பனை வரி நடுவர் ஆயங்கள் செயல்பட்டு வருகின்றன. முதன்மை ஆயம் மற்றும் ஒரு கூடுதல் ஆயம் சென்னையிலும், மற்ற 2 கூடுதல் ஆயங்கள் கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலும் உள்ளன.

சென்னையில் உள்ள முதன்மை ஆயத்திற்கு, மாவட்ட நீதிபதி பதவித் தரத்தில் உள்ள நீதிபதி தீர்ப்பாயத் தலைவராக உள்ளார். அந்த ஆயத்தில் இணை ஆணையர் தரத்தில் ஒரு துறை உறுப்பினரும், இந்தியத் தணிக்கை மற்றும் கணக்கியல் பணியைச் சார்ந்த ஒருவர் இரண்டாவது உறுப்பினராகவும் உள்ளனர். கூடுதல் ஆயங்கள் ஒவ்வொன்றும் சார்நிலை நீதிபதி பதவித் தரத்தில் உள்ள கூடுதல் நீதிமன்றம் சார்ந்த உறுப்பினர் ஒருவரையும், வணிக வரி துணை ஆணையர் நிலையில் கூடுதல் துறை உறுப்பினர் ஒருவரையும் கொண்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டில் இத்தீர்ப்பாயத்தினால் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (பிப்ரவரி 2003 முடிய) 2,908 ஆகும்.

### 3.3. தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம்

தமிழ்நாடு வரி விதிப்பு சிறப்புத் தீர்ப்பாயம் ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியைத் தலைவராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.



2003 ஏப்ரல் 30]

சிறப்புத் தீர்ப்பாயம் சென்னையில் அமைந்துள்ளது. இத்தீர்ப்பாயத்தில் தலைவர், உப தலைவர், நீதிமன்றம் சார்ந்த உறுப்பினர் ஒருவர் மற்றும் நிருவாக உறுப்பினர் ஒருவர் ஆகியோர் உள்ளனர். 2002-2003 ஆம் ஆண்டில் (பிப்ரவரி 2003 முடிய) இத்தீர்ப்பாயத்தினால் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் | 1,578 |
| தீர்வு செய்யப்பட்டவை | 994 |

## 4. வணிக வரிப் பணியாளர்கள் பயிற்சி மையம், சென்னை

திறமையான வரி நிருவாகத்திற்குத் துறை அலுவலர்களைப் பயிற்றுவிப்பது ஓர் இன்றியமையாத தேவையாகும். துறையின் பயிற்சித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வணிக வரிப் பணியாளர் பயிற்சி மையம், 1982 முதல் சென்னையில் இயங்கி வருகிறது. இப்பயிற்சி மையம், ஒரு துணை ஆணையர் தலைமையில், இரண்டு உதவி ஆணையர்கள் மற்றும் ஒரு வணிக வரி அலுவலருடன் ஆசிரியர் குழுவாக இயங்கி வருகின்றது. இந்தப் பயிற்சி மையத்தில், நினைவுகூர் பயிற்சியும், சிறப்பு விரிவுரையாளர்களைக் கொண்டு வரி நிருவாகம் குறித்த பயிற்சியும், கணினிப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. கணினிப் பயிற்சி, புள்ளிவிவரத் துறை உதவி இயக்குநரின் தலைமையில் அளிக்கப்படுகிறது. வணிக வரித் துறை அலுவலர்கள் மற்றும் வணிகர்களுக்கு மதிப்புக் கூட்டு வரி குறித்த பயிற்சியை அளிக்கும் நோக்கத்தோடு பதினோராம் நிதி ஆணையத்தின் மானிய ஒதுக்கீட்டிலிருந்து ரூ.50.00 இலட்சம் செலவினமாக ஒப்பளிக்கப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டு வரி குறித்த பயிற்சியும் இப்பயிற்சி நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி மையத்தின் செயல்பாடு கீழ்வருமாறு:—

| பயிற்சித் திட்டத்தின் பெயர் | பயிற்சிகளின் எண்ணிக்கை | | பயிற்சி அளிக்கப்பட்ட அலுவலர்கள் | 2001-2002 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப் பட்ட அலுவலர் களின் எண் ணிக்கை | 2002-2003 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப் பட்ட அலுவலர் களின் எண் ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | ஆண்டு | எண் ணிக்கை | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| பணியிடைப் பயிற்சி | 2001-02 | 9 | வணிக வரி அலுவலர் | 77 | 57 |
| | 2002-03 | 10 | துணை வணிக வரி அலுவலர் | 59 | 154 |
| | | | உதவி வணிக வரி அலுவலர் | 76 | 59 |
| கணினிப் பயிற்சி | 2001-02 | 23 | வணிக வரி அலுவலர் | 83 | 22 |
| | | | துணை வணிக வரி அலுவலர் | 82 | 64 |
| | 2002-03 | 18 | உதவி வணிக வரி அலுவலர் | 85 | 46 |
| | | | உதவியாளர் கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் | 170 | 164 |

| | பிரிவு | 2001-2002 | 2002-2003 |
|---|---|---|---|
| மதிப்புக் கூட்டு வரி பயிற்சி | அலுவலர்கள் | 114 | 2290 |
| | வணிகர்கள் | 61 | 860 |





### 5. வருவாய் வசூல் நிலவரம்

5.1. 2002-2003 ஆம் ஆண்டு வருவாய் வசூல் மிகவும் பாராட்டத்தக்கதாக உள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.8904.68 கோடியாக இருந்த வரி வசூல் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.10,200 கோடியாக, 14.55 விழுக்காடு வளர்ச்சியைக் காட்டியுள்ளது. இத்துறை சம்பந்தப்பட்ட அனைத்துச் சட்டங்களின்கீழ் வசூலிக்கப்பட்ட வரி வருவாயின் விவரங்கள் (ஆண்டு வாரியாக) பின்வருமாறு:—

| வ. எண் | சட்டம் | வரி வருவாய் வசூல் (ரூபாய் கோடியில்) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 1998-1999 | 1999-2000 | 2000-2001 | 2001-2002 | 2002-2003 |
| 1. | தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம். 1959 | 5455 | 6185 | 7354 | 7541 | 8507 |
| 2. | மத்திய விற்பனை வரிச் சட்டம், 1956 | 779 | 813 | 862 | 904 | 982 |
| 3. | தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 | 91 | 86 | 74 | 68 | 71 |
| 4. | தமிழ்நாடு பந்தய வரிச் சட்டம், 1935 | 5 | 5 | 6 | 6 | 5 |
| 5. | தமிழ்நாடு ஆடம்பர வசதிகள் மீதான வரிச் சட்டம், 1981 | 69 | 71 | 92 | 89 | 82 |
| 6. | தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் மோட்டார் வாகனங்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்புச் சட்டம் 1990 | 183 | 221 | 276 | 297 | 324 |
| 7. | தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்புச் சட்டம், 2001 | 1-12-2001 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது | | | 45 | 229 |

### 5.2. வரி நிலுவைகளைக் குறைக்க எடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கைகள்

வரி நிலுவைகளைக் குறைப்பதற்கான சிறப்பு முயற்சிகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்பது கடந்த ஆண்டு வரவு-செலவுக் கூட்டத்

தொடரின் அறிவிப்புகளில் ஒன்றாகும். அவ்வண்ணமே, வரி நிலுவைகள் மேன்மேலும் அதிகரிப்பதைத் தடுப்பதற்காகப் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:—

(i) ***சமாதானத் திட்டம்:*** *2002 ஆம் ஆண்டின் இத்திட்டம், தமிழ்நாடு விற்பனை வரி (பூசல்களைத் தீர்வு செய்தல்) சட்டம், 2002, 1-7-2002 முதல் மூன்று மாதங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னர் மேலும் ஒரு மாதத்திற்கு, 31-10-2002 வரை நீட்டிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் நிலுவையாக இருந்த வரித் தொகையில் ரூ.10.34 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.*

(ii) **தீர்வாணையம்:** குறிப்பிட்ட ஒரு சில பிரிவுகளைச் சார்ந்த வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைகளைத் தீர்வு செய்வதற்காக விற்பனை வரித் தீர்வாணையம் (Sales Tax Settlement Commission) என்னும் ஓர் அமைப்பினை ஏற்படுத்த தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டப் பிரிவு 39-ன்கீழ் திருத்தம் ஒன்றினை சமீபத்தில் அரசு வெளியிட்டுள்ளது. தற்போது தலைவர் மற்றும் உறுப்பினரின் நியமனத்திற்கான தகுதியினை நிர்ணயிக்கும் பொருட்டு அரசால் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளின்கீழ் 34-A என்னும் ஒரு புதிய விதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆணையத்தினை உருவாக்கிய பின், வரி நிலுவைகள் மேலும் குறையும்.

(iii) ***தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959, பிரிவு 16(டி)-ன்படி அமைக்கப்பட்ட சிறப்புக் குழு:*** *அரசுச் செயலர், நிதித் துறை அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அலுவலர், அரசுச் செயலர், வணிக வரித் துறை மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் ஆகியோர் உள்ளடங்கிய சிறப்புக் குழு அமைத்திட சட்ட எண் 22/2002-ன்படி தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959-ல் பிரிவு 16(டி) அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959, சட்டப் பிரிவு 12(2) அல்லது 12(3) அல்லது 16(1) அல்லது 16 (2)-ன்கீழ் வரி விதிப்பு அலுவலர்களால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை இக்குழு ஆய்வு செய்யும். அதன்படி அரசாணை எண் 98, வணிக வரித் துறை, நாள் 16-8-2002-ல் ஒரு சிறப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலான தீர்ப்புரை (Best of Judgement)-ன் அடிப்படையில் வரி விதிப்பு அலுவலரால் வெளியிடப்பட்ட ஆணைகளை இக்குழு மறு ஆய்வு செய்வதால் வழக்குகள் மற்றும் குவிந்துள்ள நிலுவைத் தொகைகள் குறையுமென எதிர்பார்க்கப்படுகிறது.*



(iv) **மேலும், சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் மற்றும் இணை ஆணையர்களால் இந்த வரி நிலுவை நேர்வுகளை ஆய்ந்தறிய ஒரு செயல் முறைத் திட்டம் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது.**

(v) **ஆதார நிலையிலேயே வரிப் பிடித்தம் செய்யும் மையம் உருவாக்கல்:** ஆதார நிலையிலேயே வரிப் பிடித்தம் செய்யும் மையம் அமைப்பதற்கான ஆணைகள் 14-1-2003 அன்று அரசினால் வெளியிடப்பட்டன.

இம்மையம் கீழ்க்கண்ட செயல்பாடுகளை மேற்கொள்ளும்:—

(i) 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், பிரிவு 7-Fன்கீழ் ஆதார நிலையிலேயே வரிப் பிடித்தம் செய்தல் (பணி ஒப்பந்தத்தின்போது ஆதார நிலையிலேயே வரிப் பிடித்தம் செய்வது குறித்த பிரிவு):

(ii) மேற்கண்ட தொகைகளைப் பெறுவது; உரிய சான்றிதழ்கள் வழங்குவது; அத்தொகையை வங்கியில் செலுத்துவது; மற்றும்

(iii) மேற்கூறிய வரவினங்களை சம்பந்தப்பட்ட பணி ஒப்பந்தக்காரர்கள், எந்த வரி விதிப்பு அலுவலர்களின் ஆளுகையின்கீழ் வருகிறார்களோ, அந்த வரி விதிப்பு அலுவலர்களுக்கு மாற்றுவது.

இம்மையம் ஆதார நிலையிலேயே வரிப் பிடித்தம் செய்யும் ஒரு மத்திய மையமாக சென்னையில் இயங்கும். இந்த மையம் தன்னுடைய செயல்பாடுகளை விரைவில் தொடங்க உள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளால் விற்பனை வரி நிலுவை பெரிய அளவில் குறையும்.

**6. வணிக வரித் துறையின் வருவாய் மற்றும் செலவினங்கள்**

கடந்த ஐந்து ஆண்டுகளில் வசூலிக்கப்பட்ட வருவாய் மற்றும் துறையினால் செய்யப்பட்ட செலவின விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| வருடம் | வருவாய் செலவினம் (ரூபாய் கோடியில்) | |
|---|---|---|
| *1998-99* | *6583* | *92.42* |
| *1999-2000* | *7381* | *99.76* |
| *2000-2001* | *8664* | *98.57* |
| *2001-2002* | *8905* | *94.23* |
| *2002-2003* | *10200* | *84.94* |

**7. மதிப்புக் கூட்டு வரி**

மதிப்புக் கூட்டு வரி என்பது ஒரு வித்தியாசமான முறையில் வரிக் கணக்கீடு செய்யப்படும் ஒரு விற்பனை வரி. இந்த வரி முறையில் ஒரு பொருளின் அனைத்து விற்பனை முனைகளிலும், அப்பொருளின் கூட்டப்பட்ட மதிப்பின்மீது வரி விதிக்கப்பட வகை செய்கிறது. இந்த முறையில் பொருட்களின்மீது ஒரு விற்பனை முனையில் விற்பனையின்போது செலுத்தப்பட வேண்டிய வரியானது, அப்பொருளை, முன்னர் அந்த வணிகர் வாங்கும்போது அவரால் ஏற்கெனவே செலுத்தப்பட்டுவிட்ட வரித் தொகை அளவிற்குத் தற்போது குறையும்.

மதிப்புக் கூட்டு வரியினை அறிமுகம் செய்ய மத்திய அரசு *1993-1994* ஆம் ஆண்டிலேயே நடவடிக்கையினைத் தொடங்கியது. *1993-94* ஆம் ஆண்டின் மத்திய நிதிநிலை அறிக்கையினை *27-2-1993* அன்று தாக்கல் செய்தபோது அப்போதைய மத்திய நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் "மதிப்புக் கூட்டு வரி முறையினை நோக்கிச் செல்வதே நம்முடைய நீண்ட காலக் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்" என்று கூறியிருந்தார். மதிப்புக் கூட்டு வரி குறித்து விவாதிக்கவும், கலந்துரையாடவும் புது டில்லியிலுள்ள தேசிய பொது நிதி மற்றும் கொள்கை நிறுவனத்தை மதிப்புக் கூட்டு வரி முறையினை வடிவமைக்கும்படி அப்போதைய



மத்திய நிதியமைச்சர் கேட்டுக்கொண்டார். *1994-95* ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையினை *28-2-1994* அன்று தாக்கல் செய்தபோது மீண்டும், அப்போதைய மத்திய நிதியமைச்சர், மத்திய ஆயத்தீர்வைக் கட்டமைப்பில் மாறுதல் செய்து சில வரிச் சீரமைப்பினை அறிவித்தபோது, "இச்சீரமைப்பு இறுதியில் மதிப்புக் கூட்டு வரியினை ஏற்றுக்கொள்ள வழிவகுக்கும்" என்று அறிவித்தார்.

*1999* ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில், அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும் *1-4-2001* முதல் மதிப்புக் கூட்டு வரியினை நடைமுறைப்படுத்த ஒப்புக்கொண்டன. மேலும், இம்மாநாட்டில் நாடு முழுவதும் உள்ள விற்பனை வரித் திட்டத்திலுள்ள சீரற்ற தன்மைகளை நீக்குவதற்காக *1-1-2000* முதல் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும் சமச்சீர் தள வரி விதிப்பினை நடைமுறைப்படுத்தவும், தொழிற்சாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள விற்பனை வரி அடிப்படையிலான ஊக்குவிப்புகளை நிறுத்திடவும் முடிவு செய்யப்பட்டது. அதன் தொடர்ச்சியாக, மாநில நிதி அமைச்சர்கள் அடங்கிய நிலைக் குழு ஒன்று மத்திய அரசால் அமைக்கப்பட்டு, இம்முடிவுகளைக் கண்காணிக்க அக்குழுவிற்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. சமச்சீர் தள வரி வதிப்பு மற்றும் விற்பனை வரி சார்ந்த ஊக்குவிப்பினைத் திரும்பப் பெறுதல் ஆகியவற்றை மாநில நிதி அமைச்சர்களின் அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் கண்காணிப்பின்கீழ் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும் நடைமுறைப்படுத்தினாலும், மதிப்புக் கூட்டு வரியினைச் செயல்படுத்த அதிகப்படியான ஆயத்தப் பணிகள் மேற்கொள்ள வேண்டியிருந்ததால், *1-4-2001* முதல் அதனை நடைமுறைப்படுத்த இயலவில்லை.

முன்பே, தமிழ்நாட்டில் ஆண்டு விற்பனைத் தொகை ரூ.*75* இலட்சத்திற்கும் அதிகமுள்ள வணிகர்களுக்கு மதிப்புக் கூட்டு வரியினை அறிமுகம் செய்ய *1996* ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்காக *1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில், சட்டம் *38/1996* மூலம் 3C என்னும் புதிய பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், புதிய வரியினை நடைமுறைப்படுத்த போதிய ஆயத்தப் பணிகள் முடிவுறாத காரணத்தால் இச்சட்டப் பிரிவு நடைமுறைப்படுத்தப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டது.

தேசிய அளவில் நடைபெற்ற நீண்ட விவாதங்களுக்குப்பின், அனைத்து மாநிலங்களும், யூனியன் பிரதேசங்களும் 2003-2004 நிதியாண்டிலிருந்து மதிப்புக் கூட்டு வரியை அறிமுகப்படுத்தும் நிலையில் உள்ளன. இத்தகைய ஆயத்த ஏற்பாடுகளில் மத்திய அரசு பங்கேற்றுக்கொண்டு, அதன் தொடக்க முயற்சிக்கு முழுமையான ஆதரவினை அளித்துள்ளது.

மத்திய நிதியமைச்சர் திரு. ஜஸ்வந்த் சிங் அவர்கள் 2003-2004 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், "மாநில அளவில் மதிப்புக் கூட்டு வரியினை அறிமுகப்படுத்துவது கூட்டாட்சி வரி அமைப்பில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க அமைப்பு என்று இந்திய அரசு கருதுகிறது. புதிய வரி முறை அமைப்பிலிருந்து தற்போது 120-க்கும் மேற்பட்ட நாடுகளில் பயன்பாட்டில் உள்ள ஒரு நவீன கூட்டாட்சி விற்பனை வரி அமைப்பிற்கு மாநிலங்கள் வெற்றிகரமாக மாறுவதற்கு இது உதவியாக அமையும்" எனத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு [illegible] அனைத்து மாநிலங்களும் வற்புறுத்தியதால், முதலாண்டில் 100 விழுக்காடு அளவிற்கும், இரண்டாம் ஆண்டில் 75 விழுக்காடு அளவிற்கும் மற்றும் மூன்றாம் ஆண்டு 50 விழுக்காடு அளவிற்கும் வருவாய் இழப்பை ஈடு செய்வதற்கு மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

மாநில நிதியமைச்சர்கள் அடங்கிய அதிகாரமளிக்கப்பட்ட குழு, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மதிப்புக் கூட்டு வரியினை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணித்து வருகிறது. [illegible] குழு அளித்த மாதிரி மதிப்புக் கூட்டு வரிச் சட்ட முன்வடிவின் அடிப்படையில், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்ட முன்வடிவு தயாரிக்கப்பட்டு, அது தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டு, [illegible] 130-க்கு அதிகமான [illegible] மதிப்புக் கூட்டு வரிச் சட்ட முன்வடிவினை நடத்து [illegible] மத்திய அரசு 24-3-2003 அன்று [illegible] ஒப்புதலைப் பெற்றது. இவ்வாறாக [illegible] சட்ட முன்வடிவு, தமிழ்நாடு சட்டப் பேரவையில் [illegible] அறிமுகப்படுத்தப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது.





**8. 2003-2004 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வரி விகித மாற்றங்கள்**

**8.1. தமிழ்நாடு பொது விற்பனை வரி**

தமிழ்நாடு பொது விற்பனை வரி விகிதங்கள் [illegible] மதிப்புக் கூட்டு வரி [illegible] வேண்டிய வரியும், மதிப்புக் கூட்டு வரி [illegible] பின்வருமாறு வரி விகிதங்கள் மாற்றியமைக்கப்படுகின்றன.

| பொருள் | முந்தைய வரி விகிதம் [illegible] | திருத்திய வரி விகிதம் 21-4-2003 முதல் |
|---|---|---|
| வாகனங்கள் [illegible] | [illegible] | [illegible] |
| வாகனங்கள் [illegible] இதர [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] | [illegible] |

1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு [illegible] விற்பனை வரிச் சட்டத்தின் [illegible] (DA) [illegible] மேலும் மத்திய முடிவாக [illegible]

[2003 ஏப்ரல் 30

| வ. எண் | சரக்கு/பண்டம் | வரி விகிதம் | வரி விதிப்பு முனை |
|---|---|---|---|
| 1. | தொலைபேசிகள் மற்றும் செல்லுமிடத் தொலைபேசிகள் | 12.5% | முதல் விற்பனை |
| 2 | சலவை இயந்திரங்கள் | 12.5% | முதல் விற்பனை |

ஆயினும், செல்லுமிடத் தொலைபேசிகள் மீதான வரி விகிதம், அறிவிக்கைகள் மூலம் குறைக்கப்பட்ட 4 விழுக்காடாகவே தொடர்கிறது.

### 8.2. நுழைவு வரி

பின்வரும் இனங்களில் ஏற்படும் வரி ஏய்ப்பினைத் தடுக்கும் பொருட்டு, 21-3-2003 முதல் அவற்றின்மீது நுழைவு வரி விதிக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1. | அனைத்து வடிவங்களிலான குறைந்த அழுத்த பாலி எத்திலின் மற்றும் பாலிபுரொப்பைலின் மணிகள், நாடாக்கள் மற்றும் கழிவுகள் உட்பட | 4% |
| 2. | சலவை இயந்திரங்கள் | 12.5% |

### 8.3. கம்பிவடத் தொலைக்காட்சி

கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்புத் தருபவர்கள்மீது இணக்க முறை அடிப்படையாகக் கேளிக்கை வரி விதித்து, வசூலிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்புத் தருபவர்களால் செலுத்தத்தக்க கேளிக்கை வரி பின்வருமாறு இருக்கும்:—

| பகுதி | கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்புத் தரும் நபர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கான இணக்க வரி விகிதம் (ரூபாய்) |
|---|---|
| அ. கிராம ஊராட்சிகள் | 12,000 |
| ஆ. பேரூராட்சிகள் | 18,000 |
| இ. நகராட்சிகள் | 36,000 |
| ஈ. மாநகராட்சிகள் | 72,000 |



2003 ஏப்ரல் 30]

கம்பிவடத் தொலைக்காட்சி இணைப்புத் தருபவர்கள் செலுத்த வேண்டிய காப்புத் தொகை ரூபாய் 10,000-லிருந்து நகராட்சி, மாநகராட்சி எல்லைக்குட்பட்டவர்களுக்கு ரூ.5,000 ஆகவும், இதர இடங்களில் உள்ளவர்களுக்கு ரூ.2,500 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்காக, 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் வகைமுறைகளுக்குத் திருத்தம் கொண்டு வருவதற்கான ஒரு சட்டமுன்வடிவு நடப்பு சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே அறிமுகப்படுத்தப்படும்.

## 9 துறையின் இதர சிறப்பு அம்சங்கள்

### 9.1. 2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்.

2003-2004 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், பகுதி II-ன்கீழ் கீழ்க்காணும் புதிய திட்டங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன:

| | திட்டத்தின் பெயர் (1) | திட்டத்தின் மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) (2) |
|---|---|---|
| 1. | கடலூரில் உள்ள வணிக வரி உதவி ஆணையர் (வணிக வரி) அலுவலகக் கட்டடத்தில் கூடுதலாக தளம் மற்றும் [illegible] | 31.42 |
| 2. | சேலம் வணிக வரிப் பணியாளர்கள் குடியிருப்பில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு தோண்டுதல். | 1.00 |
| 3. | துணை ஆணையர்கள் (வேலூர், திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி) அலுவலகங்களுக்கு நகல் எடுக்கும் இயந்திரம் வழங்குதல். | 1.20 |
| 4. | திருச்சி ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் அலுவலகத்திற்கு உயர் அழுத்த நகல் எடுக்கும் இயந்திரம் வாங்குதல். | 1.00 |
| 5. | கோவை வணிக வரி அலுவலகக் கட்டடங்களில் மின் வெள்ள விளக்குகள் பொருத்துதல். | 0.60 |

| | (1) | (2) |
|---|---|---|
| 6. | வணிக வரித் துறையில் உள்ள பல்வேறு அலுவலகங்களில் கழிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக 14 வாகனங்கள் வாங்குதல். | 42.78 |
| 7. | வணிக வரித் துறையில் உள்ள அலுவலகங்களில் கழிவு நீக்கம் செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக 20 வாகனங்கள் வாங்குதல். | 81.92 |
| 8. | வணிக வரித் துறையில் தொலைபேசி வசதி இல்லாத 9 சோதனைச் சாவடிகளுக்குத் தொலைபேசி இணைப்பு வழங்குதல். | 2.57 |
| | மொத்தம் | 153.29 |

## 9.2. வணிக வரித் துறையைக் கணினிமயமாக்குதல்

துறையின் முதல் கட்ட கணினிமயமாக்குதலின்பொழுது, 140 வரிவிதிப்பு வட்டங்கள், 18 மண்டல அலுவலகங்கள், 5 கோட்ட அலுவலகங்கள் (வரிவிதிப்புப் பிரிவுகளில்), 6 பெரிய எல்லையோர சோதனைச் சாவடிகள், கணிப்பொறி மையம், வணிக வரிப் பணியாளர் பயிற்சி நிலையம், சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் அலுவலகம் மற்றும் தலைமைச் செயலகம் ஆகிய அலுவலகங்களுக்குக் கணிப்பொறிகள் வழங்கப்பட்டன. வணிகர்களின் பதிவுகள், மாதாந்திர விற்பனை வரி நமூனாக்கள், Demand Collection Balance (DCB), அறிக்கை தயாரித்தல், பண்டங்களின் வருவாய் மற்றும் வாகனங்களின் இடப்பெயர்ச்சி விவரம் ஆகிய தகவல்களை வரி விதிப்பு வட்டங்கள் மற்றும் சோதனைச் சாவடிகளில் கணிப்பொறியில் பதிய வைக்க "தேசிய தகவல் மையம்" ஒரு மென்பொருளை உருவாக்கி உள்ளது. இத்துடன் சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் அலுவலகத்துடனும், மற்றவர்களுடனும் மின்னஞ்சல் வசதி பெற்று தொடர்புகொள்ளும் வகையிலும், தன் கட்டுப்பாட்டின்கீழ் பணியாற்றும் சார்நிலைப் பணியாளர்ளைக் கண்காணிக்கவும் அனைத்து வரி விதிப்புக் கோட்டத் துணை ஆணையர் ஒவ்வொருவருக்கும் ஒரு கணிப்பொறி வழங்கப்பட்டுள்ளது.

*2002-2003* ஆம் ஆண்டு இரண்டாம் மற்றும் இறுதிக் கட்ட கணினிமயமாக்குதலின்பொழுது வணிக வரித் துறையின் முழுமையான கணினிமயமாக்குதலுக்காக கணிப்பொறிகள் மற்றும் கணிப்பொறி சார்ந்த பொருள்களை வாங்குவதற்காகவும், ஆலோசனைக் கட்டணம் போன்றவற்றிற்காகவும் பதினோராம் நிதி ஆணையத்தின்



மானியத்திலிருந்து ரூ.10.22 கோடிக்கு அரசால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. Pallavan Transport Consultancy Services Limited நிறுவனம் ஆயத்த தகவல் அளிப்பு (Turn key basis) அடிப்படையில் உதவிட நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வலைத் தளத்திற்கு மட்டுமின்றி, வரி விதிப்பு மேல்முறையீடு மற்றும் செயலாக்கப் பிரிவுகளில், மதிப்புக் கூட்டு வரி விதிப்பு முறைக்குத் தேவையான மென்பொருள் மேம்பாடு உட்பட மாநில கணினிமயமாக்குதலுக்கான திட்டத்திற்கும் அவர்கள் வழிகாட்டி வருகின்றனர். இந்தத் திட்டத்தில், எஞ்சியுள்ள 183 வரி விதிப்பு வட்டங்கள், 22 மண்டல அலுவலகங்கள், வரி விதிப்புப் பிரிவில் உள்ள 5 கோட்ட அலுவலகங்கள், 28 மண்டல அலுவலகங்கள், செயலாக்கப் பிரிவிலுள்ள 23 சோதனைச் சாவடிகள், 8 கோட்ட அலுவலகங்கள், விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்திலுள்ள 4 மாநிலப் பிரதிநிதிகளின் அலுவலகங்கள், 2 துணை ஆணையர் (மேல்முறையீடு) அலுவலகங்கள், மேல்முறையீட்டுப் பிரிவிலுள்ள 20 மேல்முறையீட்டு உதவி ஆணையர் அலுவலகங்கள் ஆகிய அலுவலகங்கள், மேலும் சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் அலுவலகத்தில் உள்ள தணிக்கைப் பிரிவு, சட்டங்கள் பிரிவு, வரைவுப் பிரிவு, பொது மக்கள் தொடர்பு, சட்டமுறை மற்றும் நிர்வாகப் பிரிவுகள் (அப்பிரிவுகளின் பயன்பாட்டிற்கு 25 கணிப்பொறிகள்) உள்ளிட்ட இம்மாநிலத்திலுள்ள இத்துறை முழுவதும் இத்திட்டத்தின்கீழ் கணினி வசதி செய்யப்படவுள்ளது. அதிக அளவில் வரி வசூலாகும் வரி விதிப்பு வட்டங்களை வலுவூட்டும் வகையிலும், அவற்றின் விரைவான மற்றும் திறமையான நிருவாகத்திற்காகவும், அவ்வட்டங்களுக்குக் கூடுதலாகக் கணிப்பொறிகள் வழங்கப்படும்.

சோதனைச் சாவடிகள் உட்பட அனைத்துப் பிரிவுகளும் ஒரு மைய தகவல் கணிப்பொறியுடன் (Central Server) இணைக்கப்படவுள்ளதால் Virtual Private Network மூலம் இணையதளம், தனி வழி (Leased Line), ஐஎஸ்டிஎன். (ISDN) மற்றும் ப்பிஎஸ்டிஎன். (PSTN) போன்ற வசதிகளைப் பயன்படுத்தி ஒவ்வொரு கணிப்பொறியிலிருந்தும் சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் வரையிலான எந்தவொரு கணிப்பொறியுடனும் தொடர்பு கொள்ளலாம். வியாபாரிகளின் தகவல்களைப் பராமரிக்கவும் தகவல் பதிவுகளில் ஏற்படும் தவறுகள் மற்றும் தாமதத்தைக் கட்டுப்படுத்தவும் ஒரு ICR Scanning System பயன்படுத்தப்படும். வரி விதிப்புக் கோட்டத் தலைமையிடங்கள் மற்றும் வரி விதிப்பு வட்டங்கள் வணிக நடவடிக்கைகளின் உண்மைத் தன்மையை கணிப்பொறித் தகவல்களிலிருந்து உறுதிசெய்யும்

(on line) சரிபார்த்துக்கொள்ளவும், உள்ளீடு வரித் தொகைப் பற்றுக் கணக்கைக் (Input Tax Credit) கண்காணிப்பதற்காக வருடல் தாள் (Scanning Sheet) மூலம் வணிகர்களின் கணக்கு அறிக்கையிலிருந்து தேவையான தகவல்களை எடுத்துக்கொள்வதற்கும் இம்முறை பயன்படுவதால் நவீனமயமாக்கலின் சக்தி வாய்ந்த கருவியாக இது அமையும். கணிப்பொறிகளைக் கையாள்வதற்கு ஏற்ற வகையில் பணியாளர் அமைப்பை மறுசீரமைப்பு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கணினிமயமாக்குதல் நிலையில் நேரடித் தொடர்பு மூலம் தகவல் பெறுவதற்கு வசதியாக ஒவ்வொரு முனையிலிருந்தும் பெறப்பட்ட தகவல்கள் மைய கணிப்பொறியில் சேகரித்து வைக்கப்படும். சிறப்பு ஆணையர் மற்றும் வணிக வரி ஆணையர் உள்ளிட்ட நிர்வாக அதிகாரிகள் இத்தகவல்களைக் கண்காணிப்பதுடன் கால முறைப்படி தகவல்களைச் சேர்த்துக்கொள்ளலாம். மாநிலத்திலுள்ள வரி விதிப்புக்குட்படும் வணிகர்களின் பதிவுகள் மற்றும் வருவாய்த் தகவல்களை மைய மேல்நிலைக் கணிப்பொறி (Central High End Server) கட்டுப்படுத்தும் வரி சம்பந்தப்பட்ட தகவல்களைத் துறையின் கணிப்பொறி பயன்படுத்துவோர் எப்பொழுதும் பெறும் வகையில் இது அமையும்.

பொது மக்களுக்குத் தேவைப்படும் தகவல்களைத் தர மின்னஞ்சல் வசதியுடன் துறையில் தற்போது செயல்பட்டு வரும் www.tnsalestax.com என்ற இணையதளம் இன்னும் அதிகத் தகவல்களைப் பெறத்தக்க வகையில் இயங்கும்.

நகல் முறையில் எழுத்துப் பணியைக் குறைக்கும் வகையில் இணைய தளத்தின் மூலம் வணிகர் கணக்கு நமூனாக்கள் மற்றும் சுய வரி விதிப்பு விவரங்களை சமர்ப்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வணிகர்கள் இணையதளத்தைப் பயன்படுத்தி வங்கிகள் மூலமாக நேரடி பணம் செலுத்தும் (Online payment system) திட்டமும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

சென்னையிலுள்ள கணிப்பொறி மையம், தன்னகத்தே உள்ள மைய server, Web server போன்ற server கணிப்பொறிகளைக் கொண்டு ஆணையர் மற்றும் அரசுக்கு ஆண்டு வரவு-செலவுத் திட்டம், மேலாண்மைத் தகவல் தொழில்நுட்பம் போன்றவற்றில் தேவைப்படும் தகவல்களைத் தரத்தக்க வகையிலும், வருவாயினை ஆய்வு செய்யவும் மாநிலம் முழுவதும் உள்ள கணிப்பொறிகளின் செயல்பாடுகளைக் கவனிக்கும் வகையிலும் ஓர் ஒருங்கிணைப்பு முனையமாகச்



(Nodal Agency) செயல்படும். இத்திட்டம் 2003-2004 ஆம் நிதியாண்டிலிருந்து செயல்படத் திட்டமிடப்பட்டுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரில், வணிக வரித் துறையில் ஒருங்கிணைந்த கணினிமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதற்கேற்ப, மேற்கூறிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை விரைவில் செயல்பாட்டிற்கு வரும்.

**வலைதளத்தை நிலை உயர்த்துதல்**

கடந்த வரவு-செலவுக் கூட்டத் தொடரின்போது (2002-2003) செய்யப்பட்ட அறிவிப்புகளில், வணிக வரித் துறையின் வலைதளம் (www.tnsalestax.com) நிலை உயர்த்தப்பட்டு வணிகர் மற்றும் பொது மக்கள் நன்மை பெறும் வகையில் கூடுதல் விவரங்கள் அளிக்கப்படும் என்ற அறிவிப்பும் ஒன்றாகும். அதற்கேற்ப, வரி விகிதங்களில் அனைத்து மாற்றங்கள், அரசால் வெளியிடப்படும் அறிவிக்கைகள் மதிப்புக் கூட்டு வரி வரைவுச் சட்டமுன்வடிவு போன்றவை உடனுக்குடன் வலைதளத்தில் சேர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**9.3. மாநில மற்றும் மாவட்ட நிலையிலான விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள்**

விற்பனை வரி ஆலோசனைக் குழுக்கள் அரசால் மாநில மற்றும் மாவட்ட அளவில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆலோசனைக் குழுக்கள் அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாராத உறுப்பினர்களைக் கொண்டுள்ளன. வணிக வரித் துறை நிருவகிக்கும் சட்டங்களின் வகைமுறைகள் குறித்த விளக்கங்கள் மற்றும் வணிகர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் பொதுவாக அந்தந்தக் குழுக்களில் விவாதிக்கப்படுகிறது.

**9.4. உள்ளாட்சி அமைப்புகளுக்கு உதவி**

உள்ளாட்சி அமைப்புகளின் வருவாய் ஆதாரங்களை மேம்படுத்தும்பொருட்டு, கேளிக்கை வரி வருவாய் மூலம் கிடைக்கும் மொத்த வருவாயில் 60 விழுக்காடு முதல் 70 விழுக்காடு வரை (உள்ளாட்சி அமைப்புகளின் நிலையினைப் பொறுத்து) மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த நிதி ஒதுக்கீடு, 1-4-1997 31-3-1997 வரை பகிர்ந்தளிக்கப்பட்டது.

[2003 ... 30

[illegible]

## 9.5. குறை தீர்க்கும் குழு

[illegible]

## 9.6. ஒருங்கிணைந்த நவீன சோதனைச் சாவடிகள் அமைத்தல்

[illegible]

[illegible] (Requests for proposal) [illegible]

2003 ... 30]

[illegible]

[illegible]

[illegible]

## 10. தமிழ்நாடு வணிகர் நல வாரியம்

[illegible]

[illegible]

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

185073
சென்னை-600 008